இஸ்லாமிய நோக்கில்

# பால்நிலை சமத்துவம் மற்றும் சமநீதி


**தொகுப்பாசிரியர்கள்**

எம். சீ. ரஸ்மின்
ஹஸனாஹ் சேகு இஸ்ஸதீன்

இஸ்லாமிய நோக்கில்

# பால்நிலை சமத்துவம்

# மற்றும் சமநீதி

**தொகுப்பாசிரியர்கள்**

எம். சீ. ரஸ்மின்

ஹஸனாஹ் சேகு இஸ்ஸதீன்

**இஸ்லாமிய நோக்கில்**
**பால்நிலை சமத்துவம் மற்றும் சமநீதி**
ISBN978-955-7765-02-0
**முதற்பதிப்பு**
-2015
**பக்கங்கள்**
-117
**எழுத்துரு அளவு**
-11
**தொகுப்பாசிரியர்கள்**
-எம். சீ. ரஸ்மின்
-ஹஸனாஹ் சேகு இஸ்ஸதீன்
**எழுத்துரு மற்றும் அட்டை வடிவமைப்பு**
-எம். பீ. எம். பைரூஸ்
-மொஹமட் அஸ்வர்
**வெளியீடு**
-இலங்கை அபிவிருத்திக்கான
ஊடகவியலாளர் மன்றம்
0112877007/www.ldjf.org
**அச்சமைப்பு**
-ஏ.ஜே. அச்சகம், தெகிவளை.

---

2014ஆம் ஆண்டு இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் நடத்திய இஸ்லாத்தில் பால்நிலை சமத்துவம் பற்றிய பத்து நாட்கள் வதிவிடச் செயலமர்வின் பின்னணியில் இந்நூல் வெளிவருகின்றது.

# பால்நிலை சமத்துவமும் சமநீதியும்: ஓர் இஸ்லாமிய நோக்கு

மனித உரிமைகள் ஆண் பெண் என்ற வேறுபாடு எதுவுமின்றி அனைவருக்கும் சமமாக உரித்தான வையாகும். சர்வதேச மனித உரிமைகள் பட்டயத்தின் முதலாவது விதி மனிதர்கள் அனைவரும் சுதந்திரமானவர்கள், மற்றும் பிறப்பில் உரிமைகளில் சமத்துவமானவர்கள் எனப் பிரகடனப்படுத்துகிறது. அத்தோடு இன, நிற, பால், மொழி, சமய, அரசியல் கருத்து, தேசியம், சொத்து, பிறப்பு என்ற எந்த ஒரு அடிப்படையிலும் பாகுபாடு காட்டப்படக் கூடாது என்று இரண்டாவது விதி வலியுறுத்துகிறது. இவை எமது அரசியல் அமைப்பிலும் அடிப்படை உரிமைகளாக உள்வாங்கப்பட்டுள்ளன. பெண்களின் சமத்துவத்தை மேலும் உறுதிப்படுத்துவற்காக ஆக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச சமவாயமும் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, குடிமை அல்லது வேறு எந்தத்துறையிலும் ஆணும் பெண்ணும் சமத்துவமானவர்கள் என்கின்றது. பெண்கள் திருமணமாகியிருந்தாலும் திருமணமாகா விட்டாலும் பெண்கள் என்ற ஒரே காரணத்தினால் அவர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது அல்லது பாரபட்சப் படுத்துவது அல்லது அவர்களை விலக்கி வைப்பது பெண்களுக்கு எதிரான பாரபட்சம் என இச்சமவாயம் வரையறை செய்கின்றது.[1]

1 பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை, உறுப்புரை 1

முஸ்லிம்களைப் பொறுத்தளவில் அல்குர்ஆனும், நபிகளாரின் வழிமுறையுமே வாழ்க்கைக்கான பிரதான வழிகாட்டிகளாக் காணப்படுகின்றன. இந்த அல்குர்ஆனும் நபிமொழியும் பெண்களும் ஆண்களைப் போலவே உரிமைகளையும், கடமைகளையும் சமமாக அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கில் எவ்வித சந்தேகமும் அற்ற மிகத் தெளிவான ஆண் பெண் சமத்துவ விதிகளைக் கொண்டுள்ளன.[2] உதாரணமாக ஆணும் பெண்ணும் படைப்பில் சமத்துவமானவர்கள்.[3] யார் நல்ல செயல்களைச் செய்து இறையச்சத்துடன் வாழ்கின்றார்களோ அவர்களே சிறந்தவர்கள்.[4] மாறாக, ஒருவரின் சிறப்பை அவரது பால்நிலை தீர்மானிப்பதில்லை. இருபாலாரதும் இறை நம்பிக்கையைப் பொறுத்து சமமான கூலியும் தண்டனையும் வழங்கப்படுகின்றன.[5] இருவரும் சமத்துவமான ஒழுக்க விழுமியங்களைப் பெற்றுள்ளனர்,[6] வணக்க வழிபாடுகளில் சமத்துவமானவர்கள் என்பதனை அல்குர்ஆன் வலியுறுத்துகின்றது.[7]

பெண்கள் குடும்ப அலகுக்குள் பெரிதும் பாரபட்சப் படுத்தப்படுவதனைத் தடுக்க பெண்கள் சமவாயத்தின் உறுப்புரை 16 ஆனது பெண்களுக்கும் ஆண்களுக்கும் திருமணம் செய்து கொள்ளவும், விருப்பப்படி துணையைத் தேர்ந்தெடுக்கவும், பரஸ்பர சுதந்திரத்துடனும் முழு ஒப்பு தலுடனும் திருமணப் பந்தத்தை உருவாக்கிக் கொள்ளவும், திருமணத்தின் போதும், பிரிவின் போதும் ஒரே மாதிரியான உரிமைகளும், பொறுப்புகளும் காணப்பட வேண்டும் என்கிறது. இவ்வுரிமைகளை இஸ்லாம் மிகத் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளது. திருமணத்தைப் பொறுத்த வரை விருப்பமான துணையை தெரிவு செய்யும் உரிமையை ஆண், பெண் இருபாலாருக்கும் இஸ்லாம் வழங்குகின்றது. இத்தகைய திருமணத்தின் அத்திவாரம் வெறுமனே பாலியல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதன்றி அன்பும் கருணையுமாகும் என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.[8] அதேபோன்று, கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர்

---

2 சவுதி அரேபியா, அரச அறிக்கை, ஐ.நா.சபை, சீடோ/சி/சௌ/2(2007), ப.7

3 அல்குர்ஆன் 2:30

4 அல்குர்ஆன் 16:97

5 அல்குர்ஆன் 74:38, அல்குர்ஆன் 4:124

6 அல்குர்ஆன் 24:30, 31

7 அல்குர்ஆன் 33:35

8 அல்குர்ஆன் 30:21

உற்றதுணையாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது. விவாகரத்துப் பெறும் உரிமையையும் ஆணுக்குப் போலவே பெண்ணுக்கும் இஸ்லாம் வழங்கியுள்ளது.[9]

அதுமட்டுமன்றி பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையானது அரசியல், பொருளாதார, சமூக, கலா சார, உரிமை அல்லது அனைத்து துறைகளிலும் உள்ள வாய்ப்புக்களுக்கும் வளங்களுக்குமான உரிமை ஆண் பெண் இருபாலாருக்கும் உண்டு என்கின்றது. இதனை இஸ்லாம் கல்வியைத் தேடுவது அனைத்து முஸ்லிம்களின் மீதும் கடமையாகும்[10] என்று கல்விக்கான உரிமையையும், இருவருக்கும் பொருளீட்டி, ஆகுமான வழியில் செலவு செய்ய பொருளாதார சுதந்திரத்தையும்[11] இருபாலாரும் சமூக தளங்களில் வேலை செய்ய, அரசியல் தலைமை வகிக்க ஆற்றல் பெற்றிருப்பதை[12] அல்குர்ஆன் எடுத்துக்காட்டி அரசியல் உரிமையையும் உறுதிப்படுத்தியுள்ளது.

பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான பிரகடனத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை களுக்கான வரைவிலக்கணமாக "உடலியல், பாலியல், உளவியல் ரீதியான பாதிப்பையும் வேதனையையும் ஏற்படுத் தக் கூடிய அல்லது ஏற்படுத்தும் மிரட்டல், பலவந்தப்படுத்தல், தன்னிச்சையாக அவர்களது சுயாதீனத்தை மறுத்தல் போன்ற எந்தவகையான பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் செயல்கள், தனிப்பட்ட வாழ்விலோ, பொது வாழ்விலோ நடைபெறல்"[13] என குறிப்பிடப்பட்டுள்ளது. அன்பையும், அமைதியையும் விரும்பும் இஸ்லாமும் இத்தகைய வன்முறையை எதிர்க்கின்றது. மனைவியை அடித்துத் துன்புறுத்தல், நோவினை செய்தல் என்பன இஸ்லாத்தில் முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளன. கணவன் மனைவிக்கிடையே தீர்க்கப்பட முடியாத பிணக்குகள் ஏற்படின் வன்முறையின்றி பிரிந்து செல்லும்படி அல்குர்ஆன் கட்டளையிடுகின்றது.[14]

9 அல்குர்ஆன் 4:35
10 சுனன் இப்னுமாஜா 224
11 அல்குர்ஆன் 4:32
12 அல்குர்ஆன் 27:32, 27:33
13 பிரிவு 1
14 அல்குர்ஆன் 4:34

இந்த வகையில், பாரபட்சம் காட்டப்படாமை, வன்முறைக்கு உட்படுத்தப்படாமை, நீதி சமத்துவம் என்பனவற்றை ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமாகவே இஸ்லாம் உறுதி செய்துள்ள போதும் நடைமுறையில் முஸ்லிம் பெண்கள் இஸ்லாத்தின் பெயரால் மேற்சொன்ன உரிமைகளை அனுபவிக்க முடியாத பாதகமான சூழ்நிலை பலவந்தமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமூகத்தில் உள்ள அதிகார இடைவெளி, பெண்கள் சமத்துவமற்றவர்கள் என்ற பிழையான நம்பிக்கை, இஸ்லாத்தின் பால்நிலை சமத்துவம் பற்றிய தெளிவின்மை, தவறான பொருள்கோடல்கள் மற்றும் ஆணாதிக்கத்தை மேலும் வலுப்படுத்தும் குறுகிய பொருள்கோடல்கள் என்பன இதற்கான முக்கிய காரணங்களில் சிலவாகும்.

இஸ்லாம் சகல தளங்களிலும் வழங்கியுள்ள பெண்களின் உரிமைகளை முழுமையாக ஆய்வு செய்வது இந்த நூலின் நோக்கம் அல்ல. குறிப்பான சில தளங்களில் பெண்களின் உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களை அடையாளம் கண்டு அது தொடர்பாக இஸ்லாம் வலியுறுத்தும் சமநீதி என்ன, அதன் நடைமுறை முரண்பாடுகள் எத்தகையன என்பது பற்றி மட்டுமே இந்த நூல் ஆராய்கிறது.

பலதாரத் திருமணம், சிறுவயதுத் திருமணம் என்பன தொடர்பான இஸ்லாத்தின் நியதிகள் ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சமத்துவத்தின் விளக்கத் திலிருந்தும் வித்தியாசப்படுகின்றன. இஸ்லாத்தின் இவ்விதிகள் இறக்கப்பட்ட சூழ்நிலைகள், நோக்கம், காலப்பகுதி, பல்வேறுபட்ட பொருள்கோடல்கள் பற்றி பரந்த நோக்கில் அறிவதன் மூலம் இந்த வித்தியாசங்கள் நிச்சயமாகக் களையப்பட முடியும். இதன் மூலம் இஸ்லாத்தின் பெயரால் பாரபட்சப்படுத்தப்படாமல் அல்குர்ஆன் வழங்கியுள்ள, உறுதிப்படுத்தியுள்ள சமத்துவத்தினை முஸ்லிம் பெண்கள் அனுபவிக்க வழியமையும்.


நம்பிக்கை கொண்ட ஆண்களும், நம்பிக்கை கொண்ட பெண்களும் தங்களுக்குள் ஒரு-வருக்கொருவர் உற்ற துணைவர்களாய் இருக்கின்றனர். (அல்குர்ஆன் 9:71)
“பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச்சென்ற (சொத்தில்)தில் ஆண்களு-க்கு பாகமுண்டு அவ்வாறே பெற்றோரோ நெருங்கிய உறவினரோ விட்டுச்சென்ற சொ-த்தில் பெண்களுக்கு பாகமுண்டு (அல்-குர்ஆன் 4:07)
ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்தவற்றில் உரிய பங்குண்டு. அவ்வாறே பெண்களுக்கும் அவர்கள் சம்பாதித்தவற்றில் உரிய பங்குண்டு. (அல்குர்ஆன் 4:32)
கல்வியைத் தேடுவது அனைத்து முஸ்லிம்களின் மீதும் கடமையாகும். (சுனன் இப்னு மாஜா 224)
நிச்சயமாக நாம் ஆதமின் சந்ததியினரை கண்ணியப்படுத்தினோம் (அல்குர்ஆன் 17:70)
உங்கள் அனைவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். (அல்குர்ஆன் 4:1)
அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள். (அல்குர்ஆன் 2:187)
ஒரு பெண்ணையே (மணந்து கொள்ளுங்கள்) (அல்குர்ஆன் 4:3)
உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவியரிடத்தில் நல்ல பண்புகளை உடையவர் (சுனன் திர்மிதி 1162)
தனியாளுக்கான வெளி
பொதுவெளி
வாய்ப்புகள் மற்றும் வளங்களைப் பெறுவதற்கான உரிமை
பொருளாதார அரசியல் உரிமைகள்
கல்விக்கான உரிமை
சமத்துவ அங்கீகாரம் மற்றும் கௌரவம்
திருமணம் மற்றும் விவாகரத்தில் சமத்துவம்
வன்முறையும் துஷ்பிரயோகமும் அற்ற வாழ்க்கைக்கான உரிமை
சமத்துவமாக நடாத்தப்படுதல்
சமத்துவமான பெறுமானம்
பாரபட்சம் காட்டப்படாமை
பால்நிலை சமத்துவம்

# உள்ளடக்கம்


அத்தியாயம் 01
**வணக்க வழிபாடுகளில் சமத்துவம் / 01**
-உபைதுல்லாஹ் (சலபி)

அத்தியாயம் 02
**இஸ்லாமிய நோக்கில் திருமணம் / 13**
-அஷ்ஷெய்ஹ் எம். ரீ. எம். ரிஸ்வி (மஜீதி)

அத்தியாயம் 03
**நெருங்கிய வாழ்க்கைத் துணை வன்முறை / 24**
-எம். சி. ரஸ்மின்

அத்தியாயம் 04
**இஸ்லாத்தில் பலதாரத் திருமணம் - ஒரு பன்முக நோக்கு / 46**
-எம். பீ. எம். பிர்தெளஸ் (நளீமி), எம். சீ. எஸ். ஷாதிபா (அல்-ஆலிம்), எம். வை. மின்னதுல் சுஹ்றா

அத்தியாயம் 05
**இஸ்லாமிய விவாகரத்தும் பெண்ணுரிமையும் / 58**
-மொஹம்மட் நுஸ்ரி (நளீமி), எம்.பீ.எம். பிர்தெளஸ் (நளீமி)

அத்தியாயம் 06
**இஸ்லாமிய ஷரீஅத்தில் பெண்களின் சாட்சியம் பெறும் அந்தஸ்து / 68**
-எம்.பீ.எம். பிர்தெளஸ் (நளீமி) எம்.எஸ்.எம். நுஸ்ரி (நளீமி)

அத்தியாயம் 07.1
**இஸ்லாத்தில் பெண்கள் கல்வி கற்பதற்கான உரிமை / 77**
-அஷ்ஷெய்ஹ் ஏ.எம். மிஹ்ழார் (நளீமி), அஷ்ஷெய்ஹ் எம்.பி. நௌபர் (முஅய்யிதி)

அத்தியாயம் 07.2
**இஸ்லாத்தில் பெண்கள் தொழில் செய்வதற்கான உரிமை / 83**
-அஷ்ஷெய்க் ஏ.எம். மிஹ்ழார் (நளீமி)

அத்தியாயம் 07.3
**இஸ்லாத்தில் பெண்ணுக்குள்ள பொருளாதார உரிமைகள் / 90**
-அஷ்ஷெய்க் அப்துல் சலாம் ஜாபிர் (நளீமி)

அத்தியாயம் 08
**இஸ்லாத்தின் வருகைக்கு முன் அரேபியாவில் பெண்களின் நிலை / 97**
-அஷ்ஷெய்க். வை. சியாத் (நளீமி)

# அத்தியாயம் 01

# வணக்க வழிபாடுகளில் சமத்துவம்

உபைதுல்லாஹ் (சலபி)

## அறிமுகம்

*இஸ்லாத்தின் பால் சமத்துவம் பற்றிய நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கு,ஆண் மற்றும் பெண்ணுக்கு வணக்க வழிபாடுகளில் வழங்கப்பட்டுள்ள சமத்துவம் தொடர்பான நோக்கு பெரிதும் உதவுகின்றது. அல்லாஹ் ஆணையும் பெண்ணையும் எவ்வாறு சமமாக நோக்குகின்றான் என்பதை அறிய இந்த நோக்குநிலை உதவும்.*

> நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும், முஸ்லிம்களான பெண்களும் விசுவாசிகளான ஆண்களும் விசுவாசி களான பெண்களும் அல்லாஹ்வுக்கு வழிபாடு செய்பவர்களான ஆண்களும், வழிபாடு செய்பவர்களான பெண்களும் உண்மையே கூறுபவர்களான ஆண்களும், உண்மையே கூறுபவர்களான பெண்களும் பொறுமையாளர்களான ஆண்களும் பொறுமையாளர் களான பெண்களும் உள்ளச்சத்தோடு அல்லாஹ்வை பயந்து நடக்கும் ஆண்களும் உள்ளச்சத்தோடு அல்லாஹ்வை பயந்து நடக்கும் பெண்களும், தானம் செய்பவர்களான ஆண்களும், தானம் செய்வர்களான பெண்களும், நோன்பு நோற்பவர்களான ஆண்களும், நோன்பு நோற்பவர்களான பெண்களும், தங்கள் வெட்கஸ்தலங்களை காத்துக் கொள்பவர்களான ஆண்களும், வெட்கஸ்தலங்களை காத்துக் கொள்பவர் களான பெண்களும் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்பவர்களான ஆண்களும் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்பவர்களான பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் தயார் செய்து வைத்துள்ளான்.[1]

1 *அல்குர்ஆன் 33:35*

வணக்க வழிபாடுகளைப் பொறுத்த வரையில் ஆணும் பெண்ணும் அல்லாஹ்விடத்தில் சரிசமமான அந்தஸ்தையே பெற்றுள்ளனர் என்பதையும், இருபாலாரும் சமமான மார்க்கக் கடமைகளைப் பெற்றுள்ளார்கள் என்பதையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் காட்டுவதாக மேல்வந்த குர்ஆன் வசனம்அமைந்துள்ளது. அல்லாஹ்வுக்கு வழிபடுதல், உண்மை பேசுதல், பொறுமையாக இருத்தல், அல்லாஹ்வுக் குப் பயந்து நடத்தல், தானதர்மம் வழங்குதல், நோன்பு நோற்றல், அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்தல் என ஒழுக்கக் கடப்பாடுகள் யாவும் இருபாலாரையும் சாரும். வணக்க வழிபாடுகளின் எல்லா அம்சங்களிலும் பால்நிலைச் சமத்துவம் பேணப்பட்டிருக்கிறது.

அல்லாஹ்விடத்தில் ஒருவரின் அந்தஸ்தைத் தீர்மானிப்பதில் ஆண் பெண் என்ற பால்நிலை செல்வாக்குச் செலுத்துவதில்லை.[2] பால்நிலை சமத்துவம் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப் பாட்டைத் தீர்மானிக்கும் முக்கிய அடிப்படைகளில் இது முதன்மை யானதாகும். எனவேதான் இஸ்லாத்தைப் பொறுத்தவரை, மனிதரின் பால்நிலை வேறுபாடு உயர்வு தாழ்வைத் தீர்மானிப்பதில்லை. இதனை கீழ்வரும் தலைப் புகளின் கீழ் விரிவாக நோக்கலாம்.

1. ஆண், பெண் இருபாலாரும் அல்லாஹ்வின் பிரதிநிதிகள்.
2. ஆண், பெண் இருபாலாரும் சமமாக விளிக்கப்படுகின்றனர்.
3. ஆண் பெண் இருபாலாரும் ஒரே மூலத்தின் படைப்புகள்.
4. ஆண், பெண் இருவரும் பாவம் செய்யக் கூடியவர்கள்.
5. ஆண், பெண் இருபாலாரும் ஒழுக்கவியல் கடமைகளையுடையவர்கள்.
6. ஆண் பெண் இருபாலாருக்கும் சமமான கூலி.
7. ஆண், பெண் இருபாலாரும் ஒருவருக்கொருவர் உற்ற காரியஸ்தர்கள்.
8. ஆண் பெண் இருபாலாருக்கும் வழிபாட்டுக் கடமைகளில் சமத்துவம்

2 Jamal Badavi, The Status of Women in Islam, 1980

## 1. ஆண், பெண் இருபாலாரும் அல்லாஹ்வின் பிரதிநிதிகள்

*அல்லாஹ் ஆண், பெண் இருவரையும் தனது பிரதிநிதியாகவே படைத்துள்ளான். இருவரையும் தனது பிரதிநிதிகள் என்ற வகையில் கௌரவப்படுத்தியுள்ளான்.*

> "நிச்சயமாக நாம் ஆதமின் சந்ததியினரை கண்ணியப் படுத்தினோம். நாம் படைத்த பலவற்றை விடவும் அவர்களை மேன்மையாக்கினோம்."[3]

*இங்கு ஆதமின் சந்ததி என்பது வெறுமனே ஆண்களை மாத்திரம் குறிக்கவில்லை. ஆணையும், பெண்ணையும் உள்ளடக்கிய ஒரு சமூகத்தையே குறிக்கின்றது. பெண்களை அல்லாஹ் தவிர்த்து விட்டு சமூகத்தை நோக்க வில்லை என்பற்கு இது ஒரு சான்றாக உள்ளது. ஆண்களைப் போலவே அல்லாஹ்விடத்தில் பெண் களும் முக்கியமானவர்கள். ஆண்களைப் போன்று பெண் களும் நன்மைக்கு வெகுமதியும், தீமைக்குத் தண் டனையும் பெறுவர். இருபாலினரும் மனிதத் தரத்தில் சமமானவர்கள். கடமை உரிமையில் உள்ள வேறுபாடு, இருபாலினரும் அல்லாஹ்விடத்தில் சமமானவர்கள் என்பதைப் பாதிப்பதில்லை. யார் அதிக நன்மைகளைச் செய்து இறைவிசுவாசியாக வாழ்கின்றாரோ, அவரே அல்லாஹ்விடத்தில் சிறந்தவர்.[4] இங்கு இறைவிசுவாசி என்பது ஆணாகவும் இருக்கலாம். பெண்ணாகவும் இருக்கலாம். இதிலிருந்து இஸ்லாத்தில் ஒருவருக்கான சிறப்பு, அவர் ஆணாக இருப்பதாலோ, அல்லது பெண்ணாக இருப்பதாலோ வருவதில்லை என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.*

*இதனைப் பின்வரும் அல்குர்ஆன் வசனம் மேலும் தெளிவு படுத்துகின்றது.*

> "ஆண் அல்லது பெண் விசுவாசங் கொண்டவராக இருக்க யார் நற்செயலைச் செய்தாரோ நிச்சயமாக நாம் அவரை நல்ல வாழ்க்கையாக வாழச் செய்வோம். இன்னும் நிச்சயமாக அவர்களுக்கு அவர்களது கூலியை அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றில் மிக அழகானதைக் கொண்டு நாம் கொடுப்போம்.."[5]

---

3 *அல்குர்ஆன் 17:70*

4 *அல்குர்ஆன் 4:1*

5 *அல்குர்ஆன் 16:97*

இது இறை விசுவாசத்தை அடைந்து கொள்வதற்கான அருகதை ஆணுக்கும் பெண்ணுக்கும் சமனாகவே உண்டு என்பதைக் குறிக்கின்றது. அல்லாஹ் தன் வெகுமதியை இருவருக்குமே வாக்களிக்கின்றான்.

> "விசுவாசங்கொண்ட ஆண்களுக்கும் விசுவாசங்கொண்ட பெண்களுக்கும் அல்லாஹ் சுவனங்களை வாக்களித் திருக்கிறான்."[6]

## 2. ஆண், பெண் இருபாலாரும் சமமாக விளிக்கப்படுகின்றனர்

பெண்ணை அல்குர்ஆன் நேரடியாகவே விளிக்கின்றது. எந்த ஒரு இடத்திலும் ஆண்களை முகவர்களாகக் காட்டி அவர்களின் வழியாகப் பெண்கள் விளிக்கப்படவில்லை. இஸ்லாத்தின் பால்நிலைச் சமத்துவம் பற்றிய அணுகு முறையை அறிவதற்கான இன்னுமொரு அடிப்படையாக இதனைக் கொள்ளலாம்.

இஸ்லாத்தில் ஆண்களும், பெண்களும் இறைவனுக்குக் கட்டுப்படுவதற்காகவும், இறைவனை வணங்குவதற்காகவுமே படைக்கப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தத்தமக்குள்ள கடப்பாடுகளுக்கு இறைவனிடமே பொறுப்புச் சொல்ல வேண்டும். இதனால்தான் கலாநிதி துறாபி, பெண்ணை ஒரு சுதந்திரமான அங்கமாக காண்கின்றார். மேலும் "இஸ்லாத்தில் பெண்ணுக்குரிய இடம் மிகவும் வெளிப்படையானது. மானிடம் என்ற வகையில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் எந்த அந்தஸ்து வித்தியாசமும் கிடையாது" என்பார், இப்ராஹிம் அமீனி.[7] இது ஒரு வெளிப்படையான உண்மையாகும். ஆணாக இருப்பது உயர்ந்தது, பெண்ணாக இருப்பது தாழ்ந்தது என்பது முற்றிலும் கலாசாரவயப்பட்ட எண்ணக்கருவாகும். காலாகாலமாக ஆண்கள் தம்மை உயர் வானவர்களாயும், பெண்களை இரண்டாம் தர படைப்புக்களாயும் கருதி நடத்தி வந்தமை, வருகின்றமை எமது கண்மூடித்தனமான சமூக விழுமியங்கள், மூட நம்பிக்கைகளின் அடிப்படையில் அமைந்ததே அன்றி இஸ்லாத்தின் அடிப்படையில் அமைந்ததல்ல என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

---

6 அல்குர்ஆன் 9:72

7 Womens rights in Islam, (2006), Tehren Nava Cultural Organization.

*அல்குர்ஆனை எடுத்து நோக்கின் கணவன், மனைவி தொடர்பான விடயங்களில் எந்த இடத்திலும் கணவன் மனைவியென்று பிரித்துக் குறிப்பிடப்படவில்லை. மாறாக சோடிகள் (அஸ்வாஜ்), உங்களில் ஒருவர், அல்லது மற்றவர், என்றே குறிப்பிடுகின்றது. பொதுவாக சோடி என்பது ஒன்றைப் போல் மற்றொன்று என்ற அர்த்தத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது. சோடியில் ஒன்று இல்லாமல் போகும்போது மற்றையதும் பூரணமற்றுப் போகின்றது. எனவே அல்குர்ஆன் குறிப்பிடும் "அஸ்வாஜ்" எனும் பிரயோகம் கணவன் மனைவி உறவு என்பது ஒருவரை ஒருவர் பூர்த்தி செய்யும் உறவாகவே அமைய வேண்டும் என உறுதிப்படுத்துகின்றது. இறைவனின் தீர்க்கதரிசனத்திற்கு இது மாபெரும் எடுத்துக்காட்டாகும்.*

*யாரும் யாரிடத்திலும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் அல்ல என்பதையும் தன்னிடத்தில் சமமானவர்கள் என்பதையும் அல்லாஹ் இவ்விதமே நுணுக்கமாக வெளிப் படுத்தியிருக்கின்றான். ஆண் என்பதால் கணவன் என்று குறிப்பிட்டு அதனை உயர்வாகவோ, பெண் என்பதால் மனைவி என்று குறிப்பிட்டு அதனை அதற்கு அடுத்தபடியாகவோ அல்லாஹ் குறிப்பிட்டிருக்கலாம். ஏற்றத் தாழ்வுகளுக்கு வழிகோலாத வகையில் இருவரையும் தனது படைப்பாகவே அல்லாஹ் விளிக்கின்றான். இருவரையும் வெவ்வேறு காரணங்களுக்காக வெவ்வேறு இடங்களில் சிறப்பித்தும் கூறியுள்ளான். ஒருவருக்கு வழங்கப்பட்ட இந்த சிறப்பு மற்றவருக்கு எதிராகவோ, மற்றவருக்கு சவாலாகவோ வழங்கப்பட்டதல்ல. இஸ்லாத்தின் பால்நிலைச் சமத்துவத்தை குறிக்கும் மற்றுமோர் அடிப்படையாக இது அமைகின்றது.*

## 3. ஆண் பெண் இருபாலாரும் ஒரே மூலத்தின் படைப்புகள்

*தனது படைப்பினங்களான ஆணையும் பெண்ணையும் ஒரே மூலத்திலிருந்து படைத்ததாக அல்லாஹ் தன் திருமறையில் குறிப்பிடுகின்றான்.*

> "...அவன் எத்தகையோன் என்றால் உங்களை (யாவரையும்) ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். இன்னும் அதிலிருந்து அதற்குரிய ஜோடியையும் படைத்தான்.

இன்னும் அவ்விருவரிலிருந்து அனேக ஆண்களையும் பெண்களையும் பரவச்செய்தான்…"[8]

இந்த இடத்தில் ஆண்களையும் பெண்களையும் ஒரே மூலத்திலிருந்தே படைத்திருப்பதாக இறைவன் குறிப்பிடு கின்றான். படைப்பு என்ற வகையில் ஆண், பெண் இருவரும் சமமானவர்கள் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. ஆணை ஒரு மூலத்திலிருந்தும் பெண்ணை வேறு ஒரு மூலத்திலிருந்தும் இறைவன் படைத்தததாக நம்பப்படும் தொன்மத்தை குர்ஆனின் கருத்து செல்லுபடியற்றதாக்குகின்றது.

ஆணும் பெண்ணும் ஒரே ஆத்மாவிலிருந்து உருவாக் கப்பட்டார்கள் என்பதே அல்குர்ஆனின் நிலைப் பாடாகும். ஆனால் சிலர் ஆணின் விலாவிலிருந்து பெண் உருவாக்கப்பட்டதாக கூறுவர். அல்குர்ஆன் எங்குமே அப்படி குறிப்பிடவில்லை.[9] இருந்தாலும், ஸஹீஹுல் புகாரியில் இடம்பெறும் ஒரு நபிமொழி "பெண்களிடம் நல்லவிதமாய் நடந்துகொள்ளுங்கள். ஏனெனில் அவர்கள் விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டவர்கள் என்கிறது.[10] இன்னு மொன்று விலா எலும்பு போல் உடையக் கூடியவர்கள் என்கிறது. இந்த இரண்டு வேறுபட்ட ஹதீஸ்களும் ஒரே அறிவிப்பாளரினாலேயே தெரிவிக்கப்பட்டும் உள்ளன. இந்த நபி மொழிகள் அல்குர்ஆனின் போதனையுடன் தெளிவாக முரண்படுதைக் காணலாம். அல்குர்ஆனின் போதனைகளை விளக்கப்படுத்தவே ஹதீஸ்கள் பிரயோகிக்கப்படல் வேண்டும். எனவே அல்குர்ஆனுடன் ஹதீஸ் தெளிவாக முரண்படும் இத்தகைய சந்தர்ப்பங்களில் அல்குர்ஆனே மூல ஆதாரம் என்ற அடிப்படையில் அல்குர்ஆனின் கருத்தே மேலோங்கும்.[11]

## 4. ஆண், பெண் இருபாலாரும் பாவம் செய்யக் கூடியவர்கள்

பெண்கள் பாவத்தில் தள்ளிவிடுபவர்கள், குறைந்த அந்தஸ்தை உடையவர்கள், அதனால்தான் அல்லாஹ் அவர்களைத் தாழ்த்தி வைத்திருக்கின்றான் என்பது காலாகாலமாக நமது

8 அல்குர்ஆன் 4:1
9 வஹீதுத்தீன் கான், மு.பெ.எச்.அப்துஸ் சமத், (2004) இஸ்லாமிய ஷரீஅத்தில் பெண்களின் நிலை, சென்னை.
10 Buhari, book 7 vol 62 hadees 113
11 Ameena Wadood, Islam and Gender Equality and Justice, South Asia Regional Course 2014.

சமூகத்தில் இருந்து வருகின்ற மூடநம்பிக்கைகளாகும். ஆதம் (அலை) அவர்களை ஹவ்வா (அலை) அவர்களே பாவம் செய்யத் தூண்டியதாக கூறப்படுகின்றது. ஆனால், இது இஸ்லாத்திற்கு முற்றிலும் மாற்றமான கருத்தாகும். அல்லாஹ் தனது திருமறையில் ஆதம் (அலை) அவர்களும் ஹவ்வா (அலை)அவர்களும் பின்வருமாறு வேண்டியதாகக் குறிப்பிடுகின்றான்.

> "எங்கள் இறைவனே, எங்களுக்கு நாங்களே அக்கிரமம் செய்துகொண்டோம். எங்களை நீ மன்னித்து எங்களுக்குக் கிருபை செய்யாவிடில், நிச்சயமாக நாங்கள் இழப்பிற்குரிய வர்களாகி விடுவோம்."[12]

மேல்வந்த குர்ஆனிய வசனம் இரண்டு சந்தேகங்களுக்கு விடையளிக்கின்றது. ஒன்று முதலில் தவறு செய்தவள் பெண் என்பதைப் பொய்ப்பிக்கின்றது. இரண்டாவது, பெண் பாவத் தில் தள்ளிவிடக் கூடியவள் என்பதை மறுத்துரைக்கின்றது. அல்லாஹ் "அவள்" என்றோ "ஹவ்வா" என்றோ, அவர் பாவத் திற்குத் தூண்டிவிட்டார் என்றோ எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. இந்த உண்மை முற்றிலும் திரிபடைந்து பெண் தவறு செய்தாள் என்றே நம்பப்படுவது இஸ்லாமிய நிலைப்பாடு அல்ல.

ஆண் முதன்மை சிந்தனையால் ஊறிப்போன எமது சமூகம் முதலில் பெண்ணே பாவத்தை தூண்டியதாக கருதும் போது, அல்குர்ஆனோ இருவரும் பாவம் செய்ததாகவும், அதற்காக அவர்கள் மன்னிப்புக் கோரியதாகவும் குறிப்பிடுகின்றது. பெண்ணே பாவத்தை தூண்டுபவள் என்று இருந்திருப்பின் தண்டனை வழங்கும்போதும் ஆணைவிட பெண்ணுக்கு அல்லாஹ் அதிகமான தண்டனையை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் ஆதம், ஹவ்வா இருவருக்கும் பொதுவான ஒரு தண்டனையை வழங்கியதாகவே அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.[13] "ஆதமுடைய சந்ததிகள் அனைவரும் தவறிழைக்கக் கூடியவர்களே" என்ற நபி மொழியின் பிரகாரம் ஆண் பெண் இருபாலாரும் பாவம் செய்யக் கூடியவர்கள் எனக் கருதுவதே ஏற்புடையதாகும்.

---

12 அல்குர்ஆன் *7:23*

13 அல்குர்ஆன் *2:38*

## 5. ஆண், பெண் இருபாலாரும் ஒழுக்கவியல் கடமைகளையுடையவர்கள்

(நபியே) நம்பிக்கையாளர்களான ஆண்களுக்கு நீங்கள் கூறுங்கள்: அவர்கள் தங்கள் பார்வைகளை கீழ் நோக்கியே வைக்கவும்.[14]

(நபியே) நம்பிக்கையாளர்களான பெண்களுக்கு நீங்கள் கூறுங்கள்: அவர்கள் தங்கள் பார்வைகளை கீழ் நோக்கியே வைக்கவும்.[15]

*ஆணும் பெண்ணும் ஒழுக்கமாக நடக்க வேண்டும். ஆணினதும் பெண்ணினதும் பார்வை தடுக்கப்பட்ட விடயங்களை நோக்கியதாக இருக்கக் கூடாது. ஆணும் பெண்ணும் நல்லொழுக்கமுள்ளவர்களாக இருந்தால்தான் குடும்பமும், சமூகமும் சிறந்து விளங்கும். அந்நிய பெண்களுடன் ஆண் குழைந்து நெளிந்து பேசக்கூடாது. அதேபோன்று அந்நிய ஆடவர்களுடன் பெண் குழைந்து நெளிந்து பேசக்கூடாது. அந்நிய பெண்களுடன் ஆண் தனித்திருக்கக் கூடாது. அவ்வாறே அந்நிய ஆடவர்களுடன் பெண் தனித்திருக்கக் கூடாது. ஆணோ பெண்ணோ குடும்பத் துணைக்கு விசுவாசமாக நடக்க வேண்டும். இஸ்லாம் ஒழுக்க விதிகள் யாவற்றையும் பெண்ணுக்கு மாத்திரமன்றி ஆணுக்கும் பொதுவாகவே வைத்துள்ளது. ஆனால் குடும்பத் துக்குள்ளேயோ, சமூகத்திலேயோ, ஆணைக் குறித்து இவை சொல்லப்படுவதுமில்லை, வற்புறுத்தப்படுவதுமில்லை. இஸ்லாம் பார்வைகளைத் தாழ்த்தும்படி நம்பிக்கை கொண்ட ஆண், பெண் இருவருக்குமே கட்டளையிட்டுள்ளது. ஒழுக் கத்தையும் ஈமானியக் கடப்பாட்டையும் அல்லாஹ் எதுவித விலக்களிப்புக்களும் இன்றி இருபாலாருக்குமே கடமையாக்கியுள்ளான்*

## 6. ஆண் பெண் இருபாலாருக்கும் சமமான கூலி

*ஒருவருடைய பால்நிலையை மையமாகக் கொண்டு அல்லாஹ் யாருடைய நன்மையையும் தீமையையும் தீர்மானிப்பதில்லை என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றான். பின்வரும் குர்ஆனிய வசனம் அதற்குச் சான்றாக உள்ளது.*

---

14 *அல்குர்ஆன் 24:30*
15 *அல்குர்ஆன் 24:31*

"உங்களில் ஆண், பெண் இருபாலாரிலும் எவர் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக நான் அதை வீணாக்கி விடமாட்டேன். ஏனென்றால், உங்களில் சிலர் மற்ற சிலரில் உள்ளவர்தான். ஆகவே கூலி கொடுப்பதில் ஆண் பெண் என்ற பாகுபாடு இல்லை."[16]

"ஒவ்வோர் ஆத்மாவும்தான் தான் சம்பாதித்தவற்றுக்கு பிணையாக்கப்பட்டதாகும்."[17]

ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவரவர் சம்பாதித்தவற்றுக்கு நியாயமான பெறுபேற்றை அல்லாஹ் வைத்திருக்கின்றான். இது அல்லாஹ்விடமிருந்து நற்கூலியும் வெகுமதியும் இருவருக்கும் சமநீதியுடன் கிடைக்கும் என்பதைக் குறிக்கின்றது. இது இஸ்லாத்தில் இருபாலாரும் சம அங்கீகாரமுள்ள பிரதிநிதிகள் என்பதைப் புரிந்து கொள்வதற்கான ஓர் அணுகுமுறையாகும்.

## 7. ஆண் பெண் இருபாலாரும் ஒருவருக்கொருவர் உற்ற காரியஸ்தர்கள்

நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பது ஆண் பெண் இருபாலார் மீதும் கடமையாகும். இந்தப் பணியில் விசுவாசியான ஆண்களும் பெண்களும் தத்தமக்குள் உற்ற காரியஸ்தர்களாக இருக்கின்றார்கள். இதனையே அல்குர்ஆன்,

"விசுவாசங்கொண்ட ஆண்களும் விசுவாசங்கொண்ட பெண்களும் அவர்களில் சிலர் சிலருக்கு உற்ற காரியஸ்த்தர்களாக இருக்கின்றனர். அவர்கள் பிறரை நன்மையைக் கொண்டு ஏவுகின்றனர். (மார்க்கத்தில் தடுக்கப்பட்ட) தீமையை விட்டும் விலக்குகின்றார்கள்..[18]

இந்த அல்குர்ஆன் வசனம் சமத்துவத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ஆண் தவறு செய்யும் போது பெண் அவனைத் திருத்தி வழி காட்டுபவளாக இருக்கின்றாள் என்றும் அதே போன்று பெண் தவறு செய்யும் போது ஆண் அவளைத் திருத்தி வழி காட்டுபவனாக இருக்கின்றான் என்றும் அல்லாஹ் கூறுகின்றான். இங்கு பால்நிலை ஏற்றத் தாழ்வு ஏதும் இல்லை. ஆணும் பெண்ணும் சம தராதரமுடையவர்களாகவே மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

16 அல்குர்ஆன் *3:195*
17 அல்குர்ஆன் *74:38*
18 அல்குர்ஆன் *9:71*

மார்க்க ரீதியாக ஆணுக்கும் பெண்ணுக்கும் எல்லா அம்சங்களிலும் சம அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது. மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதிலும் பெண்களுக்கு, ஆண்களுக்கு நிகரான உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. நபியவர்கள் பெண்களுக்கு தனியான மார்க்க விளக்க வகுப்புகளை நடாத்தியிருக்கிறார்கள். பெண்களுக்கு, பிரத்தியேகமான உபதேசங்களை வழங்கியிருக்கிறார்கள். மார்க்கத்தில் ஏற்படும் சந்தேகங்களை பெண்கள் நேரடியா கவே நபியவர்களிடம் வந்து கேட்டறிந்திருக்கிறார்கள். எனவே மார்க்கத்தை அறிந்து கொள்வதிலும் பால்நிலை சமத்துவம் தெளிவாக வழங்கப்பட்டுள்ளது.

## 8. ஆண் பெண் இருபாலாருக்கும் வழிபாட்டுக் கடமைகளில் சமத்துவம்

ஆண் பெண் இருபாலாரும் சமமான வணக்க வழிபாட்டுக் கடமைகளைப் பெற்றுள்ளனர். அதேசமயம், பெண்களுக்கு மாத்திரம் சில விசேட சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. பெண்கள் ஜமாஅத் எனும் கூட்டுத் தொழுகைக்காக பள்ளிவாயலுக்கு வருவதும் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதேயாகும். கடமையான தொழுகைகளில் மாத்திரமன்றி உபரியான பெருநாள் தொழுகை, கிரகணத் தொழுகை போன்றவற்றிலும் நபிகளாரின் காலத்தில் பெண் கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். பள்ளிவாயலில் (இஃ. திகாப்) தரித்து இருந்திருக்கின்றார்கள். பள்ளிவாயலின் மிஹ்ராபில்தான் மர்யம் (அலை) வாழ்ந்ததாகவும் அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது. தர்மம் செய்கின்ற விடயத்திலும் பெண்களை தமது சொத்துக்களிலிருந்து தருமம் செய்யுமாறு நபிகளார் ஏவியிருக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு விசேடமான நன்மைகள் வழங்கப்படுவதாகவும் குறிப்பிடுகிறார்கள். ஆணுக்கும், பெண்ணுக்கும் வணக்க வழிபாடுகளில் வேறுபாடுகள் இல்லை என்பதால்தான் ஓர் ஆணுக்குப் பதிலாக மற்றுமொரு பெண் ஹஜ் செய்ய முடியும் என இஸ்லாம் குறிப்பிடுகிறது.

மேலும் பெண்கள் பிராணிகளை அறுத்துப் பலியிட முடியும் என்றும் அவ்வாறு பலியிடப்பட்ட இறைச்சியை அனைவரும் உண்ண முடியும் என்றும் பெண்கள், ஆண்களைக் கூட நோய் விசாரிக்கச் செல்ல முடியும் என்றும் கூறுவதன்

மூலம் சமூகம் சார்ந்த இபாதத்துக்களில் கூட பெண்களுக்கு இஸ்லாம் சமவுரிமை வழங்கியிருக்கின்றது.

## நடைமுறைச் சிக்கல்கள்

நடைமுறையில் பெண்களுக்கு அவர்களது வணக்க வழிபாடுகள் தொடர்பான சமத்துவ உரிமைகள் மறுக்கப்படுகின்றன. மத்திய கிழக்கு மற்றும் மேற்கத்தேய நாடுகளில் பெண்கள் தொழுகைக்காக பள்ளிவாசல்களுள் அனுமதிக்கப்படுகின்றனர். எமது நாட்டிலோ நோன்பு காலத்தில் இரவில் மட்டும் பெண்கள் தொழுகைகளுக்காக பள்ளிவாசல்களுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர். எவ்வாறெனினும் பொதுவாக ஐவேளைத் தொழுகைகளுக்கோ அல்லது வெள்ளிக்கிழமை கூட்டுத்தொழுகைக்கோ அனுமதிக்கப்படுவதில்லை.

நபிகளாரின் காலத்தில் பெண்கள் பள்ளிகளில் தொழுகையினை மேற்கொண்டனர். ஆண்களும் பெண்களும் ஒரே பள்ளியில் ஒன்றாக நின்று ஐவேளைத் தொழுகைகளையும் கூட்டாக நிறைவேற்றினார்கள். பெண்கள் பள்ளிக்கு வர வேண்டும் என்ற போது அதனை விரும்பாத ஆண்கள் அப்படியாயின் சுபஹ் தொழுகைக்கு மட்டும் வரட்டும் என்றனர். இதனை மறுத்த நபியவர்கள் ஆண்களைப் போலவே ஐந்து வேளையும் பெண்களும் பள்ளிக்கு வர முடியும் என்று உறுதியான அனுமதியை அளித்தார்கள். மாதவிடாய்க் காலத்தில் தொழத்தேவை இல்லாத போதும் கூட பெருநாள் தொழுகை சந்தோசத்தில், சமூக ஒன்று கூடலில், அப்பெண்களை ஒதுக்கி வைக்காது பள்ளியில் அப்பெண்கள் வந்து அமர்ந்திருக்க நபியவர்கள் அனுமதித்திருந்தார்கள். இதுவே இஸ்லாம் காட்டித் தந்த சமத்துவமும் வழிமுறையுமாகும்.

துரதிஷ்டவசமாக நபியவர்கள் விரும்பிய மாற்றத்துக்கு முரணாக நமக்கு விரும்பியவாறாக இஸ்லாமிய விதிகளையும் நடைமுறைகளையும் நாம் மாற்றி இருக்கிறோம். நன்மையானதொரு விடயத்தை இஸ்லாத்தின் பெயரால் தடை செய்து பெண்களை வீடுகளுக்குள்ளேயே முடக்கி வைத்திருக்கிறோம். இதற்கு பெண்களை அனுமதிப்பது வீண் குழப்பங்களைத் தோற்றுவிக்கும் என்று நொண்டிக்காரணம்

வேறு சொல்லிக் கொண்டிருக்கிறோம். இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இதில் முரண்பாடான விடயம் என்னவென்றால், சகல பொது இடங்களுக்கும் சென்று வரும் முஸ்லிம் பெண்கள், இறைவனை வழிபட பள்ளிவாசலுக்குச் செல்கையில் மட்டும் குழப்பத்தை விளைவிப்பார்கள் எனத் தடுக்கப்படுவதாகும். இதனால் எங்கும் வெளியில் பயணம் செல்லும் போது, கட்டாய கடமையான தொழுகையினை ஆண்கள் சுலபமாக அருகிலுள்ள பள்ளியில் நிறைவேற்றுகின்றனர்.

அதேசமயம் பெண்கள் அதே கட்டாய கடமையினை நிறைவேற்ற இடம் தேடி அலையும் நிலையும் சில போதுகளில் தொழுகையை தவற விடக்கூடிய சிக்கல்களும் கூட காணப்படுகின்றன. சில பள்ளிவாசல்களில் பெண்களுக்கென தனியான அறைகள் உள்ள போதும் எல்லா பள்ளிவாசல்களிலும் இந்த ஏற்பாடு இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சில பௌத்த விகாரைகளுக்குள் முக்காடிட்டு தலை மூடிய நிலையில் முஸ்லிம் பெண்களை அனுமதிப்பதில்லை என கவலை தெரிவிக்கும் எமது சமூகம், தனது சொந்த சமய பள்ளிவாசல்களுக்குள் பெண்களுக்குத் தொழ அனுமதி மறுத்திருப்பது பற்றி இன்னும் மௌனம் சாதிப்பதும், அதனை நியாயப்படுத்துவதும் மிகவும் கவலைக்குரியதாகும்.

இவையெல்லாம் அல்லாஹ்வினால் வழங்கப்பட்டு நபி பெருமானாரால் முன்மாதிரியாக உறுதிப்படுத்தப்பட்ட பெண்களின் வணக்க வழிபாடுகளுக்கான சமத்துவத்தை மிகத் தெளிவாக மீறும் செயலாகும். இது முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக சொல்லும் சில ஆண்களின் குறுகிய மனப்பாங்கின் வெளிப்படையான முடிவே அன்றி இஸ்லாத்தின் நிலைப்பாடு அல்ல. எனவே சமூக நன்மை என்ற சாட்டில் பெண்களின் உரிமைகளை மீறும், பெண்களை பாரபட்சப்படுத்தும் முடிவுகளை மீள் பரிசீலனை செய்து மாற்ற வேண்டியது அத்தியாவசியமாகும்.

# அத்தியாயம் 02

# இஸ்லாமிய நோக்கில் திருமணம்

அஷ்ஷெய்க் எம். ரீ. எம். ரிஸ்வி (மஜீதி)

இஸ்லாத்தின் பார்வையில், ஒரு முன்மாதிரியான குடும்ப உருவாக்கத்தின் அத்திவாரம் திருமணமாகும். இஸ்லாம் எதிர்பார்க்கும் சமூக அமைப்பில் குடும்பம் பிரதான இடத்தைப் பெறுகின்றது.

அல்குர்ஆன் திருமணத்தை ஆண்-பெண் இருபாலாருக் கிடையில் நடைபெறும் ஒரு வலுவான ஒப்பந்தமாகக் குறிப்பிடுகின்றது. இது இரு சாராருக்கும் சமத்துவ உரிமைகளை உறுதி செய்கின்றது. இந்த ஒப்பந்தம் ஏனைய சிவில் ஒப்பந்தங்களைப் போன்று சுதந்திரமானதும் நீதியானதுமாகும். இதில் இணையும் ஆண், பெண் இரு தரப்பினரதும் பூரண விருப்பம் இன்றி இந்த ஒப்பந்தம் நிறைவேறாது.

எனவேதான் இந்த ஒப்பந்தம் பகிரங்கமாக பொது மக்கள் மத்தியில் இடம்பெற வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இதற்கு இரு சாட்சிகள் அவசியமாகும். திருமணத்தின் நோக்கங்களை இருவரில் ஒருவர் மீறும் போது, ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளும் உரிமை இருவருக்கும் சமமாக உண்டு. எனவே, திருமண ஒப்பந்தமானது ஒரு பெண் ஆணிடம் தஞ்சமடையும் நிகழ்வோ அல்லது பெண்ணுக்கான முழு அதிகாரங்களையும் ஆணிடம் ஒப்படைக்கும் நிகழ்வோ அல்ல.

## திருமணத்தின் அடிப்படை

*திருமண வாழ்வின் அடிப்படைகளாக அன்பு, அமைதி, பரஸ்பர, புரிந்துணர்வு என்பன உள்ளன. அல்குர்ஆன் இது பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது*

> "இன்னும் நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுவதற்கு உங்கள் துணைகளை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும் உங்களுக்கிடையே அன்பையும் கருணையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்.."[1]

*இதன்படி, கணவன் மனைவிக்கிடையிலான உறவின் அத்திவாரம் அன்பும் கருணையுமாகும். வெளிப்படையாக, இது கணவன் மனைவியாகிய இருவரும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதையே குறிக்கின்றது.*

*அத்தோடு, கணவன் அல்லது மனைவி என்று குறிப்பிடாமல் துணைகள் எனும் சொற்பிரயோகத்தை அல்குர்ஆன் கையாளுகின்றது. இது இருவரும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அமைதி பெறு வதையே குறிக்கின்றது. தவிர, ஆண் மாத்திரம் பெண்ணிடம் அமைதி பெறுவதையோ அல்லது பெண் மாத்திரம் ஆணிடம் அமைதி பெறுவதையோ குறிக்கவில்லை.*

*அல்குர்ஆன், மற்றுமோர் இடத்தில் பின்வருமாறு குறிப் பிடுகின்றது:*

> "..அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள்"[2]

*ஒரு கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் ஆடையாக இருப்பதாக அல்குர்ஆன் கூறுகின்றது. இங்கு ஆடை மனிதனின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்று. இது பாதுகாப்பு மற்றும் கௌரவம் என்பனவற்றை வழங்குகின்றது. இதேபோன்று, கணவன் மனைவி ஆகிய இருவரும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் இன்றியமையாதவர்களாகவும் ஒருவரை யொருவர் பாதுகாப்பவர்களாகவும் கௌரவமளிப்பவர் களாகவும் இருக்க வேண்டும் என்பதையே குறிக்கின்றது.*

---
1 *அல்குர்ஆன் 30:21*
2 *அல்குர்ஆன் 2:187*

*இங்கு, கணவன் மனைவி ஒருவருக்கொருவர் சரிசம மானவர்கள் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.*

## மணமக்களின் தகுதிகளும் சமத்துவமும்

*இஸ்லாம் திருமணம் செய்யவிருக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சில தகுதிகள் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது. திருமணத்தின் போது, இறைநம்பிக்கை[3], ஒழுக்கம்[4] ஆகிய இரண்டு தகுதிகளும் ஆணிடமும் பெண்ணிடமும் இருக்க வேண்டும் என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.*

*ஒரு நபி மொழியின் படி "ஒரு பெண் அழகு, செல்வம், குடும்பம், மார்க்கப்பற்று என்ற நான்கு காரணங்களுக்காக மணமுடிக்கப்பட முடியும். இருந்தாலும் மார்க்கப்பற்றுக்கு முன்னுரிமைவழங்கப்படுதல்சிறந்ததாகும்".இவைபொதுவாக பெண்ணுக்கான தகுதிகளாக மட்டுமே நோக்கப்படுகின்றன. ஒரு ஆண், இதே காரணங்களுக்காக மண முடிக்கப்படலாம் என்பதோ, மார்க்கப்பற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதோ பெரும்பாலும் முஸ்லிம் சமூகத்தில் வலியுறுத்தப்படுவதில்லை.*

*இன்றைய காலகட்டத்தில் மேற்சொல்லப்பட்ட அடிப்படை களுடன் சேர்த்து தனிப்பட்ட பண்புகள், ஆளுமைகள், கல்வித்தகைமைகள் என்பனவும் திருமணத்துக்கான பொருத்தப்பாடுகளாக முக்கியத்துவம் பெற்றுள்ளன.*

## திருமணத்தின் முன் மணமக்கள் ஒருவரையொருவர் பார்த்தல்

*இஸ்லாமிய திருமணத்தின் மற்றுமோர் அம்சம் திருமணத்தின் முன் திருமணம் முடிக்கவிருக்கும் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் பார்த்தல் ஆகும். இது அனுமதிக்கப் பட்டதொன்றல்ல என்ற பிழையான கருத்து சிலரிடையே காணப்படுகின்றது.*

*இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் திருமணத்தின் முன் ஆண் பெண்ணைப் பார்ப்பதற்கு அனுமதியுள்ளது போலவே பெண் ஆணைப் பார்ப்பதற்கும் அனுமதியுள்ளது. நபித்தோழர் முகீரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

---

3 *அல்குர்ஆன் 2:221*

4 *அல்குர்ஆன் 24:3*

"நான் ஒரு பெண்ணை மணமுடித்துக்கொள்ள பேசியிருந்தேன். இதனை அறிந்த ரஸூல் (ஸல்), நீர் அப்பெண்ணைப் பார்த்துக் கொள்ளும், ஏனெனில் அது உங்களிருவருக்குமிடையில் உவப்பையும், நட்பையும், இணக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும் என அறிவுரை பகன்றார்கள்."[5]

*நபி (ஸல்) அவர்கள் தங்கள் வாழ்வில் மணமுடித்த அனைத்து மனைவிகளையும் நேரில் பார்த்து அவர்களது முழு சம்மதத்துடனே மணமுடித்தார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது. எனவேதான் இஸ்லாம் திருமணத்தின் முன், ஆண் பெண்ணையும் பெண் ஆணையும் ஒருவரை ஒருவர் பார்வையிட்டுக் கொள்ளுமாறு வலியுறுத்துவதனூடாக இருபாலாருக்கும் சமத்துவத்தினை வலியுறுத்தியுள்ளதைப் பார்க்கலாம்.*

## திருமணத்துக்கான சம்மதம்

*இஸ்லாத்தில் கட்டாய திருமணம் தடைசெய்யப்பட்டதாகும். இஸ்லாமிய திருமண விதிகளுள் மணமகனினதும், மணமகளினதும் விருப்பத்தை அறிவதும், ஒப்புதல் பெறுவதும் அவசியமாகும்.*

இது குறித்து ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஒரு நபிமொழி: "குடும்பத்தார் திருமணம் செய்து கொடுக்கும் கன்னி பெண்ணின் விருப்பத்தை அவர்கள் பெற வேண்டுமா?" என நபியவர்களிடம் நான் கேட்டபோது "ஆம் பெறத்தான் வேண்டும்" எனக் கூறினார்கள். அவள் வெளிப்படையாகக் கூறுவதற்கு வெட்கப்படுவாளே என்று நான் கேட்டதற்கு அவ்வாறெனில் அவளுடைய மௌனத்தை விருப்பமாகக் கொள்ளலாம் என நபியவர்கள் கூறினார்கள்.[6]

அதேபோன்று, திருமணமாகி விவாகரத்தான அல்லது விதவையான பெண்கள் மற்றும் அநாதைப் பெண்கள் தொடர்பிலும் அவர்களது சம்மதம் கட்டாயம் பெறப்படுதல் வேண்டும்.[7] (கன்ஸா பின்த் கிதாம் அல்அன்சாரியா (ரழி) கூறினார்: கன்னி கழிந்த பெண்ணான என்னை என் தந்தை (ஒருவருக்கு) மணமுடித்து வைத்தார்கள். எனக்கு அதில் விருப்பமிருக்கவில்லை. எனவே, நான், இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் போய் என் விருப்பத்தைச் சொன்னேன்.

---

5 *சுனன் இப்னு மாஜா 524*
6 *சஹீஹுல் புகாரி 4844*
7 *அபூதாவூத், பகுதி 3, பக்கம் 25-27*

> அத்திருமணத்தை நபி (ஸல்) அவர்கள் ரத்துச் செய்தார்கள்.[8] அதன் பின்னர் "உங்களுக்குப் பிடித்தமான ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். அதற்கு, எனக்கு என் தந்தை நிச்சயித்தவரையே திருமணம் செய்து கொள்கின்றேன் எனக் கூறினேன். ஆனால் தங்களது பெண் மக்களின் விசயத்தில் அவர்களது பெற்றோர்களுக்கு உரிமை இல்லை (அதாவது கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைப்பதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை) என்பதை அறியவே நான் அவ்வாறு கூறினேன் என்றார்கள்.

*மேற்சொன்ன இரண்டாவது நபிமொழி திருமண விடயத்தில் ஒரு பெண்ணின் சம்மதமானது வாய்வார்த்தையாகப் பெறப்படுதல் எவ்வளவு முக்கியம் என்பதனைக் காட்டுகின்றது. பெண்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளே மறுக்கப்படுகின்ற இந்த கால கட்டத்தில் பெண்ணின் மௌனத்தை சம்மதமாக எடுத்தல் என்பது எமது சமூக அமைப்பில் பல சிக்கல்களுக்கு வித்திடக் கூடியதாக மாறும். ஒரு பெண் தனது வெறுப்பைக் கூட மௌனமாக வெளிப்படுத்தும் சூழ்நிலைகள் இன்று காணப்படுகின்றதை யாரும் மறுக்க முடியாது.*

*எனவேதான் நபியவர்கள் பெண்களின் சம்மதத்தை பெற்றுக் கொள்ளுங்கள் என்று இட்ட கட்டளையினை நிறைவேற்றுவதாயின் எம்முன் இருக்கும் சிறந்த முறைகளை வைத்து அந்த நோக்கத்தினை எட்ட நாம் முயல வேண்டும். இதன் மூலம் தேவையற்ற பலவந்தத் திருமணங்களையும், விவாகரத்துக்களையும் நாம் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.*

*மணமகளின் ஒப்புதலை பெற்றுக் கொள்வதில் பெரும் பாலான முஸ்லிம் பெற்றோர்கள் அலட்சியமாகவே இருக்கின்றார்கள். மகளுடைய மனவிருப்பத்துக்கு இடம் கொடுக்காது பெற்றோர் தாமே முடிவெடுத்து திருமணம் செய்து வைக்கும் நிலை கூட அதிகம் காணப்படுகின்றது. சிலவேளை ஆண் பிள்ளைகளை கட்டாயத்தின் பேரில் திருமணம் செய்து வைக்கும் சம்பவங்களும் இடம்பெறுவதுண்டு. பெற்றோரின் விருப்பத்திற்காக மாத்திரம் திருமணத்தில் நிலைத்திருக்கும் ஆண்களும் பெண்களும் உள்ளனர்.*

---

8 *சஹீஹுல் புகாரி 5138*

மணமக்களின் விருப்பம் அறியாது, ஒப்புதல் பெறாது நடத்தி வைக்கப்படும் கட்டாய திருமணங்களால் தற்கொலை, விவாகரத்து, முறைகேடான பாலியல் தொடர்புகள் போன்ற பல்வேறு விளைவுகள் சமூகத்தில் ஏற்படுகின்றன. ஒரு ஆணை எப்படி கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைக்க முடியாதோ அதேபோல் ஒரு பெண்ணையும் கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைக்க முடியாது என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

## வலிதாரர்/ பொறுப்பாளர்

திருமணம் என்பது ஒரு ஒப்பந்தம். இதற்கு இரு பக்கத்தாரினதும் சம்மதம் அவசியம். இல்லாவிடில் அந்தத் திருமணம் செல்லுபடியாகாது. தந்தை ஒருவர் மணப்பெண்ணின் சம்மதமின்றி செய்து வைத்த திருமணத்தை நபிகளார் இரத்துச் செய்திருக்கிறார்கள். அடுத்ததாக உங்களுக்கு விருப்பமானவர்களைத் திருமணம் செய்யுங்கள் என அல்குர்ஆன் அனுமதி அளிக்கின்றது. இது திருமணத்துக்கான கோரிக்கை பலரால் முன் வைக்கப்படும் போது மணப்பெண் தான் விரும்பியவரை தெரிவு செய்யும் உரிமையை வழங்குகின்றது.

திருமணத்தைப் பொறுத்தளவில் "வலி" என்பது பெண்ணுக்குப் பொறுப்பாக இருக்கும் பெற்றோரை அல்லது அவளது பாதுகாவலரைக் குறிக்கும். பொதுவாக பாதுகாவலர் என்பவர், சுயமாக தனது வேலைகளை செய்து கொள்ள முடியாத சிறுவர்கள், சித்த சுவாதீனம் அற்றவர்கள், அனுபவமில்லாத பொறுப்புக்கள் அற்றவர்கள் போன்ற தன் பொறுப்பிலுள்ளவர்களை பராமரிக்க சட்டரீதியாக அதிகாரம் உள்ளவர் ஆவார்.[9] இந்த வகையில் ஒரு பெண்ணுக்கான திருமண பாதுகாவலர் அவசியம் என வலியுறுத்தப்படுகின்றது. இதற்கு பெண்ணுக்கு சுயமாக முடிவெடுக்கத் தெரியாது, அல்லது தவறான முடிவுகளை எடுக்கக் கூடும் என பலவிதமான நியாயமற்ற காரணங்கள் முன் வைக்கப்படுகின்றன.

பாதுகாவலர் தொடர்பில் உள்ள இன்னுமொரு விடயம் ஏற்கனவே திருமணம் முடித்து விவாகரத்தான பெண் அல்லது கணவனை இழந்த பெண் எனின் வலிதாரர் என்ற

9 Cf. Shorter Encyclopedia of Islam, p. 447; Farrukh, p. 113; Maghniyyah (2), p.40

தேவைப்பாடு இல்லை.[10] விவாகரத்தான பெண் வயதில் குறைந்த பெண்ணாக இருந்தாலும் கூட அவளுக்கு தன் திருமணம் தொடர்பில் தீர்மானம் எடுக்க பூரண உரிமை உண்டு. ஆனால் ஏற்கனவே திருமணம் முடிக்காத பெண் எவ்வளவுதான் அறிவு மற்றும் வயது முதிர்ச்சி இருந்தாலும் இல்லாவிட்டாலும் கூட வலியின் சம்மதம் அவசியம் எனப்படுகின்றது.

ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பே பெண்களுக்கு ஒப்பந்தம் செய்யவும், தனியே சொத்துக்களைக் கொண்டிருக்கவும், பராமரிக்கவும், உரிமை வழங்கிய இஸ்லாம், திருமண விடயத்தில் அவர்களுக்கு சுயமாக முடிவெடுக்கத் தெரியாது அல்லது பிழையான முடிவுகளை எடுக்கக் கூடும் என்பதற்காக ஒரு பாதுகாவலரை ஏற்படுத்தியுள்ளது என்று தீர்மானித்துக் கொள்வது முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டிய வாதமாகும்.

## மஹர் தொகை

> "நீங்கள் (மணம் புரியும்) பெண்களுக்கு அவர்களுடைய மஹர் (திருமணக்கொடை) இனை மகிழ்வோடு கொடுத்து விடுங்கள். அதிலிருந்து ஏதேனும் ஒன்றை மனமொப்பி அவர்கள் உங்களுக்குக் கொடுத்தால் அதை தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள்."[11]

> மணம் முடிக்கும் மணப்பெண்ணுக்குரிய (மஹர்) தொகையை முறைப்படி கொடுத்து விடுங்கள்.[12]

மஹர் என்பது திருமணத்தின் போதான பெண்ணின் உரிமையாகும். இது கணவனால் மனைவிக்கு வழங்கப்படும் திருமணக் கொடையாகும். அதன் தொகையை தீர்மானிக்கும் உரிமை பெண்ணுக்குப் பூரணமாக உண்டு. மஹர் தொகையைப் பொறுத்த வரையில் குடும்பம் கோத்திரம் கல்வி, பொருளாதாரம், சமூக மரபு, பிரதேசம், தொழில் என்பவற்றைப் பொறுத்தும் கணவனின் பொருளாதார நிலையைப் பொறுத்தும் கூடிக் குறைய முடியும். நஜ்ஜாஸி மன்னன் முன்னின்று உம்மு ஹபீபா (ரழி) அவர்களை நபிவர்களுக்கு மணம் முடித்துக் கொடுத்தபோது நபியவர்கள் உம்மு ஹபீபா (ரழி) அவர்களுக்கு அதிக மஹர் தொகை கொடுத்து திருமணம் முடித்திருக்கிறார்கள்.

---
10 *அபூதாவூத், 1998, 3ம் பாகம், ப.27*
11 *அல்குர்ஆன் 4:4*
12 *அல்குர்ஆன் 4:24-25*

எனவே திருமணத்தின் போது ஒரு பெண்ணுக்கு அவர் நிபந்தனையிட்டு கோரும் சொத்தைப் பெறும் விசேட உரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கணவன் தன் மனைவியை தலாக் (விவாகரத்து) செய்து விட்டால் அவன் மனைவிக்கு அன்பளிப்பாகக் கொடுத்த மஹரையோ அல்லது ஏனைய பொருட்களையோ திருப்பிக் கேட்க முடியாது. மனைவியாக விரும்பிக் கொடுத்தால் மாத்திரமே பெற்றுக் கொள்ளலாம்.

> "நீங்கள் ஒரு மனைவியை விலக்கி விட்டு அவளுக்கு பதிலாக மற்றொரு மனைவியை மணந்து கொள்ள நாடினால், முந்தைய மனைவிக்கு ஒரு பொற் குவியலையே கொடுத்திருந்த போதிலும், அதிலிருந்து எதையும் (திரும்ப) எடுத்துக் கொள்ளாதீர்கள் - அபாண்டமாகவும், பகிரங்கமாகப் பாவகரமாகவும், அதனை நீங்கள் (திரும்பி) எடுக்கிறீர்களா?."[13]

என அல்குர்ஆன் மஹரை மீளப் பெறுவதை தடை செய்கின்றது.

எவ்வாறாயினும் நடைமுறையில் மஹர் தொகையைத் தீர்மானிக்கும் உரிமை மணப்பெண்ணுக்குக் கொடுக்கப்படு வதில்லை. மேலும் இது ஒரு பெயரளவிலான சம்பிரதாயமாக மாற்றப்பட்டுள்ளது. விவாகரத்தின் போது பல சந்தர்ப்பங் களில் பலவந்தமாக மஹர் மீளப் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இஸ்லாம் பெண்ணுக்களித்த உரிமையைப் பறித்து விட்டு, சீதனம் என்ற பெயரில் பெண்ணை அவஸ்தைக்குள்ளாக்கும் இஸ்லாத்துக்கு முற்றிலும் முரணான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

## திருமண வயது

இஸ்லாம் பருவ வயதை அடைந்த, புத்தி சுயாதீனமுடைய, உடல் உள ஆரோக்கியத்தையுடைய ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணத்தை அனுமதித்துள்ளது. பருவமடைதல் என்பது திருமணத்திற்கான தகுதியோ அல்லது அதனை செய்து கொள்வது கட்டாயம் என்பதற்கான நிலையோ அல்ல. ஆணோ பெண்ணோ திருமணத்துக்கு தயாரா என்பதை வெறுமனே வயதை அடிப்படையாகக்

13 அல்குர்ஆன் 4:20

கொண்டு நிர்ணயிக்காது உடலியல் மற்றும் உளவியல் முதிர்ச்சி, அறிவு, பொருளாதார பொறுப்புணர்வு, குடும்ப வாழ்வின் அர்த்தம், பிரச்சினை தீர்க்கும் ஆற்றல் என்பன விளங்கும் நிலைக்கு வந்த பிறகு திருமணம் இடம்பெறுவதே ஏற்புடையது.

பொதுவாக சிறுவயதிலேயே திருமணம் செய்து வைப்பதற்கு ஆதாரமாக நபியவர்கள் ஆயிஷா (ரழி) அவர்களை ஒன்பது வயதில் திருமணம் செய்தார்கள் என்பதைக் காட்டுவதுண்டு. இதனை மட்டும் எடுகோளாகக் கொண்டு எவ்வகையிலும் சிறுவயதுத் திருமணத்தை அனுமதிக்க முடியாது. ஏனெனில் நபியவர்கள் சில பெண்களை அப்பெண்கள் நாற்பது வயதைத் தாண்டிய நிலையிலும் திருமணம் செய்திருக்கிறார்கள். அதுமட்டுமன்றி சிறுவயதில்தான் திருமணம் முடித்துக் கொடுக்கப்படல் வேண்டும் என்ற எந்தவித நிர்ப்பந்தமும் இஸ்லாத்தில் இல்லை. சிறுவயதிலேயே திருமணம் முடித்துக் கொடுக்கப்படுவதனால் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய கல்விக்கான, தீர்மானம் எடுப்பதற்கான, தொழில் வாய்ப்புக்கான உரிமைகள் கேள்விக்குள்ளாகின்றன. மேலும் உடல், உள ரீதியான பலவிதமான துன்புறுத்தல்களுக்கும் இச்சிறுமிகள் ஆளாக நேரிடுகின்றன.

இதனை உணர்ந்து கொண்ட பல முஸ்லிம் நாடுகள் தத்தமக்கு ஏற்றவகையில் திருமணத்துக்கான ஆகக் குறைந்த வயதெல்லையினை இருபத்தொன்றாகவும் சில நாடுகள் பதினெட்டாகவும் தீர்மானித்துள்ளன. இதன் மூலம் இஸ்லாத்தின் பெயரில் சிறுவயதிலேயே பெண்கள் திருமணம் முடித்துக் கொடுக்கப்படுவதும் அதன் மூலம் அவர்கள் பாதிப்புக்களுக்கு உள்ளாவதும், அவர்களின் உரிமைகள் மீறப்படுவதும் தடுக்கப்படுகின்றன. இந்த முன்மாதிரிகள் இலங்கையிலும் பின்பற்றப்பட வேண்டிய அவசியத் தேவைப்பாடு காணப்படுகின்றது. முஸ்லிம் பெண்களுக்கும் இலங்கையின் ஏனைய பெண்களைப் போல ஆகக் குறைந்த வயதெல்லையாக பதினெட்டினை நிர்ணயிப்பது இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய கல்வி, திருமணத் தெரிவு, உடல், உள மேம்பாடு என்பவற்றை உறுதிப்படுத்துவதாக அமையும். இத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்த முஸ்லிம்கள் அனைவரும் முன்வர வேண்டும்.

## குடும்ப நிர்வாகம்

"ஆண்களை அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருப்பதுடன் தங்கள் பொருள்களைப் பெண் பாலாருக்குச் செலவு செய்வதனாலும் ஆண்கள்தான் பெண்களை நிர்வகிக்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள்."[14]

இஸ்லாம் கணவனை "கவ்வாம்" பராமரிப்பாளன் என்று கூறுகின்றது. உழைத்துக் குடும்பத்தையும், பிள்ளைகளையும் காப்பாற்றும் பொறுப்பு பெண்ணுக்கு கட்டாயமானதல்ல. குடும்பத்தை பராமரிப்பதற்காக கணவன் பலவாறு சிரமப்பட்டு பொருள் சம்பாதிக்கின்ற போது, அல்லாஹ் அவனுக்கு ஒருபடி உயர்வை வைத்துள்ளான். இது குடும்ப அலகிற்குள் மட்டுமே. அது பெண்ணின் கௌரவத்தையோ, பெண் செய்யும் நல்லமல்களுக்கான கூலியையோ பாதிப்பதில்லை. அதேநேரம், கவ்வாம் என்பது அதிகாரம் செலுத்துவதையோ, அடக்கி வைப்பதையோ, வன்முறையைப் பிரயோகிப்பதையோ குறிப்பதல்ல. பராமரிப்பு ஆணின் பால்நிலைக்கு வழங்கப்பட்ட சிறப்பல்ல. அவன் ஆற்றும் பொறுப்பு. அந்தப் பொறுப்பினை நிறைவேற்றாத ஆணுக்கு அந்தச் சிறப்புக் கிடைப்பதில்லை. ஒரு குடும்பத்தை கணவன் மனைவி இருவரும் இணைந்து செலவழித்து காப்பாற்றும் போது இருவருமே இச்சிறப்பை பெற வேண்டும்.

ஒரு பெண், தன் மீது மார்க்கக் கடமையில்லாத போதும் உழைத்துக் குடும்பத்தை காப்பாற்றினால் அவளும் பராமரிப்பவள்தான். அல்குர்ஆன் வாக்களிக்கும் ஒரு படி உயர்வு அவளுக்கும் உண்டாக வேண்டும்.பெண் எவ்வளவுதான் சிரமப்பட்டு தன் குடும்பத்தை பராமரித்தாலும் அதனை எமது சமூகம் அங்கீகரிப்பதோ உழைத்து காப்பாற்றுவதால் உண்டாகும் உயர்வைக் கொடுப்பதோ இல்லை.

உழைத்து பராமரிக்கும் பொறுப்பை கணவனிடம் கொடுத்த போதும் குடும்ப விவகாரங்களில் இருவரும் மஷூரா எனும் கலந்தாலோசிப்பின் மூலம் முடிவுகளை எடுப்பதை இஸ்லாம் வரவேற்கின்றது. கவ்வாம் என்பதால் குடும்ப நிர்வாகத்தினை ஆண் தன்னிச்சையாக முன்னெடுக்க முடியாது. மனைவியின்

14 அல்குர்ஆன் 4:34

ஆலோசனைகளும் பெறப்பட்டு கூட்டுப் பொறுப்பின் அடிப்படையிலேயே தீர்மானங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

## நடைமுறைச் சிக்கல்கள்

திருமணம் என்னும் ஒப்பந்தத்தில் ஈடுபட ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை காணப்படுகின்றது. அதே போன்று திருமணத்தின் ஏனைய அம்சங்களிலும் இஸ்லாம் பெண்களுக்கு உரிமைகளை வழங்கியுள்ளது. எனினும் சில இறுக்கமான பொருள் கோடல்களாலும், ஆணாதிக்கம் கொண்ட சமூக முறைமைகளாலும் இவை பெண்களிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக பெண் திருமணத்தின் அனைத்து அம்சங்களிலும் இரண்டாம் தரப் பிரசையாக நடாத்தப்படுகின்றாள். ஏனைய சமூகத்தில் பெண்கள் தமது உரிமைகள் தொடர்பில் எவ்வளவோ முன்னேறியுள்ள நிலையில் நாம் ஏன் இன்னும் பெண்களின் மிக அடிப்படை உரிமைகளுக்காய் குரல் கொடுக்க வேண்டியுள்ளது என்பது யோசிக்கப்பட வேண்டியதாகும்.

# அத்தியாயம் 03

# நெருங்கிய வாழ்க்கைத் துணை வன்முறை

## மனைவியை அடிக்கலாமா: ஓர் இஸ்லாமிய நோக்கு

**எம். சி. ரஸ்மின்**

பெண்களுக்கு எதிரான வன்முறையானது வரலாறு நெடுகிலும் இருந்து வரும் சமூகப் பிரச்சினையாகும். இது உடலியல், உளவியல், பொருளியல், உணர்வியல் மற்றும் பாலியல் ரீதியில் இடம்பெற முடியும். ஆண், பெண் இருபாலாருக்கும் இடையிலுள்ள அதிகார சமமின்மையே பெரும்பாலும் இத்தகைய வன்முறை இடம் பெறக் காரணமாகின்றது.[1] இவற்றுள், அதிகமான வன்முறைகள் குடும்ப நிறுவனத்தை அண்டியதாகவும், நெருக்கமான வாழ்க்கைத் துணையாலும்[2] இடம்பெறுகின்றன. இவ்வாறான வன்முறைகளின் போது அதிகளவில் பாதிக்கப்படுபவர்கள் பெண்களாவர்.[3]

வன்முறை சமய, கலாசார, இன மற்றும் தேசிய எல்லைகளைக் கடந்து பெண்கள் மீது பாதிப்புச் செலுத்தி வருகின்றது. உலகளாவிய ரீதியில், முஸ்லிம் சமூகமும் இதற்கு விதிவிலக்கன்று. முஸ்லிம் பெண்களுக்கான சர்வதேச சூறா மன்றத்தின் வன்முறைக்கு எதிரான ஜிஹாத் எனும் நூலில்[4] குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, வன்முறை இலட்சக்கணக்கான பெண்களின் வாழ்க்கையில் ஒரு

1 Bloom, (2008), p.14. 1999 Ending Violence Against Women, Series No 11, Mary Land.
2 Heise, Lori 1994, Gender Based Abuse; The Global Epidemic.
3 UNFPA Strategy and frame work for action to addressing GBV, (2008), 2011, p.7.
4 *வன்முறைக்கு எதிரான ஜிஹாத் (2011)*, Muslim Women's Research and Action Forum, p1

யதார்த்தமாகி, அவர்களை அரசியல், சமய, கலாசார மற்றும் பொருளாதாரத் துறைகளில் முன்னேற விடாது தடுத்துக் கொண்டிருகின்றது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளில், மிகவும் பாரதூரமானது நெருங்கிய வாழ்க்கைத் துணை வன்முறையாகும். அதாவது, கணவன் மனைவியை வன்முறைக்கு ஆளாக்குதலாகும். முஸ்லிம் சமுகத்தைப் பொறுத்தவரை, மனைவியை கணவன் அடித்தல் என்பது பெரும்பாலும் ஒரு வன்முறையாகவோ பிரச்சினையாகவோ பார்க்கப்படுவதில்லை. இது பெண்ணை வன்முறைக்கு உட்படுத்த மார்க்கத்தில் பூரண இடமுண்டு என்ற தவறான நம்பிக்கையின் விளைவாகும். மனைவியை அடித்தல், இஸ்லாத்தில் ஆண்களுக்கு கணவனுக்கு அளிக்கப்பட்ட உரிமை என்றும், குடும்பத்தில் மனைவி தவறு செய்தால், மனைவியை அடித்துத் திருத்துவதையே இஸ்லாம் பரிந்துரைக்கின்றது என்றும் அனேகர் நம்புவதுண்டு. மார்க்கத்தை கற்றறிந்தவர்களுள் சிலரும் இவ்வாறே போதனை செய்கின்றனர். மிக ஆழமாக வேரூன்றியுள்ள இந்த நம்பிக்கையால், மனைவியை அடித்தல் இஸ்லாத்தின் ஒரு பரிந்துரை என்றே பொதுமக்கள் நம்புகின்றனர். தமக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றும் ஆண்களில் பலர் கருதுகின்றனர். இதனால், வன்முறைக்கு உட்படும் பெண்கள் அதுபற்றி உரியவர்களிடம் முறையிட முடியாத நிலை உருவாகியுள்ளது. முஸ்லிம் பெண்கள் தாம் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவது பற்றி முறையிடுவது தவறாகவும் நோக்கப்படுகின்றது.

மனைவியை அடித்தல் தொடர்பான புனித அல்குர்ஆனின் அத்தியாயம் 4:34 பற்றிய தவறான புரிதலின் ஆதிக்கம், வன்முறைகளிலிருந்து விடுபட்டு வாழ்வதற்கான பெண்களின் உரிமையை பல வழிகளில் இல்லாது செய்துள்ளது. அந்தவகையில், இந்தக் கட்டுரை இவ்வசனம் எவ்வாறு தவறாகப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் பொருந்தி வரக்கூடிய திருத்தமான பொருள் கோடல்களையும் ஆராய்ந்து, மனைவியை அடித்தல் பற்றிய இஸ்லாத்தின் உண்மையான நிலைப்பாட்டை தர்க்க ரீதியாக ஆய்வுக்குட்படுத்துகின்றது.

## பின்னணி

*புனித அல்குர்ஆனின் அத்தியாயம் 4:34 பற்றிய உண்மையான தெளிவை பெறுவதற்கு அந்த அத்தியாம் இறக்கப்பட்ட கால சூழ்நிலையை அறிவது முக்கியமானதாகும். இஸ்லாத்தின் வருகைக்கு முற்பட்ட அரேபியாவில் வன்முறை பொது வழக்கமாக இருந்தது. பெண்களை வன்முறைக்கு உட்படுத்துதல் அதில் மிக முக்கியமானது. அக்காலத்தில், மனைவிமாரை அடித்தல், மற்றும் கொலை செய்தல் என்பன அதிகம் இடம்பெற்று வந்துள்ளன. பெண்களுக்கு அந்தஸ்தோ, ஏற்புடைமையோ இருக்கவில்லை. அதனால்தான், பெண் குழந்தைகள் தொடர்பில் தந்தைமார் வெட்கப்பட்டனர்[5]. பெண்கள் வீணான சந்தேகத்தின் பேரில் கடுமையாக தண்டிக்கப்பட்டனர். சில போது, கொலையும் செய்யப்பட்டனர்.[6] திருமணத்தில் பெண்ணின் விருப்பம் என்பது மதிக்கப்படவில்லை.[7] எனவே, பெண்களை அடித்தல் எனும் கருத்தின் தோற்றுவாய் ஆரம்பகால அரேபியாவுக்குரியதாகும்.*

*உலகளாவிய முஸ்லிம் இமாம்கள் சங்கத்தின் அறிஞரான இமாம் அப்துல்லாஹ் ஹசன்[8] வீட்டு வன்முறை பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாட்டை பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார். "ஆரம்பகால மக்காவில் பெண்களை அடித்தல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வழக்கமாக இருந்தது. மக்காவில் வசித்த ஆண்களிடம் பெண்களை அடித்துக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்ளும் ஊக்கம் அதிகமாக இருந்தது. அக்காலப் பெண்களும் தாம் அடிக்கப்படுவதை ஒரு பிரச்சினையாகக் கருதவில்லை. புனித குர்ஆனின் 4:34 இல் முன்மொழியப்படும் படிநிலை அணுகுமுறையை நோக்கும் போது, அரேபியக் குடும்ப நிறுவனத்தில் நிலை கொண்டிருந்த பெண் வன்முறை எனும் பழக்கத்தை படிப்படியாக இல்லாதொழிக்கும் உத்தியை பிரதிபலிக்கின்றது."*

*ஒருமுறை பெண்கள் சிலர் தமது கணவன்மார் தம்மை அடிப்பது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டனர்.*

5 *அல்குர்ஆன் 16:58*

6 Badawi J (1995) Gender Equality in Islam

7 *அல்குர்ஆன் 4:19*

8 see, Abdullah Hasan, The End to Hitting Women: The Qur'anic Concept of Ḍarb ('hitting'), (Imam is an active member of Imams again domestic abuse (IADA), Shari'a consultant, Islamic Shari'a Council.

*அப்போது, நபி (ஸல்) அவர்கள் அக்கணவன்மாரைத் திருப்பி அடிக்கும் படி, அப்பெண்களிடம் கூறினார்கள். பின்னர், அவர்கள் அல்லாஹ்வின் வஹியை எதிர்பார்த்து நின்றார்கள். அப்போதுதான், அல்குர்ஆனின் வசனம் 4:34 இறக்கப்பட்டது. இந்த அல்லாஹ்வின் வஹி (தூது) ஒருவர் மற்றவரை பழிவாங்குவதற்குப் பதிலாக, பொருத்தமான மாற்றீடு ஒன்றை இந்த வசனத்தில் முன்வைத்தது. குடும்ப நிறுவனத்தில் வன்முறையை அப்புறப்படுத்தி அமைதியைக் கொண்டுவருவதே 4:34இன் முக்கிய நோக்கம் என்றே கருத வேண்டும். ஆனால், துரதிஷ்ட வசமாக இஸ்லாத்தின் வருகைக்கு பின்னர் கூட இன்றளவும் பெண்களை அடித்தல் என்கின்ற பாரதூரமான பழக்கம் தொடர்ந்தும் வழக்கத்தில் இருந்து வருகின்றது.*

## 4:34 பற்றி அதிகம் பயன்படுத்தப்படும் தமிழ் மொழி பெயர்ப்பு

> "எந்தப் பெண்கள் விஷயத்தில் அவர்கள் மாறுபாடு செய்வார்களென்று நீங்கள் அஞ்சுகிறீர்களோ, அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள். (அதிலும் திருந்தாவிட்டால்) அவர்களைப் படுக்கையிலிருந்து விலக்கிவிடுங்கள். (அதிலும் திருந்தாவிட்டால்) அவர்களை (இலேசாக) அடியுங்கள். அவர்கள் உங்களுக்கு வழிப்பட்டுவிட்டால், அவர்களுக்கு எதிராக எந்த பழியையும் தேடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக உயர்ந்தவனாகவும், வல்லமை உடையவனாகவும் இருக்கின்றான்."[9]

*இதற்கேற்ப, மேற்குறித்த மொழிபெயர்ப்பை புரிந்து கொள்ள முன்னர், ஒரு விடயத்தை பற்றி அவதானிப்பது முக்கியமானதாகும். இவ்வசனம் மாறுபாடு செய்யும் பெண்கள் பற்றியதாக உள்ளது. இதன் அர்த்தம் ஆண்கள் மாறுபாடு செய்யாதவர்கள் என்பதல்ல. சமகாலத்தில் பெரும்பான்மையான குடும்ப வன்முறைகளில் தோற்று வாயாக இருப்பவர்கள் ஆண்களாவர். பாதிக்கப்படுபவர் களில் அதிகமானவர்கள் பெண்களாவர். முதலில் இந்த யதார்த்தத்தை அறிந்து கொள்வது முக்கியமானதாகும்.*

*புனித அல்குர்ஆன் 4:34 இன் படி முதல் கட்டமாக, மாறுபாடு செய்யக் கூடும் என்ற நிலையில் உள்ள பெண்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும். உபதேசம் பயனளிக்காத*

9 *அல்குர்ஆன் 4:34*

*போது, இரண்டாவதாக, படுக்கையிலிருந்து அவர்களை விலத்தி வைக்க வேண்டும். அதுவும் பயனளிக்காத போது, மூன்றாவது கட்டமாக, மெதுவாக அடிக்க வேண்டும். இதுவே காலாகாலமாக வழங்கப்படும் பொருள் கோடலாகும். இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ழரப என்ற சொல்லையே அடித்தல் என்று பொருள் கொண்டுள்ளனர். இந்த பொருள் கோடல் பிரச்சினைக்குரியதாகும். இனி அது பற்றி நோக்கலாம்.*

## சமூகத்தின் புரிதல்

*2014 ஆம் ஆண்டு, அநுராதபுரத்தில் இடம்பெற்ற சுமார் 25 இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் கலந்து கொண்ட செயலமர்வொன்றில் சமகாலத்தில் அடித்தல் எத்தகைய வகைகளில் இடம் பெறுகின்றது எனக் கேட்கப்பட்டது. அப்போது, சுமார் 15 வகைகளை அவர்கள் பட்டியலிட்டனர். அவற்றில் கன்னத்தில் அடித்தல், உதைத்தல், கம்பால் அல்லது கையில் கிடைப்பதால் அடித்தல், வெட்டுதல், தீயில் கொளுத்துதல், சூடு வைத்தல், சுடு நீர் ஊற்றுதல், கட்டி வைத்தல், தலையில் தடியால் அடித்தல், கழுத்தை பிடித்து நசுக்குதல், அசிட் வீசுதல், பண்ட பாத்திரங்களை வீசி அடித்தல் போன்றன அடங்குகின்றன. இவற்றில் எதனை இஸ்லாம் அனுமதிக்கின்றது எனக் கேட்டபோது, இவற்றில் எதனையும் இஸ்லாம் அனுமதிக்கவில்லை என்றனர்.*

*ழரப என்ற சொல்லுக்கு அடித்தல் என்று பொருள் கொண்டால் மேற்சொன்ன தண்டனை முறைகளை பெண்கள் பொறுத்தாக வேண்டும் என்பதுதான் அர்த்தம். இத்தகைய தண்டனை முறைகளை ஒருபோதும் இஸ்லாம் ஊக்குவித்திருக்க முடியாது. அமைதி, அன்பு, கருணை, பாதுகாப்பு என்பனவற்றை சிறந்த குடும்ப நிறுவனத்தின் பண்பாகக் கருதும் இஸ்லாம் அதே குடும்ப நிறுவனத்தில், பிணக்குகளை தீர்க்க வன்முறையை தீர்வாக முன்மொழிய முடியுமா? கணவனுக்கு மாறுபாடு செய்யக் கூடும் என்ற நிலையில் உள்ள பெண்களை அடிக்கலாம் எனில், மனைவிக்கு ஆண்கள் மாறுபாடே செய்யாதவர்களா? சமகாலத்தில், ஆண்களில் அனேகமானவர்களும் மாறுபாடு செய்கின்றவர்களாக இருக்கும் போது, பெண்களை மாத்திரம் மையப்படுத்தியதாக இந்த வசனத்தை புரிந்து கொள்ளவது யதார்த்தமானதா?*

ழரப எனும் சொல்லுக்கு அடித்தல் என்ற பொருள் கொள்ளப்படுவதை பல நவீன இஸ்லாமிய அறிஞர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அதற்காக முன்வைக்கப்படும் கருத்துக்கள் எவை, ழரப என்பதை எவ்வாறு சரியாகப் பொருள் கோடல் செய்யலாம் என்பதை பின்வருமாறு நான்கு கோணங்களில் நோக்கலாம்.

1. மொழி ரீதியான பொருள் கோடல்
2. குர்ஆனின் ஒட்டுமொத்த சமத்துவப் போதனையுடன் தொடர்புபடுத்தல்
3. நபிகளாரின் சமத்துவத்திற்கான முன்மாதிரியுடன் தொர்புபடுத்தல்
4. இஸ்லாம் ஒரு "சர்வதேச அழைப்பு" என்ற அணுகுமுறை

## 1. மொழி ரீதியான பொருள் கோடல்

வன்முறைக்கு எதிரான ஜிஹாத் (2011) எனும் நூலில் குறிப்பிடப்படுவது போன்று சுமார் 7ஆம் நூற்றாண்டில் பெண்களை தண்டித்தல் என்பது தாராளமாக இடம்பெற்றது. அதற்கு அனுமதி தேவைப்படவில்லை. எனவே, அல்குர்ஆன் 4:34ஐ வைத்துக் கொண்டு, பெண்ணை அடிப்பதற்கான அனுமதியை வழங்கியது அல்லது, இப்பழக்கத்தை தொடர்ந்தும் வைத்திருக்க கருதியது எனக் கொள்ள முடியாது.

அடித்தல் எனும் பொருளில் பயன்படுத்தப்படும் "ழரப" என்ற சொல் அல்குர்ஆனில் பதினேழு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது[10]. அவற்றில் சில பின்வருமாறு,

உதாரணம் கூறுதல் (அல்குர்ஆன் 16:76, 43:57, 2:26, 16:74)
பிரயாணம் செய்தல் (அல்குர்ஆன் 4:101)
அடைத்தல் அல்லது தடையேற்படுத்தல் (அல்குர்ஆன் 18:11)
விலகியிருத்தல் அல்லது நீங்கியிருத்தல் (அல்குர்ஆன் 43:5)
மறைத்துக் கொள்ளல், போர்த்தி விடல் (அல்குர்ஆன் 24:31)
கடலில் அடித்தல் (அல்குர்ஆன் 26:63)
பாறையில் அடித்தல் (அல்குர்ஆன் 2:61)
(இழிவு) பீடித்தல் (அல்குர்ஆன் 3:112)

10 பார்க்க: அப்துல் ஹமீத்: அ. அபூ சுலைமான், பெண்களைத் தண்டித்தல் (தமிழ் மொழி பெயர்ப்பு), மற்றும் Chastising Women: A Means to Resolve Marital Problems?

முதுகில் அல்லது முகத்தில் அடித்தல் (அல்குர்ஆன் 47:27)
வெட்டுதல் (அல்குர்ஆன் 47:4)
(போருக்காக) புறப்பட்டுச் செல்லல் (அல்குர்ஆன் 4:94)
திரை ஏற்படுத்தல் அல்லது சுவர் அமைத்தல் (அர்குர்ஆன் 57:13)
வலக்கையால் அடித்து உடைத்தல் (அர்குர்ஆன் 37:93)
கடலில் அடித்தல்/வழி உண்டாக்குதல். (அல்குர்ஆன் 20:77).
பாறையில் அடித்தல் (அல்குர்ஆன் 2:60).
தலையை மற்றும் விரலை வெட்டுதல் (அல்குர்ஆன் 8:12)
சத்தியத்தை முறிக்காமல், மனைவியை அடிப்பதற்குப் பதிலாக ஒரு பிடி புல்லை எடுத்து சைகையால் அடித்தல் (அல்குர்ஆன் 38:44)

இவ்வாறாகக் குர்ஆனில் "ழரப" எனும் வேர் வினையானது, ஓரிரு இடங்களில் அடித்தல் என்றும் பல இடங்களில் வேறு அர்த்தங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு அடித்தல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது குறிப்பால் உணர்த்தும் விதமாகவும், ஏதாவது ஒரு கருவியுடன் தொடர்புபட்டதாகவும் பயன்பட்டுள்ளது.[11] உதாரணமாக, தண்ணீரில் அடித்தல் (20:77), மலையில் அடித்தல் (2:60), தலையில் அடித்தல் (8:12), (சத்தியத்தை முறிக்கக் கூடாது என்பதால்) புல்லால் சாடை செய்து அடித்தல் (38:44) என்பனவாகும். இவற்றில் அடித்தல் எனும் சொல் மிகவும் நிதானமாக, குறிப்பாக, பொருள் மயக்கமின்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பெண்களை அடித்துத் திருத்துதல் என்ற பொருளில் வந்திருந்தால் குறிப்பாக சொல்லப்பட்டிருக்க வேண்டும். இங்கு குறிப்பாகச் சொல்லப்படவில்லை. எனவே, அல்லாஹ் இந்த வசனத்தின் வாயிலாக மனைவியை அடிப்பதை நோக்காகக் கொள்ளவில்லை என்பது அப்துல்லாஹ் ஹசன் முன்வைக்கும் கருத்தாகும்.[12]

அதேநேரம், ழரப எனும் சொல் விலகிச் செல்லுதல், நீங்கியிருத்தல் என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. புராதன அராபிய இலக்கியங்களில் ழரப என்பது சுமார் 25 இற்கும் அதிகமான பொருள்களில் பயன்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டும் வன்முறைக்கு எதிரான ஜிஹாத் (2011), விலகிச் செல்லுதல் என்பதே சரியான பொருள் கோடல் எனக் குறிப்பிடுகின்றது. உபதேசமும், பிரித்து வைத்தலும்

11 See, Abdullah Hasan, The End to Hitting Women: The Qur'ānic Concept of Ḍarb ('hitting'), P. 11
12 See, Abdullah Hasan, The End to Hitting Women: The Qur'ānic Concept of Ḍarb ('hitting')

பயனளிக்காத போது இருவரும் பிரிந்து செல்லலாம். ஒருவரையொருவர் நீங்கிச் செல்லாம். விலகிப் போகலாம். இது வன்முறையற்ற ஒரு அணுகுமுறையாகும். இது இருவரும் சமத்துவமானவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது. திருமணத்தில் இருவரும் சம கௌரவமானர்கள் என்பதை காட்டுகின்றது. இருவரும் சமமான முக்கியத்துவம் கொண்டவர்கள் என்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது. அதேநேரம், குர்ஆனின் ஒட்டு மொத்த போதனைகளுடனும் இதுவே ஒத்துச் செல்கின்றது. அனேகமான நவீன இஸ்லாமிய அறிஞர்கள் விலகிச் செல்லுதல் அல்லது நீங்கியிருத்தல் என்ற பொருள் மிகவும் பொருந்திச் செல்வதாக கருதுகின்றனர்.

இங்கு கலாநிதி செய்னப் குர்ஆனின் ஒட்டு மொத்தக் கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு பொருள் கொண்டாலும், புனித அல்குர்ஆனுக்கான வாழ்வியல் விளக்கமாக அமையும் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிகளை எடுத்து நோக்கினாலும் குடும்ப வன்முறையை இஸ்லாம் அங்கீகரிக்கவும் இல்லை அதனை ஆதரிக்கவும் இல்லை, மாறாக நிராகரித்துள்ளது என்கின்றார். கலாநிதி செய்னப், கலாநிதி தாஹா ஜாபிர் அல்வானியை மேற்கோள் காட்டி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"பல்வேறு பொருள்கோடல்களுக்கு அப்பால், இந்த வசனம் எந்த வகையிலும் வன்முறையை ஆதரிக்கவில்லை. சமகால சமூக ஒழுங்கைப் பொறுத்தவரை மூன்றாவது பரிந்துரையான (மனைவியை அடித்தல்) என்பதை பிரயோகத்தில் வைத்துக் கொள்ள வேண்டியதில்லை. அன்பு, அமைதி மற்றும் கருணை என்பனவற்றை தக்க வைத்துக் கொள்வதும் உருவாக்குவதும் திருமணத்தின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைய புனித அல்குர்ஆன் முன்மொழியும் பரிந்துரை குறித்த நோக்கத்துடன் முரண்பட முடியாது.[13] இருவரும் விலகிப் போதல், நீங்கிச் செல்லுதல் என்பதையே மூன்றாவது படிநிலையாகக் கொள்கின்றார்.

Sisters in Islam வெளியிட்டுள்ள Are Muslim men allowed to beat their wives ( 1991, 2009) எனும் நூல் இஸ்லாமிய அறிஞர்களான ரபீயுள்ளாஹ் சஹாப் மற்றும் அஹம்மத் அலி ஆகியோர் அடித்தல் என்ற பொருள் கோடலை நிராகரிப்பதை பதிவு செய்கின்றது.

---
13 Zainab, Ibid, P.8

*அடித்தல் என்பதுதான் சரியான பொருள் எனக் கொண்டாலும் இஸ்லாத்தை வரலாற்று நோக்கில் அணுகும் எவரும் இதனை மனைவியை நோவினை செய்வதற்கான அனுமதிப் பத்திரமாகப் பயன்படுத்த முடியாது. குர்ஆன் சமூகத்தின் தேவை கருதி, கால ஓட்டத்தில் சில பழக்கங்களை முற்றாகத் தடை செய்கின்றது. உதாரணமாக குர்ஆனின் ஆரம்ப வசனங்கள் மதுபோதையை முழுமையாகக் தடுக்கவில்லை.[14] ஆனால், பிற்காலத்தில் இறங்கிய அல்குர்ஆன் வசனங்கள் இந்த பழக்கத்தை முற்றாகத் தடை செய்தன.[15] இவ்வாறு, மாறிவரும் சமூக ஒழுங்கிற்கு ஏற்ப இஸ்லாம் இசைந்து சென்றுள்ளது. அவ்வாறெனில், அடித்தல் என்ற ஜாஹிலியப் பழக்கத்தை மாத்திரம் ஏன் இன்னும் இஸ்லாத்தின் பெயரால் வைத்திருக்க வேண்டும்?[16]*

Lelah Bakhtiar (2007) *மிகப் பிரச்சினைக்குரிய தருணங்கள் பலவற்றை எதிர்கொண்ட போதும் நபி (ஸல்) அவர்கள் தம் மனைவியரை ஒரு போதும் அடித்ததில்லை என்பதே அவரது கருத்தாகும். அதேநேரம், ழரப என்பதற்கு அடித்தல் என்று பொருள் கொள்வது புனித அல்குர்ஆனின் தலாக் பற்றிய **2:231** வசனத்துடன் முரண்படுவதாகும் என்கின்றார். தலாக் பற்றிய அந்த வசனம் பின்வருமாறு:*

> (மீளக்கூடிய) தலாக் கூறித் தவணை இத்தா முடிவதற்குள் முறைப்படி அவர்களை (உங்களுடன்) நிறுத்திக் கொள்ளுங்கள் அல்லது (இத்தாவின்) தவணை முடிந்ததும் முறைப்படி அவர்களை விடுவித்து விடுங்கள். ஆனால், அவர்களை உங்களுடன் வைத்துக் கொண்டு அவர்களைத் துன்புறுத்தாதீர்கள். அவர்களிடம் வரம்பு மீறி நடவாதீர்கள். இவ்வாறு ஒருவர் நடந்து கொள்வாரானால், அவர் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்கிறார். எனவே, அல்லாஹ்வின் வசனங்களைக் கேலிக் கூத்தாக ஆக்கி விடாதீர்கள். அவன் உங்களுக்கு அளித்த அருள் கொடைகளையும், உங்கள் மீது இறக்கிய வேதத்தையும், ஞானத்தையும் சிந்தித்துப் பாருங்கள். இவற்றைக் கொண்டு அவன் உங்களுக்கு நற்போதனை செய்கிறான். அல்லாஹ்வை அஞ்சுங்கள் நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் நன்கறிபவனாக இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.[17]

---

14 *அல்குர்ஆன் **2:219, 4:43***
15 *அல்குர்ஆன் **5:93-94.***
16 *பார்க்க பக்கம் **12***
17 *அல்குர்ஆன் **2:231***

*வன்முறைக்கு எதிரான ஜிஹாத் (2011) மேல் குறிப்பிட்ட முரண்பாடு பற்றி பின்வருமாறு விளக்கும். " கணவன்மார் தாம் தமது மனைவியரை விவாகரத்துச் செய்யும் படி கூறுகின்றது. ஆனால், அவர்களை வரம்பு மீறி இடைஞ்சல் செய்வதை அனுமதிக்கவில்லை. கணவன்மாருக்கும் தாம் திருமணம் செய்த மனைவியரை அடிப்பதற்கான அனுமதியை வழங்கியிருக்குமாக இருந்தால் அது திருமணம் செய்வதை விட விவாகரத்துச் செய்வதை அதிகப்படியாக ஊக்குவிப்பதாக அமைந்து விடும். இது மிகத் தெளிவாக இஸ்லாம் விவாகரத்தை விட திருமணத்திற்கு வழங்கும் முக்கியத்துவத்துடன் முரண்படுகின்றது.*

இவ்வாறு தர்க்கரீதியாக நோக்கும் பொழுது பெண்ணை அடிப்பதற்கு வாய்ப்பேயில்லை. மாற்றீடாக, தர்க்கரீதியில் பொருந்தி வரும் விலகிப்போதல், நீங்கிச் செல்லுதல் என்பதையே மூன்றாவது படிநிலையாகக் கொள்ள முடியும்.

## நெருங்கிச் செல்லுதல்

"ழரப" என்ற சொல்லை சிலர் குறியீடாக தொடுதல், நெருங்கிச் செல்லுதல், ஸ்பரிசித்தல், ஆசையை உண்டு பண்ணுதல் போன்ற பொருள்களில் பயன்படுத்தி இஸ்லாம் இறுதித் தீர்வாக இத்தகைய ஒன்றைப் பிரேரிப்பதாக நம்புவதுண்டு. அப்துல் காசிம் முஹம்மத் இப்னு உமர் அல் சமஷ்கரி,[18] ராகிப் அல் அஸ்பரானி[19] போன்றோர் இவ்வாறு கருதுகின்றனர். ஆனால், உபதேசம் செய்தல், படுக்கையில் பிரித்து வைத்தல் என்ற தர்க்க ரீதியான ஒழுங்குடன் இந்தப்பொருள் கோடல் ஒன்றி வருவதில்லை.

## மெதுவாக அடித்தல்

சில இமாம்கள் மெதுவாக அடிக்கலாம் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். ஆனால், மெதுவாக அடித்தல் என்ற கருத்தினைப் புரிந்து கொள்வதில் சிக்கல்கள் உள்ளன. முதல் பிரச்சினை இவை ஏதோ ஒரு விதத்தில் அடிப்பதை அங்கீகரிக்கின்றன. அடிப்பதில் பெரியது சிறியது என்ற பாகுபாடு மேலும் பிரச்சினைக்குரியது. வன்முறையில் சிறியது பெரியது கிடையாது.

---

18 Abu al-Qasim Mahmud ibn Umar al-Zamakhshari, Al-Kashshaaf 'an Haqa' iq at-Tanzil

19 Abul-Qasim Husayn ibn Muhammad al-Raghib al-Isfahani, Al-Mufradat fi Gharib al-Quran

சிலர் நோவினை தராமல் மிஸ்வாக்கால் (பல்துலக்கும் குச்சி) அல்லது கைக்குட்டையால் அடித்தல் என்பதையே "ழரப" எனும் சொல் குறிப்பதாகக் கருதுகின்றனர். தப்ஸீர் அர்ராஸி தடியினால் அடிக்கக்கூடாது. மாறாக சுருட்டிய கைக்குட்டையால் அடிக்கலாம் என விளக்குகின்றது.[20] இமாம் இப்னு கஸீர் மெதுவாக மனைவிக்கு அடிக்கலாம். ஆனால் அது அவளுக்கு நோவினை தருவதாக இருக்கக்கூடாது என்பார்.[21] இமாம் தபரி இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கும் "படுக்கையில் விலக்கி வையுங்கள். அவ்வாறு செய்தும் அவள் தவறிலிருந்து மீளா விட்டால் அவளை அடியுங்கள். அது கடுமையாக இருக்கக்கூடாது. அவளுடைய எலும்பை உடைப்பதாகவும் இருக்கக்கூடாது. சிறிய குச்சியினால் அடிக்கலாம்" என்ற அடிப்படையில் இத்தகைய கருத்துக்களை முன் வைப்பர்.

"அவர்கள் செவிசாய்க்காவிட்டால் அவர்களை அடிக்கக்கூடாது ஆனால், கோபத்தை அதிருப்தியை வெளிப்படுத்தலாம்" என்பது இமாம் குர்துபி அவர்களின் கருத்தாகும். பல ஆண்களிடம் பண்ட பாத்திரங்களை உடைத்தல், கையில் எதிர்ப்படும் பொருட்களை விட்டு எறிதல், பெறுமதி வாய்ந்த பொருட்களுக்கு தீ முட்டுதல் போன்ற மூர்க்கத்தனங்கள் உள்ளன. கோபத்தை வெளிப்படுத்துதல் என்பது இத்தகைய விதத்தில் பொருள் கொள்ளப்பட முடியாது. அதேநேரம், பெண்களுக்கு எதிராக மாத்திரமன்றி, வயோதிபர்கள், சிறுவர்கள், தம் கையில் அதிகாரம் அற்றவர்கள் எந்த தனி மனிதருக்கு எதிராகவும் இவ்வாறாக கோபத்தை வெளிப்படுத்த முடியாது.

இத்தகைய விளக்கவுரைகளை அடிப்படையாகக் கொண்டும் குடும்ப நிறுவனத்தில் பெண் வன்முறைக்கு உட்படுவதை நியாயப்படுத்த முடியாது. ஏனெனில் இவற்றில் அடித்தல் என்பது மறைமுகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள போதும், மனைவிக்கு அடித்து நோவினை செய்தல், காயப்படுத்துதல், மன உளைச்சலுக்கு உட்படுத்துதல் ஆகிய எதனையும் இவை குறிக்கவில்லை. எனவே, நிதானமாக நோக்கும் போது, உபதேசமும் படுக்கையில் பிரிவும் பயனளிக்காத போது மனைவியை நோவினை செய்யாது விலகிச் செல்லலாம் என்பதையே மீண்டும் வலியுறுத்த வேண்டியுள்ளது.

---

20 தப்ஸீர் அர்ராஸி

21 Ibnu Kathir, Tafsir of Ibnu Kathir, Al Firdouse ltd. London 2000

## நூஷூஸ் பற்றிய தெளிவின்மை

*அல்குர்ஆனின் 4:34 உடன் தொடர்பான, மொழி ரீதியான மயக்கத்தைத் தரும் மற்றுமொரு அம்சமாக நூஷூஸ் உள்ளது. இச்சொல் ழூரப (விலகிச் செல்லுதல்) என்பதை எச்சந்தர்ப்பத்தில் பிரயோகிக்க முடியும் என்பதைக் குறிக்கின்றது.*

*நுஷூஸ் என்பதை கீழ்படியாமை[22] தவறான நடத்தை[23] நேர்மையின்மை[24] அப்பட்டமான எதிர்ப்பு[25] மற்றும் அமைதியின்மை ஆகிய பொருள்களில் ஆங்கில மொழிபெயர்ப்புகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மாறுபாடு செய்தல் என்று தமிழ் மொழிபெயர்ப்புகளில் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*இவற்றுக்கேற்ப, கணவனுக்கு கீழ்ப்படியாத, தவறான நடத்தையுள்ள, நேர்மையற்ற, மாறுபாடு செய்கின்ற, அப்பட்டமான எதிர்ப்பினை வெளிப்படுத்தும் பெண்ணை மூன்றாவது கட்டமாக அடிக்கலாம் என்பதே பெரும்பாலும் நடைமுறையில் உள்ள பொருள் கோடலாகும்.[26]*

*இங்கு கணவனுக்கு கீழ் படியாமை, கணவனுக்கு எதிராக தவறான நடத்தையில் ஈடுபடுதல், கணவனுக்கு நேர்மையற்று நடத்தல் மற்றும் கணவனுக்கு அப்பட்டமான எதிர்ப்பை வெளிப்படுத்தல் மற்றும் மாறுபாடு செய்தல் என்பது மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட தவறாகும். இவையாவும் அல்லாஹ்வுக்கு என்று வரவேண்டும் என்பது அமீனா வதூத் போன்றவர்களின் கருத்தாகும்.*

*இதனைப் புரிந்து கொள்ளும் போது, மற்றுமொரு சமூக யதார்த்தத்தை மறைக்க முடியாது. அதாவது, மனைவிக்கு எதிரான கெட்ட நடத்தையுள்ள, மனைவிக்கு நம்பிக்கைத் துரோகம் செய்கின்ற, மனைவிக்கு எதிராக அப்பட்டமான எதிர்ப்பை வெளிப்படுத்தும், மனைவிக்கு மாறுபாடு செய்கின்ற எத்தனையோ ஆண்கள் சமூகத்தில் உள்ளனர்.*

22 Bewley, 1999. P.131,

23 Murad, Badawi & Hutchinson, 2000, P.84,

24 Al-Hilal & Khan, 1993,P.131

25 Hammad, 2007, P.138

26 *பார்க்க, நதா இப்ராஹீம் மற்றும் முஹம்மத் இப்ராஹீம் ஆகியோர் எழுதிய* A Critical Examination of Qur'am 4:34 and Its relevance to Intimate Partner Violence in Muslim Families*, ப.17-18.*

அறியாமைக் காலம் தொடக்கம் இருந்தும் வருகின்றனர். பாவமும் பழியும் சுமத்தி பெண்களை மாத்திரம் கை நீட்டுவது ஆண்கள் புரியும் தவறுகளை அசட்டை செய்வதாகும். வாழ்வில் மாறுபாடு என்பது கணவனுக்கு மாத்திரம் செய்யப்படுவதில்லை. எத்தனையோ மனைவிமாருக்கும் மாறுபாடு செய்யப்படுகின்றது.

இருவரும் சம பங்காளிகள், சுதந்திரமானவர்கள், அதேநேரம் அல்லாஹ்வுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள். இருவரும் தாம் செய்யும் கருமங்களுக்கு அல்லாஹ்வுக்கே பதில் சொல்ல வேண்டும். எனவே, இதனைச் சரியாகப் பொருள் கொள்வதாக இருந்தால், "மனைவி அல்லாஹ்வுக்க கீழ்படியாத போது, அல்லது, அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்கு எதிரான தவறான நடத்தையுள்ள போது அல்லது, அல்லாஹ்வுக்கு அப்பட்டமான எதிர்ப்பினை வெளிப்படுத்தும் போது  மூன்றாவது கட்டமாக அத்தகைய மனைவியிடமிருந்து விலகி விடலாம் என்று பொருள் கொள்ளலாம்.

அத்தோடு, நூஷூஸ் மனைவிக்கு உரியது மாத்திரமன்று. இத்தகைய சந்தர்ப்பம் கணவனுடன் தொடர்புபட்டதாகவும் இருக்கலாம். கணவன் திருமணத்தை முறித்துக் கொண்டு விலகிவிடக் கூடும் என்று மனைவி அஞ்சினால், அத்தகைய சந்தர்ப்பத்தில் தீர்வு காண்பதற்காக இதே வழி முறையை மனைவியும் பயன்படுத்த முடியும்.[27]

இங்கு மற்றுமொரு விடயம் கவனிக்கத் தக்கது. அதாவது, கணவன் என்று வரும்போது நூஷூஸ் என்பதை கீழ்படியாமை, நேர்மையற்ற நிலை, மாறுபாடு செய்தல், அப்பட்டமாக மறுப்புத் தெரிவித்தல் என்று யாரும் சொல்வதில்லை. இது பெண் மாத்திரம்தான் தவறு செய்பவள், ஆண்கள் தவறே செய்வதில்லை எனும் சிந்தனையின் வெளிப்பாடாக உள்ளது. இவ்வாறான எண்ணக்கருக்கள் இஸ்லாமிய மூலாதாரங்களை மொழிப்படுத்தியவர்களின் தனிப்பட்ட கலாசார நியமங்கள் மற்றும் ஆண் முதன்மை சிந்தனை ஆகியவற்றின் பாதிப்பு காரணமாக ஏற்பட்டதாகும்.

மொழியியல் ரீதியாக நூஷூஸ் என்றால் உட்கார்ந்திருக்கும் நிலையில் அல்லது படுத்திருக்கும் நிலையில் அக்குறிப்பிட்ட இடத்திலிருந்து செல்லும் எண்ணத்தோடு "எழுந்திருத்தல்"

27 அல்குர்ஆன் 4:128

என்பதாகும். இத்தகைய பொருளில் குர்ஆனிலும் நூஷூஸ் பயன்படுத்தப்பட்டுள்ளது.[28] அப்படியானால், நூஷூஸ் என்பதன் அர்த்தம் திருமணத்தை முறித்துக் கொள்ளும் நோக்கோடு மனைவி குடும்பத்தை விட்டு வெளியேற முற்படுதல் என்பதாகும்.

## 2. குர்ஆனின் ஒட்டுமொத்த சமத்துவப் போதனையுடன் தொடர்புபடுத்தல்

திருமணத்தை அல்லாஹ் ஆகுமாக்கியுள்ளான். அவன் சகலவற்றையும் சோடிகளாகப் படைத்துள்ளான்.[29] ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் சட்டரீதியான உறவின் மூலம் காத்திரமான சமூகமொன்றை உருவாக்கும் நோக்கில் அல்லாஹ் மனித வர்க்கத்தையும் சோடிகளாகப் படைத்துள்ளான்.[30] திருமணத்தில் இணையும் இருவரும் ஒருவருக்கொருவர் ஆறுதல் பெறும்படி உவப்பையும் கிருபையையும் வைத்துள்ளான்.[31] ஆணை பெண்ணின் அதிகாரியாக அன்றி பராமரிப்பாளனாக ஆக்கியுள்ளான்[32].

கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உற்ற பாதுகாப்பாக இருக்க வேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. இதனையே "..அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும் நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள்"[33] என்கின்றது. அல்குர்ஆன் "....உங்களுக் கிடையே அன்பையும் கருணையையும் உண்டாக் கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்.."[34] என்கின்றது. எனவே, நல்ல கணவன் மனைவியரிடத்தில் கருணையும் அன்பும் இயல்பாக அமையப் பெறுவதாகும். இவ்வாறு, அன்பும் அந்நியோன்யமும் நிறைந்த திருமண வாழ்வுடன் வன்முறையை எவ்வாறு தொடர்புபடுத்த முடியும்?

அவுஸ்திரேலியாவின் காடிப் பல்கலைக் கழகத்தின் நதா இப்ராஹீம் மற்றும் அப்துல்லாஹ் ஆகியோர் எழுதிய A Critical Examination of 3:34 and Its relevance to Intimate Partner Violence in Muslim Families எனும் ஆய்வுக் கட்டுரை புனித அல்குர்ஆனின் சுமார்

28 அல்குர்ஆன் 58:11. 2:259

29 அல்குர்ஆன் 51:49, இதே பொருளை அல்குர்ஆன் 50:7, மற்றும் 22:5 ஆகியவற்றிலும் காணலாம்

30 அல்குர்ஆன் 53:45. இதே கருத்து வெளிப்பாட்டை 78:8, 36:36 ஆகியவற்றிலும் காணலாம்

31 அல்குர்ஆன் 30:21

32 அல்குர்ஆன் 2:187, மற்றும் 229-237, 4:19 மற்றும்25, 9:71, 30:21

33 அல்குர்ஆன் 2:187

34 அல்குர்ஆன் 30:21

நான்கு வசனங்களை[35] மேற்கோள் காட்டி திருமணம் எனும் நிறுவனத்தின் வாயிலாக அமைதி, பாதுகாப்பு, ஊக்கமளித்தல், சமாதானம் அல்லது அமைதி, அன்பு, நீதி, கருணை, மற்றும் இரக்கம் ஆகியன உருவாக்கப்பட வேண்டும் என்கின்றனர். இவையாவும் சற்றும் வன்முறையற்ற ஒரு நிறுவனமாகவே குடும்பத்தைக் கட்டமைக்கின்றன. அத்தோடு, குடும்பத்தில் ஆன்மீக பலத்தையும் மானசீக நலனையும் ஏற்படுத்துவதாக உள்ளன. இத்தகைய நற்பண்புகள் யாவற்றையும் நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டியும் உள்ளார்கள்.[36]

இஸ்லாத்தைப் பொறுத்த வரையில், குடும்ப அங்கத்துவம் என்பது இரு தரப்பினருக்கும் சுதந்திரமானது. அதில் அடக்குமுறை, அநீதி, வன்முறை, பலவந்தம், துஷ்பிரயோகம் என்பனவற்றுக்கு இடமில்லை. ஏதேனும் ஒரு கட்டத்தில் பாதகம் விளையும் எனக் காணும் போது விவாக விடுதலை பெறமுடியும். இருவருக்கும் இந்த உரிமை உண்டு. கணவன்மாருக்கு "தலாக்" விவாகரத்து செய்து கொள்ளவும், மனைவியருக்கு "குல்உ" மணவிடுதலை பெற்றுக் கொள்ளவும் இடமுண்டு. இது வன்முறைக்கு உட்பட்டு காலாகாலம் வாழ்வதைவிட பாதிப்புக் குறைந்ததாகும்.

இந்தச் சர்ச்சை பற்றிய மிக ஆழமாக ஆய்வொன்றினை மேற்கொண்ட கலாநிதி அப்துல் ஹமீத்[37] அபூஸுலைமான் பின்வருமாறு குறிப்பிடுவார். "அடிப்பதன் விளைவாக துயரம், வேதனை, அவமானம், இழிவு, உடல் உபாதை என்பனவே ஏற்படுகின்றன. அவ்வாறாயின் இது, கணவனது விருப்புகளுக்கு மனைவியை அடங்கிச் செல்ல வைக்கும் ஓர் உபாயமாகவே அமையும். உபாதையையும், துயரங்களையும் விளைப்பதாயின், வயது வந்தவர்களுக்கிடையான பரஸ்பர உறவின் அர்த்தம் என்ன? முஸ்லிம் மனைவியானவள் திருமண பந்தத்திலிருந்து விடுதலை கிடைக்காதவளா?

ஆக, தனது கணவனின் அடாவடித்தனங்கள் அனைத்தையும் பொறுத்துக் கொண்டு, அவனுக்குக் கீழ்படிந்து நடப்பதை வலியுறுத்துவதாகவே இது அமையும். இதனை நாம் ஏற்றுக்

35 அல்குர்ஆன் 2:187 மற்றும் 229-237, 4:19 மற்றும் 25, 9:71, 30:21

36 For further reading, see Jamil, 2007

37 இவர் 1936 இல் மக்காவில் பிறந்தவர். இவர் சவுதி அரச திட்டமிடல் கமிட்டியின் செயலாளராகவும், முஸ்லிம் சமூக விஞ்ஞானிகள் சங்க ஸ்தாபகராவும், மலேசிய சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக் கழகத்தின் முதல்வராகவும் மன்னர் மஸ்ஊத் பல்கலைக் கழக அரசியல் துறைத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

கொள்வதாயின், திருமண உறவுகளில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, துயரத்தை, வேதனையை, அவமானத்தை, இழிவைக் குறிக்கும் "தண்டித்தல்" என்பதனைத் தக்கதொரு சாதனமாக நாம் ஏற்க வேண்டிவரும்.[38]

இஸ்லாம் குடும்ப வாழ்வில் நற்பண்புகளை ஊக்குவிக்கின்றது. உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவியரிடத்தில் நல்ல பண்புகளை உடையவர் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.[39] இது குடும்ப வாழ்வில் நற்குணம் பேணப்பட வேண்டும் என்பதையே குறிக்கின்றது. இதனால்தான் கணவன், மனைவியிடத்தில் ஒரு விடயத்தை வெறுத்தால் மற்றுமொன்றை விரும்பட்டும் என நபி (ஸல்) அவர்கள் எதிர்பார்த்தார்கள். அந்த வகையில், நல்ல பண்புடன் இருத்தல் என்பதும் குடும்ப நிறுவனத்தின் முக்கியமான பண்புகளில் ஒன்றாகும். இவ்வாறான நற்பண்புகளைக் கொண்ட குடும்ப நிறுவனத்துக்குள் வன்முறையை முரண்பாட்டுத் தீர்வாகக் கொள்ள முடியாது.

ஆன்மீக மற்றும் சமூக வாழ்வைப் பொறுத்தவரை, இரு பாலாரையும் அல்லாஹ் தனது பிரதிநிதியாகப் படைத்துள்ளான். ஒரே மூலத்திலிருந்து ஆணையும் பெண்ணையும் படைத்த அல்லாஹ்[40] ஒருவர் மற்றவரின் உற்றதுணை, பாதுகாவலர் (Wilayah) என்கின்றான். நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் விடயத்தில் இருவரும் சம பங்காளிகள் என்கின்றான்.[41] அது மாத்திரமன்றி,

> " உங்களில் (ஆணோ பெண்ணோ) ஒருவர் மற்றொருவரில் உள்ளவர்தான்"[42]
>
> " நம்பிக்கை கொண்ட ஆண்களும், நம்பிக்கை கொண்ட பெண்களும் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாய் இருக்கின்றனர். ஒருவர் மற்றவரை நன்மை செய்யும் படி தூண்டியும் பாவம் செய்யாது தடுத்தும்,
>
> தொழுகையைக் கடைப்பிடித்து, ஸக்காத்தும் கொடுத்து வருவார்கள்"[43] என்கின்றது அல்குர்ஆன்.

38 பார்க்க: அப்துல் ஹமீத்: அ. அபூசுலைமான், பெண்களைத் தண்டித்தல் (தமிழ் மொழிபெயர்ப்பு), மற்றும் பார்க்க, Chastising Women: A Means to Resolve Marital Problems?

39 சுனன் திர்மிதி 1162

40 அல்குர்ஆன் 2:30

41 அல்குர்ஆன் 9:71

42 அல்குர்ஆன் 3:195

43 அல்குர்ஆன் 9:71

இவை யாவும் ஆண், பெண் இருவரதும் தொடர்பு கௌரவமானது, பொறுப்பு வாய்ந்தது, நெருக்கமானது, அன்பு மற்றும் கருணை ஆகிய பண்புகளைக் கொண்டது என்பதை எடுத்துக் காட்டுவதாகும். எனவே, இங்கும் உபதேசித்தல், படுக்கையை விட்டு விலகியிருத்தல் ஆகிய இவ்விரு அணுகுமுறைகளும் பயனளிக்காதபோது, மனைவியை அடித்தல் என்பதை விட, மனைவியை விட்டு விலகிச் செல்லுதல் என்ற பொருள் கோடலே மிகவும் பொருத்தமானதாக உள்ளது.

## 3. நபிகளாரின் சமத்துவத்திற்கான முன்மாதிரியுடன் தொடர்புபடுத்தல்

குர்ஆனிய பொருள்கோடல்களின் போது கற்றறிந்த உலமாக்கள் கையாளும் இரண்டாவது அடிப்படை குர்ஆனுக்கு விளக்கவுரையாக உள்ள முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்வியல் தத்துவத்திலிருந்தும் முன் மாதிரியிலிருந்தும் பொருள் கோடுவதாகும்.[44]

நபிகளாரின் வாழ்வியல் முன்மாதிரி பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

> **அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன்மாதிரிகள் இருக்கின்றன.**[45]

> **மேலும் (நபியே) நிச்சயமாக நீர் மிக உயர்ந்த மகத்தான நற்குணம் உடையவராக இருக்கின்றீர்**[46]

அதே நேரம், நற்குணங்களைப் பூர்த்தி செய்வதற்காக அன்றி நான் அனுப்பப்படவில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.[47] இவற்றை வைத்துப் பார்க்கும் போது, நபி (ஸல்) அவர்களிடம் அழகிய முன்மாதிரிகள் உள்ளன. பண்பிலும் நற்குணத்திலும் அவர் சிறந்து விளங்கினார். அவரைப் பின்பற்றி வாழ்வது சகல முஸ்லிம்கள் மீதும் கடமையாகும். அத்தகைய நபிகளாரின் வாழ்வில் மனைவியை, வேறு ஒரு பெண்ணை அடித்தமைக்கான எந்த ஒரு சான்றும் கிடையாது.

---

44 Tafsir bil Ma'thur

45 அல்குர்ஆன் 33:21

46 அல்குர்ஆன் 68:4

47 முஸ்னத் அஹ்மத் 8729

*நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின் ஆயிஷா (ரழி) தமது கணவரைப் பற்றிக் கூறும் போது “அவருடைய நற்பண்புகள் குர்ஆன் ஆகும்” என்றார்.*[48] *புனித அல்குர்ஆனின் வழிகாட்டலின் பிரகாரம் அவரது வாழ்க்கை அமைந்திருந்தமையையே இது குறிக்கின்றது. அடித்தலை அல்லாஹ் ஆகுமாக்கி, அல்குர்ஆன் அதனை விதியாக்கியிருந்தால் நபி (ஸல்) அவர்கள் அதனைப் பயன் படுத்தியிருக்க முடியும். நபியவர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தியிராத, அங்கீகரித்திராத அடித்தல் எனும் பண்பை மார்க்கத்தின் பெயரால் வைத்திருப்பதன் மூலம் யாருடைய நலன் பேணப்படுகின்றது? வன்முறையை எவ்வாறு நற்குணத்துடன் தொடர்புபடுத்துவது?*

*நல்ல பண்புகளுடன் நடந்து கொள்வதைப் பற்றி பல நபிமொழிகள் உள்ளன. நாவினாலும் கரத்தினாலும் மற்ற வரை துன்புறுத்தாதவரே உண்மையான முஸ்லீமாவார்.*[49] *இன்று, உளவியல் ரீதியாகவும் உடலியல் ரீதியாகவும் வன்முறைக்கு உட்படும் பெண்களின் எண்ணிக்கை தினமும் பெருகிக் கொண்டிருக்கின்றது. காதிநீதிமன்றங்களில் நிறைந்திருக்கும் வழக்குகளை ஆய்வுக்குட்படுத்தினால் பெண்கள் எவ்வாறு துன்புறுத்தப்படுகின்றார்கள் என்பதை நன்கு அறிய முடியும்.*

> உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவியருக்குச் சிறந்தவர் (இப்னு மாஜா).
>
> அத்தோடு. "நபி (ஸல்) அவர்கள் தமது கரங்களால் ஒரு பெண்ணையோ அல்லது குழந்தையையோ அடித்ததது கிடையாது" ( முஸ்லிம்).

*நபி (ஸல்) அவர்கள் பெண்களை அடிப்பதை தடுத்துள்ளார்கள்.*[50] *ஆயிஷா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் தன் மனைவிமாரையோ பணியாட்களையோ ஒருபோதும் அடித்ததில்லை*[51] *என்று கூறியுள்ளார். நபி (ஸல்) அவர்கள் மனைவியை அடிப்பவர்களை இழிவுபடுத்திக் கூறியுள்ளார்கள். “ஒட்டகத்தை அடிப்பது போன்று தன் மனைவிமாரை அடித்து விட்டு பின்னர் எவ்வாறு வெட்கமில்லாமல் அவர்களை தழுவிக் கொள்கின்றார்கள்.”*[52] *பெண்களை அடிக்கும் குணவியல்பை நபி (ஸல்)*

48 *முஸ்னத் அஹமத் 24040*
49 *ஸஹீஹ் முஸ்லிம் 60*
50 Asad Mohamed, (1980) The Message of Quran Gibralter, p 110
51 *பத்ஹ், அல்-பாரி, பாகம்.-9, ப.249*
52 *ஸஹீஹுல் புகாரி 5695*

அவர்கள் வெறுப்புடன் நோக்கியுள்ளமையை இது நன்கு உணர்த்துகின்றது.

பெண்கள் பண்புள்ள கணவனுடன் வாழ வேண்டும் என்பதையே நபி (ஸல்) அவர்களும் நாடியுள்ளனர். அடிக்கும் இயல்புள்ளவர் விடயத்தில் அவதானமாக இருக்கும்படி நபி (ஸல்) அவர்கள் ஒரு பெண்ணை எச்சரித்துள்ளார்கள். பாத்திமா பின்த் கைஸ் அறிவிக்கின்றார், நபி (ஸல்) அவர்கள், அபூ ஜஹ்மைப் பொறுத்தவரை அவர் பெண்களை அடிக்கும் இயல்பு கொண்டவர். நீங்கள் உசாமாவைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்றார்.[53] இதிலிருந்து பெண்களை அடிக்கும் குணவியல்புள்ளவர்களை திருமணம் செய்வதை நபி (ஸல்) அவர்கள் விரும்பவில்லை என்பதையும் உணர முடிகின்றது.

நபியவர்களின் திருமண வாழ்வில் மிகக் கஷ்டமான முரண்பாடுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களிலும் அடித்தல் என்கின்ற அணுகுமுறையைப் பின்பற்றவில்லை. குர்ஆன் பெண்ணை அடிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கியிருந்தால் அல்லது ஊக்குவித்திருந்தால் அதனை நபி (ஸல்) அவர்கள் பிரயோகித்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் ஒரு போதும் அவ்வாறு செய்ததில்லை.

பெண்களை உடலியல் ரீதியாக துன்புறுத்திய ஆண்களை நபி (ஸல்) அவர்கள் விவாகரத்துச் செய்ய வைத்துள்ளமைக் கான சான்றுகளும் உண்டு. ஹபீபா பின்த் சஹ்ல் எனும் பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்து கணவனான தாபித் தன்னை அடித்து விட்டதாக முறையிட்டார். அவருடன் திருமணத்தில் நீடிக்க முடியாது என்றார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் உமக்குரியதை எடுத்து விட்டு அவளை விடுதலை செய்து விடும் என்றார்கள்.[54] வருந்திய நிலையில் பெண்கள் திருமணத்தில் நீடிப்பது அவர்களுக்குக் கடமையில்லை என்பதை இந்த நபி மொழி எடுத்துக்காட்டுகின்றது.

இவை யாவும் நபிகளாரின் வாழ்வில் "அடித்தல்" எனும் நடத்தை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதையும் அடித்தலை அவர்கள் ஊக்குவிக்கவில்லை என்பதையும் நபிகளார் தன் மனைவியரையோ வேறு பெண்களையோ அடிக்கவில்லை என்பதையும் எடுத்துக்காட்டுகின்றன.

---

53 ஸஹீஹ் முஸ்லிம் 1480
54 சுனன் அத்திர்மிதி, 2200

## 4) இஸ்லாம் ஒரு "சர்வதேச அழைப்பு" என்ற அணுகுமுறை

*இஸ்லாம் ஒரு சர்வதேச அழைப்பாகும். எந்தவித பாரபட்சமுமின்றி அனைத்து மக்களுக்கும் பொருந்தக் கூடிய போதனைகளைக் கொண்டதாகும். அந்த வகையில், அடிப்படை மனித விழுமியங்கள், மனித உரிமைகள், மானுட தார்மீகம், சமூக ஒழுக்கம் என்பனவற்றை பேணும் சமயமாகவே இஸ்லாம் இருக்கின்றது.*

*பெண்கள் மீதான வன்முறை மிகவும் பரவலாகப் பேசப்பட்டு சட்டரீதியாக அதனை தடை செய்ய அனைத்து நாடுகளும் போராடி வரும் இன்றைய காலகட்டத்தில், மனைவியை அடிப்பதை நியாயப்படுத்தும் பொருள்கோடல் மூலம் அல்குர்ஆனை சர்வதேச அழைப்பாக முன் வைக்க முடியாதுள்ளது. 1500 ஆண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் பெண்களுக்கு உரிமைகளை வழங்கியது என்பதில் பெருமிதம் கொள்ளும் நாம் உலகெங்கும் ஒரு குற்றமாகக் கருதப்படும் மனைவியை அடிக்கும் வன்முறைச் செயலை, நபியவர்கள் வெறுத்த செயலை சமயத்தின் பெயரால் ஆண்களின் உரிமை என்று கருதுவது வேதனைக்குரியதாகும்.*

*அல்குர்ஆன் அடிமைகளுக்கு விடுதலை அளிப்பதையும், உரிமைகளை வழங்குவதையும் மிகவும் சிலாகித்துப் பேசுகின்றது. நபியவர்களும் அடிமை விடுதலையை மிகவும் தூண்டினார்கள். இருந்தும் அடிமைகளை வைத்திருத்தல் இஸ்லாத்தில் தடை செய்யப்படவில்லை. ஆனால், இன்றைய காலகட்டத்தில் ஒருவன் சக மனிதனை அடிமையாக வைத்திருப்பதனை முஸ்லிம்கள் உட்பட எவருமே அங்கீகரிப்பதில்லை. அல்குர்ஆனின் நோக்கத்தை உணர்ந்து அடிமை முறையினை அப்படியே நீக்கி விட்டோம். இதே மாதிரி மனைவியை அடித்தல் என்பதும் மனித உரிமை மீறல் மாத்திரமன்றி, இஸ்லாம் ஒரு சர்வதேச அழைப்பு என்பதை சவாலுக்குட்படுத்துகின்றது என்ற அடிப்படையில் அப்படியே நீக்கிவிட முடியும்.*

*பெண்களை உடல், உள ரீதியாக மிகவும் பாதிக்கும் இந்த செயற்பாட்டை அல்குர்ஆனின் போதனையாக் கருதுபவர்கள் இஸ்லாத்திற்கோ, வன்முறைக்குள்ளாகி வேதனையுறும்*

பெண்களுக்கோ நன்மையைச் செய்கிறார்கள் என்று கருத முடியாது. வன்முறையை நியாயப்படுத்தும் இத்தகைய நிலைப்பாட்டினால்தான் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறிமுறைகளும் செயற்றிறன் அற்றிருக்கின்றன.

## முடிவுரை

கலாநிதி செய்னப் ஜாபிர் அல்வானி குறிப்பிடுவது போன்று, பெண்களுக்கு மனித மற்றும் சமூக அந்தஸ்துக் கொடுக்கப்படாமல், வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட போது அல்குர்ஆன் பகிரங்கமாக ஆணும் பெண்ணும் சமத்துவமானவர்கள் என்பதை அறிவித்தது. சாதி, பால்நிலை, இனம் மற்றும் இன்னோரன்ன வித்தியாசங்களைக் கடந்து மனிதர்கள் யாவரும் சம கௌரவத்துடனும் பெறுமானத்துடனும் படைக்கப்பட்டதாகக் கூறியது.[55] இது பெண்களின் வாழ்வியல் தொடர்பாக ஒரு சமூக மாற்றத்தை வேண்டி நிற்கும் அணுகு முறையாகவும் உள்ளது. வன்முறையிலிருந்து சமத்துவத்தை நோக்கியதாக இந்த அணுகுமுறை உள்ளது. இங்கு வன்முறை காலாவதியானது என்பதும் சமத்துவம் மேலோங்குவதும் அவதானிக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக, மொழி ரீதியாகவும் அடித்தல் என்ற பொருள் கோடல் பொருந்தி வரவில்லை. விலகிப் போதல் அல்லது நீங்கிச் செல்தல் என்பதே அதிகம் பொருந்தி வருகின்றது. இஸ்லாமிய குடும்ப கட்டமைப்பின் அத்திவாரம் அன்பு, இரக்கம், அமைதி, புரிந்துணர்வு ஆகும். அங்கு வன் முறைக்கு இடமில்லை. அல்குர்ஆனின் ஒட்டுமொத்த போதனைகளுக்கும் நபி (ஸல்) அவர்களின் அழகிய வழி காட்டல்களுக்கும் அமைவாக நோக்கும் போது மனைவியை அடித்தல் என்பது முற்றிலும் இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு எதிரானது என்பது உறுதியாகின்றது.

காலாகாலமாக இருந்து வரும் பெண் வன்முறை, முஸ்லிம் பெண்களை பல வழிகளிலும் வலுவிழக்கச் செய்துள்ளது. பெண்களின் ஆற்றல்களை மங்கச் செய்துள்ளது. வன் முறையை ஒரு பிரச்சினையாகக் கருதாத நிலை உருவாகியுள்ளது. இதனால் பாதிக்கப்படும் பெண்கள்

55 Zainab Alwani, Domestiv violence Islamic perspective, P.1
மேலும் பார்க்க அல்குர்ஆன் 4:1

வாய்மூடி இருக்க வேண்டியுள்ளது. பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான பிரகடனத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கான வரைவிலக்கணமாக "உடலியல், பாலியல், உளவியல் ரீதியான பாதிப்பையும் வேதனையையும் ஏற்படுத்தக் கூடிய அல்லது ஏற்படுத்தும் மிரட்டல், பலவந்தப்படுத்தல், தன்னிச்சையாக அவர்களது சுயாதீனத்தை மறுத்தல் போன்ற எந்தவகையான பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் செயல்கள், தனிப்பட்ட வாழ்விலோ, பொது வாழ்விலோ நடைபெறல்" என குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாம் மிகத் தெளிவாக இத்தகைய வன்முறைகளிலிருந்து பெண்களை பாதுகாக்க வழி காட்டித் தந்துள்ளது. எனவே, அடித்தல் எனும் பழக்கத்தை மார்க்கத்தின் பெயரால் தக்க வைத்துக்கொள்வதோ அல்லது ஊக்கப்படுத்துவதோ கட்டாயமாக தடுக்கப்படவேண்டும்.

# அத்தியாயம் 04

## இஸ்லாத்தில் பலதாரத் திருமணம் : ஒரு பன்முக நோக்கு

எம். பீ. எம். பிர்தௌஸ் (நளீமி), எம். சீ. எஸ். ஷாதிபா (அல்-ஆலிம்), எம். வை. மின்னதுல் சுஹீறா

> "ஒரு பெண்ணையே (மணந்து கொள்ளுங்கள்)"[1]
>
> "நீங்கள் எவ்வளவு விரும்பியபோதும் உங்கள் மனைவி மாருக்கிடையில் நீதியை நிலைநாட்ட சக்தி பெறமாட்டீர்கள்"[2]

### அறிமுகம்

*துரதிஷ்டவசமாக, பலதாரத் திருமணம் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாடு பல மட்டங்களில் தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய தவறான புரிதல்கள் முஸ்லிம்களிடமும், முஸ்லிமல்லாதவர்களிடமும் காணப் படுகின்றன.*

*இஸ்லாம் நெறிப்படுத்திய பலதாரமணம் பெண்களின் உரிமைகளுக்கு சவாலாக இருக்கின்றதா? இது ஆண்களின் நலனைக் குறித்து ஊக்குவிக்கப்பட்ட ஒன்றா? அல்லது, சகல ஆண்களுக்கும் பரிந்துரைக் கப்பட்ட ஒன்றா? அல்லது அனுமதிக்கப்பட்டதா? என்பன தொடர்பான கருத்தியல் மயக்கங்கள் இன்றும் சமூகத்தில் உள்ளன. இஸ்லாம் பலதாரத் திருமணம் தொடர்பில் கொண்டுள்ள உண்மையான நிலைப்பாட்டினை தெளிவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

---

1 *அல்குர்ஆன் 4:3*
2 *அல்குர்ஆன் 4:129*

## இஸ்லாத்தில் பலதாரத் திருமணம்

> "அநாதைப் பெண்களைத் திருமணம் செய்து அவர்களிடம் நீங்கள் நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தீர்களானால், உங்களுக்குப் பிடித்தமான பெண்களை மணந்து கொள்ளுங்கள் இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நன்னான்காகவோ. ஆனால், நீங்கள் (இவர்களிடையே) நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தால் ஒரு பெண்ணையே (மணந்து கொள்ளுங்கள்), அல்லது உங்கள் வலக்கரங்களுக்குச் சொந்தமான (ஓர் அடிமைப் பெண்ணைக் கொண்டு) போதுமாக்கிக் கொள்ளுங்கள். இதுவே நீங்கள் அநியாயம் செய்யாமலிருப்பதற்குச் சுலபமான முறையாகும்."[3]

*இதுவே பலதார திருமணத்துக்கு ஆதாரமாகக் காட்டப்படும் குர்ஆனிய வசனமாகும். இது இறக்கப்பட்ட பின்னணி மிக முக்கியமானது. உஹது யுத்தத்தில், முஸ்லிம்களில் பலர் ஷஹீதானார்கள். இதனால் பல பெண்கள் தமது கணவர்களை இழந்தனர்.[4] அப்பெண்கள் பெரும்பாலும் அல்லது முற்றிலும் தமது கணவர்களிலேயே தங்கி வாழ்பவர்களாக இருந்தனர். இந்தக் காலப்பகுதியில் ஒரு குடும்பத்தில் பல பிள்ளைகள் காணப்பட்டதனால் அவர்களையும் பராமரிக்க யாரும் அற்ற நிலை தோன்றியது.*

*இச்சூழ்நிலையில் உஹது யுத்தத்தின் விளைவாக கணவர்களை இழந்த பெண்களதும், தந்தைகளை இழந்த பிள்ளைகளதும் நலனை உறுதி செய்ய வேண்டிய தேவை காணப்பட்டது. குறிப்பாக அச்சந்தர்ப்பத்தில் இருந்த பெண்கள், பிள்ளைகளின் நலனைப்பேணவும், அவர்களுக்கு சமூக அந்தஸ்து வழங்கவும் இவ்வசனம் இறக்கப்பட்டது. யுத்தத்தில் கணவனை இழந்த பெண்களுக்கு தகுந்த பாதுகாப்பை வழங்கி, சமூக நீரோட்டத்தில் அவர்களின் நன்மதிப்பைப் பேணிக்கொள்ளும் எதிர்பார்ப்பு இதன் பின்னணியில் இருந்தது.[5] எனவேதான் இது ஒரு சமூகச் சூழ்நிலைக்காக அனுமதிக்கப்பட்ட ஒன்று ஆகும். இது பற்றிக் கலாநிதி முஹம்மத் அல்-பாஹிஹ் தன்னுடைய நூலில்*

---

3 *அல்குர்ஆன் 4:3*

4 *இன்றைய காலத்தில் விதவை என்ற பதம் பாவிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

5 See, Maulana Wahithutheen Khan, (1963), Polygamy and Islam, pp.3-4, or, Abd Al-Ati, Hammuda, Islam in Focus, The Canadian Islamic Center, Edmonton Alberta, Canada, p.103..

*குறிப்பிடும் போது "பலதாரமணம் இஸ்லாத்தில் கட்டாயக் கடமையானதல்ல (Waajib). இது சமூகத்தில் உள்ள ஒரு இயல்பான கட்டமைப்பு (rukhsah) மாற்றமடையும்போது, பிரச்சினையான அச்சமூகச் சூழ்நிலையினைக் கையாள உருவான ஒரு நிவாரணம்" என்கிறார்.*[6]

*இதனை நடைமுறைப்படுத்தும் வகையிலே முஹம்மது நபி (ஸல்) அவர்கள் விதவைப் பெண்களைத் திருமணம் செய்தார்கள். இச்செயற்பாடு கணவனை இழந்த பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் ஒழுங்கான முறையில் திருமணம் முடிக்கப்பட வேண்டும், ஒரு மனைவியாய் அப்பெண்ணுக்கு சகல உரிமைகளும் உரித்தாக வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமைந்தது.*

## பலதாரத் திருமணத்துக்கான நிபந்தனைகள்

*அல்குர்ஆனின் முதலாவது நிபந்தனை மனைவிமாருக்கிடையில் நீதமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதாகும். இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.*

> (மு..மின்களே) நீங்கள் எவ்வளவுதான் விரும்பினாலும், மனைவியரிடையே நீங்கள் நீதம் செலுத்த சாத்தியமாகாது. ஆனால் (ஒரே மனைவியின் பக்கம்) முற்றிலும் சாய்ந்து மற்றவளை அந்தரத்தில் தொங்க விடப்பட்டவள் போன்று ஆக்கிவிடாதீர்கள் நீங்கள் (அல்லாஹ்வுக்குப்) பயந்து சமாதானமாக நடந்து கொள்வீர்களானால், நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும் மிக்க கருணை யுடையவனாகவும் இருக்கின்றான்."[7]

*ஒரு கணவன் தனது மனைவிகளிடத்தில் நியாயமாக நடத்தல் அல்லது நீதம் செலுத்தல் என்பதனை பின்வரும் வகையில் வேறுபடுத்தி ஆராயலாம்.*

1. *உணவு, உடை, உறையுள், இல்லற வாழ்க்கை போன்ற வெளிப்படையான பௌதிக விடயங்களில் மனைவிமாரைச் சமமாக நடத்துதல்.*

2. *மனித உள்ளுணர்வுடன் தொடர்பான அன்பு செலுத்தும் விடயத்தில் சமநிலையைப் பேணுதல்.*

---

6 Polygamy is a conditional necessity, p.2

7 *அல்குர்ஆன் 4:129*

## பௌதீக ரீதியாக நீதி செலுத்துதல்

> "எந்த மனிதர் இரண்டு பெண்களை திருமணம் செய்திருந்தும் அவர்களிடையே நீதமாக நடந்து கொள்ளவில்லையோ அவர் மறுமை நாளில் ஒரு புறம் சாய்ந்தவராக வருவார் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்."[8]

*ஒரு பெண்ணுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவது ஆணுக்குரிய கடமையாகும். கணவன் தன் மனைவிமாருக்கு உணவு, உடை, வீடு, மருத்துவ வசதிகள் ஆகியவற்றை வழங்கும் தகுதியினைக் கொண்டிருக்க வேண்டும். மனைவியர்களுக்கு இருப்பிடம் வழங்குவதில் நீதம் செலுத்தலினை ஆராயும்போது, எல்லா மனைவிமார் களுக்கும் இருப்பிடம் வழங்க வேண்டும். அது தனித்தனியாக இருப்பின்சிறந்தது.*

*நபி(ஸல்) அவர்கள் தமது ஒவ்வொரு மனைவிமாருக்கும் தனித்தனியான இருப்பிடம் வழங்கினார்கள்.* Abd – al- wasir jdJ tawfia al – attar *எனும் நூலில் "கணவனின் பொருளாதார தரத்தினைப் பொறுத்து இது வழங்கப்படுகின்றது. இருப்பினும் உளவியல் கண்ணோட்டத்தில் ஒரே வீட்டில் வசிப்பது என்பது ஒருவரின் உள்ளத்தை இன்னொருவர் இலகுவாகப் பாதிக்கச் செய்வதாக அமையும் என்கிறார். இது தனித்தனி வீடு வழங்கப்படுதலின் இன்றியமையாமையை உணர்த்துகின்றது. கணவன் மனைவியைப் பராமரிக்கக் கடமைப்பாடுடையவன் என்றவகையில், கணவனிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்வது மனைவியின் உரிமையாகக் கொள்ளப்படுகின்றது.*[9] *மேலும் மனைவிமார்களுடன் தங்குதல், குடும்ப உறவில் ஈடுபடுதல் போன்றவற்றில் நாட்களை மனைவிமாரிடையே பங்கிட்டுக் கொள்வதிலும் நீதம் செலுத்த வேண்டும். இவ்வாறு நாட்களை ஒரு மனைவியுடன் அதிகரிக்க விரும்பின் ஏனைய மனைவிமார்களின் சம்மதத்தைப் பெறுவது அவசியமாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். கணவன் தனக்குள்ள சொத்துக்களைக்கூட மனைவிமாருக்கிடையில் சமமாகப் பங்கு வைத்தல் வேண்டும்.*

---

8 *ஸஹீஹுல் புஹாரி 5212*

9*கலாநிதி ஜமால் ஏ.பதாவி தனது* Polygamy in Islamic Law

*இஸ்லாத்தைப் பொறுத்தளவில் பெண்ணுக்குரிய செலவினத்தை வழங்குவது ஒரு ஆணின் மீதான கட்டாயக் கடமை (வாஜிப்).*[10] *இத்தகைய கடமையை நிறைவேற்ற சக்தி பெறாத எந்த ஆணும் பலதாரத் திருமணத்தை நாட அனுமதியில்லை. எனவே ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிமார்களுக்கான செலவினங்களை வழங்குவதற்கு சக்தியற்றவர் பலதாரமணம் செய்து கொள்ளல் என்பது நிச்சயமாகத் தடை செய்யப்பட வேண்டியதாகும்.*

## ஆ) சமமாக அன்பு செலுத்துதல்

*பலதாரத் திருமணத்தில் உள்ள மிக முக்கியமான நிபந்தனைகளில் ஒன்று மனைவியருக்கிடையே சமமாக அன்பு செலுத்துவதும் ஒருவர் பக்கம் அதிகம் மனம் சார்ந்துவிடாமல் நடத்தலுமாகும். மனைவியருக்கிடையே அன்பில் பாரபட்சம் காட்ட அனுமதியில்லை. இதில் ஒருவர் மீது அதிக நாட்டமும் அடுத்தவரை குறைத்தும் நடத்துவது ஆகுமாக்கப்பட்டதல்ல. அன்பு செலுத்துதல் என்பது நியாயமாக முடிந்தளவில் சமமாக இருத்தல் வேண்டும். அது மட்டுமன்றி தனது நேரத்தைக் கூட சமமாக மனைவிகளுடன் பகிர்ந்து கொள்ளல் வேண்டும். நபி (ஸல்) அவர்கள் தம் மனைவியரிடத்தில் மிக நீதமாக நடந்து கொண்டார்கள்.*

*இதிலிருந்து கணவன் அன்பு செலுத்துவதிலும், சமத்துவமாக மனைவிமாரை நடத்துவதிலும் அதிக அக்கறை காட்டவேண்டும், மனப்பூர்வமாக முயற்சி எடுக்க வேண்டும், இறைவனின் உதவியை நாட வேண்டும், பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும், பாரசட்சம் காட்டாதிருக்க வேண்டும், தனது அன்பில் சிறு சார்புடைமை இருந்தால் கூட அதனை பகிரங்கமாக வெளிப்படுத்தாமல் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை உணர முடிகின்றது.*

*இதனை கலாநிதி பிலால் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "ஆண் தனது நேரத்தையும், சொத்துக்களை யும் சமமான முறையில் பங்குவைத்து மனைவிமாருக்கு வழங்கும் விருப்பு நிலையும் இயலுமையும் இருக்கின்ற நிலையில்தான் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிமாரைத் திருமணம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும். அதேநேரம், உணவு, உடை இருப்பிடம் என்பனவற்றில்*

---

10 இப்னு குதாமா, *அல்முக்னி, பா.1, ப.564*

*நீதியை நிலை நாட்ட முடியாவிட்டால், குர்ஆனிய நிபந்தனைகளுக்கு ஏற்ப அந்த ஆண் ஒன்றுக்கு மேல் திருமணம் முடிக்க கூடாது.* [11]*(மனைவிகளுக்கு இடையில் வழங்கப்படுகின்ற எந்த சலுகைகளும், தேவையான பொருட்களை வழங்கல் என்கின்ற விடயமும் சமகாலத்தில் நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. பலதாரமணம், மனைவிகளிடத்தில் பிழையான புரிதல்களையும், திருப்தியற்ற நிலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.*[12] *மனிதர்கள் இதில் நீதம் செலுத்தத் தவறுவார்கள் என்பதை வெளிப்படையாகவே இக்கருத்துக்கள் காட்டி நிற்கின்றன."*

*நீங்கள் எவ்வளவு விரும்பியபோதும் உங்கள் மனைவி மாருக்கிடையில் நீதியை நிலைநாட்ட சக்தி பெறமாட்டீர்கள் என்ற அல்குர்ஆன் வசனத்தின் மூலம் ஒருவர் தனது மனைவிமாரைச் சமமாக அனைத்து விடயங்களிலும் நடாத்துவது முடியாத காரியம் என்பது தெளிவு படுத்தப்படுகின்றது.*

## நடைமுறைச் சிக்கல்கள்

*பலதார மணத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான உண்மைச் சம்பவங்களுக்கு மத்தியில் உதாரணமாக இரண்டை மட்டும் நோக்குவோம்.*

> **சம்பவம் 1 :** *அஹமட், வயது 35, சுரையா வயது 30. வறிய குடும்பத்தை சேர்ந்த சுரையா மிக அழகானவள், இவளின் அழகால் கவரப்பட்ட அஹமட் அவளை 20வயதில் திருமணம் செய்து கொண்டான். அவர்களுக்கு 5 பிள்ளைகள் உள்ளனர். தனது மாதாந்த வருமானத்தினால் தன் குடும்பத்தையே பேணிப் பராமரிக்க முடியாத நிலையில் இருந்த அஹமட் தொழில் புரியும் இடத்தில் தற்காலிக தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மற்றுமொரு பெண்ணையும் திருமணம் செய்து கொண்டார். தற்போது இரண்டு குடும்பமும் வறுமையில் தாண்டவமாட அவன் மேலதிக வருமானம் தேடி சவுதி அரேபியா*

11 Abu al –Aynayn Dila al- ziwaj al- Talaq fi al- islam, *இஸ்லாத்தில் விவாக, விவாகரத்து).*
12 Bilaal ,Polygamy is a conditional necessity, p-04.

*சென்றுள்ளான். இருந்தும் இரண்டாவது மனைவி மீதான அவனது பராமரிப்பு அதிகமாக இருப்பதால் முதல் மனைவியும் 5 பிள்ளைகளும் பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டுள்ளனர்.*

**சம்பவம் 2 :** *ஜப்பார் நல்ல பொருளாதார வசதிபடைத்தவர். திருமணம் முடித்து 02 குழந்தைகளின் தகப்பன். வியாபாரத்திற்காகச் சென்ற வேளை இன்னுமொரு தொடர்பு ஏற்பட்டது. முதல் மனைவி விருப்புத் தெரிவிக்காத போதும் அவர் இரண்டாவதாகத் திருமணம் முடித்தார். அதன் பின்னர் 02 மாதங்களுக்கு ஒரு தடவை மட்டுமே முதல் மனைவியையும் குழந்தைகளையும் பார்க்க வருவார். புதிய மனைவி இளம் வயதுடையவளாகவும், அழகானவளாகவும் இருக்க அந்த மனைவியுடனேயே நீண்ட காலம் தங்குகின்றார். முதல் மனைவியின் வீட்டுக்கு வந்தவுடன் கணவனுக்கும், மனைவிக்கும் இடையே சண்டை ஆரம்பிக்கும். பிள்ளைகளில் தனது கோபத்தை கணவனும், மனைவியும் வெளிப்படுத்தத் தொடங்குவர். பின்னர் கணவர் வீட்டை விட்டுச் சென்று விடுவார். முதல் மனைவியும், பிள்ளைகளும் பாரிய மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.*

மேற்சொன்ன இரண்டு எடுத்துக்காட்டுகளிலும் முதல் மனைவியும், பிள்ளைகளும் எந்தளவு பாதிப்புக்குள்ளா கின்றனர் என்பதனை சற்று நோக்குவோம். பலதாரமணம் முடித்தவுடன் அக்கணவன் முதல் மனைவியையோ குடும்பத்தையோ ஒழுங்காக பராமரிக்கத் தவறுகிறார். இதனால் பொருளாதார சிரமத்தை அக்குடும்பம் எதிர்நோக்குகின்றது. மேலும் கணவனின் அன்பு, அக்கறை யின்மையினால் அம்மனைவியும், தந்தையின் நடவடிக்கையினால் அப்பிள்ளைகளும் மனச்சிதைவுக்கு ஆளாகின்றனர். இந்த மன உளைச்சல் அவர்களின் சகல நடவடிக்கைகளிலும் பாரிய விளைவை ஏற்படுத்தக் கூடியதாகும். இங்கு பலதாரமணத்துக்கு இஸ்லாம் அனுமதி அளித்துள்ளது என்று அனுபவிக்கும் இந்த ஆண்கள் அதற்கான எதுவித நிபந்தனைகளையும் பின்பற்றாமல்

விடுவது ஏன்? இது தொடர்பில் எமது சமூகமும் கண்மூடித்தனமாய் இருப்பது ஏன்?

சமகாலத்தில் திருமணமாகாத ஆண்கள், திருமணமாகி இன்னொரு மனைவியுடன் வாழ்கின்றவர் அல்லது பிரிந்திருப்பவர் அல்லது மனைவியை தலாக் செய்தவர்கள் கூட மிக அரிதாகவே விதவைகளை மணம் முடிக்க முன்வருகின்றனர். இந்த இடத்தில் விதவைக்கு வாழ்வளித்தல் என்னும் நபிகளாரின் முன்னுதாரணம் பின்பற்றப்படுவதில்லை. மேலும் விதவைகளுக்கு வாழ்வளிக்க அல்லது ஏழைகளுக்கு வாழ்வளிக்க என்று முன் வரும் காருண்ய உள்ளம் கொண்டவர்கள் அந்த ஏழையை அல்லது விதவையை ஏன் முதல் தாரமாகவே திருமணம் செய்து கொள்ளக் கூடாது? விதவை அல்லது ஏழை என்ற ஒரே காரணத்துக்காக அவர்கள் இரண்டாம் மூன்றாம் தாரமாகத்தான் திருமணம் முடிக்கப்படல் வேண்டுமா? நபியவர்கள் ஒரு விதவையினையே முதல் தாரமாக மணம் புரிந்தார்கள் என்பதனை யாரும் பின்பற்ற முன்வருவதில்லை. மாறாக நபியவர்கள் பலதாரமணம் புரிந்தார்கள் என்பதனை மட்டும் விழுந்தடித்துக் கொண்டு பின்பற்றும் உதாரண புருஷர்களாக தம்மை வெட்கமேயில்லாமல் காட்டிக் கொள்கிறார்கள்.

பலதாரக் குடும்பம் தொடர்பாக மத்திய கிழக்கு நாடுகளில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வொன்றானது பலதார மணத்தில் முதலாவது மனைவி அதிகமாக உடல்ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்வதாயும், குறிப்பாக தலையிடி, அடிக்கடி சுவாசிக்க முடியாத நிலை, மூச்சுத் திணறல், ஆஸ்த்துமா, நித்திரையின்மை, பசியின்மை போன்றவற்றால் அதிகம் பாதிக்கப்படுவதாயும் நிரூபிக்கப்பட்டுள்ளது.[13]

அதே சமயம் அமெரிக்காவில் வாழ்ந்து வரும் பலாதார முஸ்லிம் குடும்பங்களிடையே மேற்கொள்ளப்பட்ட இன்னுமொரு ஆய்வானது,[14] பின்வருமாறு குறிப்பிடுகின்றது. சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பலதாரக் குடும்பங்களில் பெண்கள் உடல் ரீதியான, உளரீதியான துஷ்பிரயோகங் களுக்கு தாம் வாழும் காலத்தில் முகம் கொடுக்கின்றனர். முதல் மனைவியும் குழந்தைகளும் எல்லாவற்றையும் அனுபவிக்கின்றனர். இரண்டாம் திருமணத்தின்போது முதல்

13 Al -Krenawi, collegues
14 Deena Hassanech

மனைவி சொத்துக்களையும் ஏனையவைகளையும் பகிர்வ தற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றாள். இதனை முதல் மனைவி விரும்பாத பட்சத்தில் வன்முறைக்குள்ளாக்கப்படுகிறாள். இரண்டாவது மனைவி வீட்டில் வரவேற்கப்படுவதில்லை. ஒரே இடத்தில் வாழும்போது அடிக்கடி சண்டை ஏற்படுவதனால் பிள்ளைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இஸ்லாம் திருமணத்தின் மூலம் பிள்ளைகளை உயிரியல் ரீதி யாக தகப்பனுடன் இணைக்கின்றது. இருப்பினும் பலதார மணத்தில் முதல் மனைவியும், பிள்ளைகளும் கணவனுடன் சேர்வதனை இரண்டாம் மனைவி தடுக்கின்றார்கள். இதன்வழி நோக்கும் போது முதல் மனைவி கணவனால் சமமற்ற முறையில் நடாத்தப்படுவதனை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது. முதல் மனைவி வன்முறைக்குள்ளாக்கப்படும் போது இரண்டாவது மனைவி கணவனுக்கு உதவியளித்துள்ளமைகளையும் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

இவ்விடயங்களை ஆழமாக நோக்கின் மனைவியரிடையே நீதம் செலுத்தல் என்பது நடைமுறையில் மிகக் கடினமான ஒன்றாகவே பலதாரமணத்தில் அமைகின்றது. நடை முறையில் பலதார மணத்தைப் பின்பற்றுபவர்கள் இஸ் லாமிய கட்டளைகளைச் சரியாகப் பின்பற்றவுமில்லை, பெண்களின் நலனைப் பேணவுமில்லை என்பது தெளிவாகின்றது.

பலதாரத் திருமணத்திற்கு யதார்த்தமான சமூக வாழ்க்கையில் தரப்படுத்தல் இருக்கின்றது. எந்த ஆண் எத்தகைய சந்தர்ப்பங்களில் திருமணம் புரியலாம் என்கின்ற வரையறைகள் உள்ளது. கலாநிதி ஜமால் பதாவி குறிப்பிடுவது போன்று பலதாரத் திருமணம் என்பது கட்டாயமானதோ, ஊக்குவிக்கப்பட்டதோ அல்ல. அது பல நிபந்தனைகளுடன் வரையறுக்கப்பட்டது மாத்திரமே.[15] இவர் தனிநபரினதும், சமூகத்தினதும் பிரச்சினைக்குத் தீர்வளிக்கும் வகையில் ஒருவர் பலதாரமணத்தைப் புரிவதற்கான காரணங்களாக அல்லது சந்தர்ப்பங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார்.

15 Polygamy in Islamic Law *(1998)*

மனைவி குழந்தையினைப் பெற முடியாத இயற்கையான தகுதியினைக் கொண்டுள்ள சூழ்நிலையில், கணவன் மாற்று வழியாக பலதாரமணத்தை செய்ய முடியும். குழந்தைப் பேற்றுக்கு தகுதியற்ற மனைவியை விவாகரத்துச் செய்து விட்டு இன்னொரு மனைவியைத் திருமணம் செய்வது அல்லது விவாகரத்துச் செய்யாமலேயே இன்னொரு திருமணம் செய்வது ஆகிய இரண்டும் நடைமுறையில் உள்ள விடயங்கள்.

கலாநிதி அப்துல் ஹக்கின் கருத்துப்படி, மனைவியால் ஒரு குழந்தையைப் பெற்றுக் கொடுத்து கணவனுக்கு தகப்பனாகும் வாய்ப்பினைக் கொடுக்க முடியாது என்றிருந்தால், முதல் மனைவி விரும்பினால் அவளையும் தாபரித்துக் கொண்டு இன்னொரு மனைவியை முடிக்கலாம் அல்லது முடிக்காது விடலாம். எவ்வாறாயினும், ஆண் தனது மனைவிமாரை ஏமாற்றுவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளான். இதனால் தான் இன்னொரு மனைவியை நாடு முன்னர் முதல் மனைவிக்கு இது பற்றி தெரியப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முதல் மனைவியிடம் இவ்வாறு கேட்கும் போது அவள் அதனை தடுக்கலாம். மறுப்புத் தெரிவிக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் தலாக்கினைப் பெற்றுக்கொள்வது முற்றிலும் முதல் மனைவியின் உரிமையாகும். எனினும் ஆண் மேலே குறிப்பிட்ட நீதத்தை செலுத்த முடியவில்லை எனில் பலதாரமணத்துக்கான அனுமதியைப் பயன்படுத்த முடியாது.

மனைவி நீண்ட காலமாக நோயுற்ற நிலையில் இருக்கும் போது, கணவனுடன் தாம்பத்திய உறவை பேண முடியாத, பிள்ளைகளைப் பராமரிக்க முடியாத சூழ்நிலை உருவாகும் போது சிலர் தமது ஆசைகளை அடக்கிக் கொண்டு வாழ இடமுண்டு. மற்றும் சிலர் நோய்வாய்ப்பட்ட மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு வேறொரு திருமணம் புரிவதுண்டு. சிலர் சட்டரீதியற்ற முறையில் பாலுறவை மேற்கொள்வதுண்டு. இவ்வாறு நீண்டகாலமாக வாழ்ந்த மனைவியைத் தனது தேவைக்காக கைகழுவிவிடும் செயலை விட, விவாகரத்தை அம்மனைவி விரும்பாதவிடத்து முதல் மனைவியைப் பராமரித்துக் கொண்டே இன்னொரு திருமணம் செய்ய அனுமதி உண்டு. இப்போதும் புதிய மனைவியை பராமரித்து, மனைவியருக்கிடையே சமத்துவம்

பேணும் ஆற்றல் இல்லாதவர் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்த முடியாது.

வெறுமனே பாலியல் தேவைகளை நிறைவு செய்வதற்கான ஒரு வழியாக இஸ்லாம் பலதாரமணத்தை அங்கீகரிக்கவில்லை. நடைமுறையில் ஒருவர் அதீத பாலியல் தேவையுடையவராக இருக்கின்றாரெனில் அது பாலியல் நெறிபிறழ்வாகவே (Sexual disorder) கொள்ளப்படும். அதற்கு திருமணம் தீர்வாக அமையாது. குறிப்பிட்ட நபர் சாதாரண உணர்வுநிலைக்கு (Normal behavior) மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறில்லாமல் அதீத பாலியல் உணர்வு கொண்டவர்கள் பலதாரமணத்தால் தீர்வு தேடி மூன்று திருமணம் முடித்து அம்மூன்று மனைவியருமே மிகக் கடுமையான பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளாக்கப்பட்ட சம்பவங்களும்உண்டு.

திருமணம் பற்றிய குர்ஆனியப் பிரகடனங்கள் யாவும் ஒருதார மணத்தையே அடிப்படைச் சட்டமாகக் கொண்டுள்ளன. இங்கு ஓர் ஆண் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வாழும் அடிப்படைதான் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. அல்குர்ஆன், ஹதீஸ் போன்றவற்றின் முன்மொழிவுகளையும் நிபந்தனைகளையும், எச்சரிக்கைகளையும் நுணுக்கமாக ஆராயும்போது, பலதாரத் திருமணம் என்பது ஊக்கு விக்கப்படவில்லை. மாறாக, அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம். எனவேதான் அல்லாஹ் தனது திருமறையிலே,

> "ஒரு பெண்ணையே (மணந்து கொள்ளுங்கள்)"[16]
> "நீங்கள் எவ்வளவு விரும்பியபோதும் உங்கள் மனைவி மாருக்கிடையில் நீதியை நிலைநாட்ட சக்தி பெற மாட்டீர்கள்"[17]

என்று கட்டளையிடுகின்றான். இதற்கமைய இஸ்லாமிய நாடான தூனீசியா இன்றைய உலகின் நடைமுறைகளையும், சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு மனைவியரை சமமாக நடத்துதல் என்பது அறவே முடியாத காரியம் எனக்கூறி அல்குர்ஆன் வசனம் 4:129 ஆதாரமாகக் கொண்டு பலதாரமணத்தை முற்றாகத் தடை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

16 அல்குர்ஆன் 4:3
17 அல்குர்ஆன் 4:129

எனவே பலதாரமணத்தை எல்லா ஆண்களும் செய்ய முடியாது. அதேபோல பொருளாதார வசதி படைத்த, அதீத பாலியல் நாட்டமுள்ள, நோய்வாய்ப்பட்ட மனைவியுள்ள எல்லா ஆண்களும் செய்யவும் முடியாது என்பது மிகத் தெளிவானது. இஸ்லாத்தில் இது அறிமுகப்படுத்தப்பட்டமைக்கான நியாயமான காரணங்கள் உண்டு. இக்காரணங்களை மையப்படுத்தி சமூகத்தில் இதனைத் தெளிவாக நடைமுறைப்படுத்தும் எந்தவிதமான சட்ட ஏற்பாடுகளோ, பரிந்துரைப்புக்களோ எமது சமூகப் புலத்தில் இல்லை என்பதும் உண்மை. ஏனெனில் இத்தகைய சூழ்நிலைகளின் போது ஆண்கள் அன்றி பெண்களும், பிள்ளைகளுமே அதிகமாக உளவியல், உடலியல், பொருளியல், சமூகவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பலதாரமணத்தைப் பொறுத்தளவில் எதுவித இறுக்கமும் அற்ற சட்ட விதிகளினால் செல்லுமிடமெல்லாம் திருமணம் செய்யும் நிலை காணப்படுகின்றது. வீட்டுச் செலவுக்குக் கூட பணம் தராமல், வீடு வராமல், பிள்ளைகளுடன் எதுவித தொடர்பும் இல்லாமல் இருக்கும் தனது கணவன் இன்னுமொரு திருமணம் செய்திருக்கின்றான் என்பதே கூட அநேக மனைவியருக்குத் தெரிந்திருப்பதில்லை. தெரிய வந்தாலும் கூட அந்தப் பெண்ணுக்கெதிராக சமூக விமர்சனம் தாராளமாகக் கிடைக்குமே தவிர எதுவித நிவாரணமும் கிடைப்பதில்லை.

எனவேதான் ஒரு ஆண் எந்த சந்தர்ப்பத்தில் பலதாரமணம் புரியலாம்? அதற்கான நிபந்தனைகள் என்ன? அந்நிபந்தனைகள் மீறப்படின் அதற்கான தண்டனை என்ன? பெண்களின் தனிப்பட்ட, பொருளாதார, குடும்ப, சமூக உரிமைகள் என்ன? அவற்றை எவ்வாறு உறுதிப்படுத்துவது? அத்தகைய உரிமைகள் மீறப்படும் போது என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பன தொடர்பான மிகத் தெளிவான விதிமுறைகளும் செயற்பாட்டுக் கட்டமைப்பும், ஒழுங்கும், கட்டாயம் பின்பற்றப்படல் வேண்டும். அவ்வாறு பின்பற்றப்படுமாயின் எமது சமுகத்தில் இஸ்லாத்தின் பெயரால் பெண்களை துன்புறுத்தும் பலதாரமணத்தின் பிடியிலிருந்து பல பெண்களையும் சிறுவர்களையும் காப்பற்றக் கூடியதாக இருக்கும்.

# அத்தியாயம் 05

# இஸ்லாமிய விவாகரத்தும் பெண்ணுரிமையும்

மொஹம்மட் நுஸ்ரி (நளீமி), எம்.பீ.எம். பிர்தௌஸ் (நளீமி)

## அறிமுகம்

### விவாகரத்து பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு

*விவாகரத்து பல காரணங்களுக்காக ஏற்படலாம். மணவாழ்வில் மன முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சில படிமுறைகளையும் அவை வெற்றியளிக்காத போது விவாகரத்தை செய்து கொள்ளக் கூடிய அனுமதியையும் இஸ்லாம் கணவன் மனைவி இருவருக்கும் வழங்குகின்றது.*

> "எந்தப் பெண்கள் விஷயத்தில் - அவர்கள் (தம் கணவருக்கு) மாறு செய்வார்களென்று நீங்கள் அஞ்சுகிறீர்களோ, அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள் (அதிலும் திருந்தாவிட்டால்) அவர்களைப் படுக்கையிலிருந்து விலக்கிவிடுங்கள் (அதிலும் திருந்தாவிட்டால்) அவர்களை "ழரப" செய்யுங்கள்"[1]

*கணவன் மனைவிக்கிடையே பிணக்குகள் ஏற்படும் போது முதல் கட்டமாக அல்குர்ஆன் நல்லுபதேசத்தை தீர்வாக முன்வைக்கிறது. உபதேசம், நல்ல ஆலோசனை என்பது பலருக்கு பிரயோசனமளிக்க முடியும். இதன் மூலம் அநாவசியமான விவாகரத்துக்களைத் தவிர்க்க முடிகிறது.*

---

1 *அல்குர்ஆன் 4:34*

*நல்லுபதேசம் பயனளிக்காதவிடத்து இரண்டாவது தீர்வாக படுக்கையிலிருந்து பிரிந்திருப்பதை அல்குர்ஆன் பரிந்துரை செய்கின்றது. அதிலும் பலன் கிடைக்காத போது மூன்றாவது தீர்வாக "ழர்ப்" -விலகிச் செல்லுதல், அல்லது பிரிந்து செல்லுதல் என்ற தீர்வை முன்வைக்கின்றது. இந்த "ழர்ப்" என்ற சொல் பல அர்த்தங்களைக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக அல்குர்ஆனிலேயே பல அர்த்தங்களில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் மேற்சொன்ன அல்குர்ஆன் வசனத்தை மொழிமாற்றம் செய்கையில் "அடித்தல்" என்ற அர்த்தத்தையே சிலர் பிரயோகிக்கின்றனர். இவ்வாறான மொழிமாற்றமானது தனிமனித நற்பண்புகளை தூண்டும், சிலாகித்துப் பேசும் ஒட்டு மொத்த அல்குர்ஆனிய போதனைகளுக்கு எதிரானதாக அமையும்.[2] மேற்சொன்ன தன் படி கணவன் மனைவி தற்காலிகமாகப் பிரிந்துவிட்டால் அதற்கு அல்குர்ஆன் முன்வைக்கும் தீர்வு குடும்ப உறவுகள் சேர்ந்து சமரசம் செய்து வைப்பதாகும்.*

> "(கணவன், மனைவியாகிய) இருவருக்குள் (பிணக்கு ஏற்பட்டு பிரிவினை ஏற்பட்டு விடுமோ என நீங்கள் அஞ்சினால் அவன் உறவினர்களில் ஒருவரையும் அவள் உறவினர்களில் ஒருவரையும் நடுவர்களாக ஏற்படுத்துங்கள்."[3]

*சமரசத்துக்காக பெண் தரப்பில் ஒருவரையும் ஆண் தரப்பில் ஒருவரையும் நியமித்து பேச்சுவார்த்தை நடாத்தும்படி அல்குர்ஆன் கட்டளையிடுகிறது. இந்த நான்கு தீர்வுகளினாலும் தீர்த்து வைக்க முடியாத பிரச்சினையாக இருந்தால் மாத்திரமே விவாகரத்தை ஐந்தாவது தீர்வாக முன்வைக்கிறது. இதிலிருந்து இஸ்லாம் விவாகரத்தை ஒரு இறுதிக் கட்டத் தீர்வாக முன்வைத்துள்ளதை அவதானிக்கலாம்.*

*இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விடயம் இது ஆண்களுக்குரிய ஒன்று என்று கருதப்படுவதாகும். அல்குர்ஆனிய வசனங்கள் சில ஆணுக்குச் சொல்லப்படுவது என்றிருந்தாலும் அது பெண்களுக்கும் பொருந்தக் கூடியதாகும். உதாரணமாக திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டவர்கள் பட்டியல் ஆண்பாலிலேயே சொல்லப்பட்டுள்ளது.[4] இதனை*

2 *பார்க்க கட்டுரை : நெருங்கிய துணை வன்முறை*

3 *அல்குர்ஆன் 4:35*

4 *அல்குர்ஆன் 4:23*

அப்படியே பெண் பாலுக்கு மாற்றியே பெண்களுக்கான பட்டியலை நாம் அடையாளம் காண்கிறோம். இந்த அடிப்படையில் விவாகரத்துக்கான வசனத்தையும் நாம் ஏன் நோக்க முடியாது?

முற்றிலும் மனைவி மட்டுமே தவறு செய்பவள், அவளை விவாகரத்து செய்ய முன் செய்யப்பட வேண்டிய படி முறைகள் என்ற அர்த்தத்திலேயே மேற்சொன்ன வசனம் நோக்கப்படுகின்றது. நடைமுறையில் கணவனுக்கு மாறு செய்யும் பெண்களின் விகிதாசாரத்தையும் மனைவிக்கு மாறு செய்யும் கணவர்களின் விகிதாசாரத்தையும் ஒரு கணம் சிந்திப்போமெனில் மேற்சொன்ன அல்குர்ஆன் வசனம் பெண்களால் பிரயோகிக்கப்படவே அதிக பொருத்தமுடையது என்பதனை யாரும் மறுக்க முடியாது. எனவேதான் கணவன் ஏதும் பிழை செய்தால் மனைவி நேரடியாகவே விவாகரத்தை நாடுவதா? அல்லது கணவன் திருந்தும் வரை மேற்சொன்ன அதே படிமுறைகளை மனைவியும் செய்து விட்டே விவாகரத்தை நாட வேண்டுமா என்னும் விடயங்களை யாரும் கவனிப்பதில்லை. சமத்துவம் பேசும் அல்குர்ஆனின் நோக்கம் நிச்சயமாக விவாகரத்தின் போது பெண்களை பாதிப்பதாக இருக்க முடியாது.

அதுமட்டுமன்றி முதலாவதாக சொல்லப்பட்ட குர்ஆனிய வசனமானது தனது துணை தனக்கு ஒழுக்க ரீதியாக மாறு செய்யக்கூடும் என்று அஞ்சும் பட்சத்திலானதாகும்.[5] ஆனாலும் விவாகரத்து கோரப்படும் எத்தனையோ காரணங்கள் காணப்படுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் இரு தரப்பு குடும்ப உறவினர்களை நடுவர்களாக்கி சமரசம் செய்ய முயற்சிக்க அல்குர்ஆன் கூறுகின்றது.[6]

## இஸ்லாத்தில் விவாகரத்தின் வகைகள்

ஓர் ஆண் தன் மனைவியுடன் தொடர்ந்து வாழ முடியாத நிலைக்கு வரும்போது, அவளிடத்தில் தலாக் (விவாகரத்து) எனக் கூறி மணபந்தத்திலிருந்து பிரிந்து செல்லும் நிகழ்வு மட்டுமே இஸ்லாமிய விவாகரத்து முறை என பலரால் பிழையாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இஸ்லாம் கூறும் விவாகரத்து முறையானது தலாக் என்பதைத் தவிர

5 அல்குர்ஆன் 4:34

6 அல்குர்ஆன4:35

குல்உ, பஸ்கு என்ற பிரதான மூன்று வழிமுறைகளை உள்ளடக்கியுள்ளதோடு ழிஹார், லிஆன், ஈலாஉ என்ற வேறு சில பிரிவுகளையும் கொண்டுள்ளது.

மேலே கூறப்பட்ட தலாக், குல்உ, ழிஹார், லிஆன், ஈலாஉ என்பன இஸ்லாமிய சட்டத்தில் காணப்பட்டாலும் கூட இலங்கையில் பொதுவாக தலாக் மற்றும் குல்உ முறைகளே பின்பற்றப்படுகின்றன.

### அ) தலாக் (விவாகரத்து)

தலாக் என்னும் விவாகரத்து முறை கணவனுக்குரிய உரிமையாகும். இது ஆணின் புறத்திலிருந்து நிகழ்வதாகும்.[7] கணவன் நியாயமான காரணங்களுக்காக தன் மனைவி யிடமிருந்து பிரிவை நாடும் போது மனைவியை விட்டும் சட்டரீதியாக பிரிந்து கொள்வதற்கான வழிமுறையே தலாக் ஆகும். நிரந்தரமாக பிரிவதாயின் மூன்று போதியகால இடைவெளியில் மூன்று முறை தலாக் சொல்லப்பட வேண்டும். இந்த கால அவகாசம் விவாகரத்தை ஒருதலைப்பட்சமாக அணுகும் ஆண் தன் நிலையினை மாற்றிக் கொள்வதற்கானதாகும்.

மனித உணர்ச்சியின் அடிப்படையில், நிதானமிழந்த நிலையில் ஒருவர் மனைவியை தலாக் சொல்லிவிட முடியும். மீண்டும் அவர் மூன்று மாதகாலம் நிதானமாக யோசித்துப் பார்க்கும் போது மனமாற்றம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அல்லது மூன்று மாத இடைவெளியில் கணவனின் நண்பர்கள், உறவினர்கள் நல்ல ஆலோசனைகளைக் கூறி கணவனின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த சந்தர்ப்பம் உண்டு. இதனால்தான் கால அவகாசம் வழங்காது ஒரேயடியாக மூன்று தலாக்கையும் ஒரே நேரத்தில் சொல்லும் முத்தலாக் முறையை இஸ்லாம் மறுக்கிறது.

மேலும் தலாக் மறைமுகமாகச் சொல்லப்பட முடியாது. இரண்டு சாட்சிகள் முன்னிலையிலேயே சொல்லப்பட வேண்டும். எனவே இதன் மூலம் தலாக் சொல்லாது விட்ட ஒருவர் தலாக் சொல்லியதாகவோ, தலாக் சொல்லிய ஒருவர் தான் தலாக் சொல்லவில்லை என மறுப்பதற்கோ வாய்ப்பில்லை. இவ்வாறு தலாக் சொல்லி விவாகரத்தாகும்

7 அல்குர்ஆன் 65:01

*வரை மனைவியை தனது வீட்டிலேயே வைத்து கணவன் பராமரிக்க வேண்டும். அதேபோன்று ஒருவர் தன் மனைவி மாதவிடாய் நிலையில் இருக்கும் போது தலாக் சொல்ல முடியாது.*[8]

*ஒரு கணவன் தன் மனைவியை தலாக் செய்து விட்டால் அவன் மனைவிக்கு அன்பளிப்பாகக் கொடுத்த மஹரையோ அல்லது ஏனைய பொருட்களையோ திருப்பிக் கேட்க முடியாது. மனைவியாக விரும்பிக் கொடுத்தால் மாத்திரமே பெற்றுக் கொள்ளலாம். இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனம் உறுதிப்படுத்துகின்றது.*

> "நீங்கள் ஒரு மனைவிக்குப் பதிலாக வேறு ஒருத்தியை மனைவியாகக் கொண்டு வர நாடினால் நீங்கள் அவளுக்கு பொற்குவியலையே (மஹ்ராக) கொடுத்திருந்தாலும் கூட, அதிலிருந்து கொஞ்சம் கூட திரும்பப் பெறாதீர்கள். நீங்கள் அவதூறு கூறியும், வெளிப்படையாக கொடுமை இழைத்தும் அதனைத் திரும்பப் பெறுவீர்களா? சந்தேகமின்றி நீங்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து இன்பம் துய்த்திருக்கின்றீர்களே. மேலும் அந்த மனைவியர் உங்களிடமிருந்து உறுதியான ஒப்பந்தத்தையும் பெற்றிருக்கின்றார்களே (அவ்வாறிருக்க) அப்பொருளை அவர்களிடமிருந்து எவ்வாறு திரும்பப் பெற முடியும்? "[9]

## ஆ) குல்உ

*கணவன் எவ்வளவு மோசமானவனாக இருந்தாலும் அவரோடுதான் வாழ வேண்டும் என்கின்ற ஓர் இறுக்கமான நடைமுறையை இஸ்லாம் காட்டித் தரவில்லை. தன் மனைவியுடன் வாழ முடியாது என்ற நிலையில் உள்ள ஆணுக்கு வழங்கப்பட்ட தலாக் உரிமை, பெண்ணுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இது குல்உ எனப்படுகின்றது. மொழிக் கருத்தில் குல்உ என்பதற்கு களைதல், நீக்குதல் என்பது பொருளாகும். பரிபாசை ரீதியில் மனைவி தன் கணவனோடு வாழ்வதற்கு விரும்பாத சந்தர்ப்பத்தில் மஹரை திருப்பி ஈடாக ஒப்படைத்து விட்டு கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக் கொள்ளும் முறையைக் குறிக்கும். ஒரு பெண் கணவனோடு தொடர்ந்தும் வாழ முடியாத நிலையில் இது இடம்பெறுகின்றது. இது பெண்களுக்கு வழங்கப்பட்ட சமத்துவ உரிமையையே காட்டுகின்றது.*

---

8 *ஸஹீஹ் முஸ்லிம், 183, அல்குர்ஆன் 65:11*

9 *அல்குர்ஆன் 4:20- 21*

திருமணம் என்பது ஆண் பெண் இருதரப்பு இணைந்து செய்த ஒரு வாழ்க்கை ஒப்பந்தம் என்ற அடிப்படையில் ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளும் உரிமையும் இருதரப்புக்கும் வழங்கப்பட வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் ஈட்டுத் தொகையாக தனக்கு திருமண உடன்படிக்கையின்போது வழங்கப்பட்ட மஹர் தொகையை கணவனிடம் மனைவி ஒப்படைத்துவிட வேண்டும். இதனால், ஆண் தரப்பு பாதிக்கப்படுவது தடுக்கப்படுகிறது. கணவன் மனைவியைத் துன்புறுத்தல், உரிய முறையில் தாபரிப்பு செலவுகள் வழங்காதிருத்தல், கணவன் சிறை, வெளிநாட்டுப் பயணம் போன்ற காரணங்களால் மனைவியை மிக நீண்ட நாட்கள் பிரிந்திருத்தல், தீராத நோயாளியாக காணப்படல், ஆண்மைக் குறைபாடு போன்ற ஏதாவது நியாயமான காரணங்களுக்காக ஒரு பெண் குல்உ செய்து கொள்ளக் கோர முடியும். ஆனாலும் காரணம் சொல்ல வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.

ஸாபித் பின் கைஸ் (ரழி) அவர்களின் மனைவி நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே எனது கணவரின் நன்னடத்தையையோ நற்குணத்தையோ நான் குறை கூற மாட்டேன். ஆனாலும், இஸ்லாத்தில் இருந்து கொண்டே (இறைவனுக்கு) மாறு செய்வதை நான் வெறுக்கிறேன்" என்றார். (அதாவது கணவர் நல்லவராக இருந்தாலும் அவருடன் இணைந்து வாழத் தனக்கு விருப்பமில்லை என்கிறார்). உடனே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் "அப்படியானால் (அவர் உனக்கு மஹராக வழங்கிய) அவரது தோட்டத்தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறாயா?" என்று கேட்டார்கள். அதற்கு அப்பெண்மணி "சரி" என்றார். உடனே நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அவரது கணவரிடம் "தோட்டத்தைப் பெற்றுக் கொண்டு அவளை ஒரேயடியாக விடுவித்து விடு" என்றார்கள்.[10] ஓர் இளம் வயதுப் பெண்ணை அவளது தந்தை வலுக்கட்டாயமாக ஒருவருக்கு திருமணம் செய்து வைத்த போது நபியவர்கள் திருமணத்தை முறித்துக் கொள்ளும் உரிமையை அப்பெண்ணுக்கு வழங்கினார்கள்.[11]

மேலும் குல்உவில் பெண் மாதவிடாய் இல்லாத நாட்களில் தான் விவாகரத்து நிகழ வேண்டும் என்பதோ, கணவனின் வீட்டிலேயே இத்தா இருக்க வேண்டும் என்ற நிபந்தனையோ கிடையாது. குல்உக்கான இத்தா ஒரு மாதகாலம் மாத்திரமே.

10 ஸஹீஹுல் புகாரி 5273
11 ஸஹீஹுல் புகாரி 5139

அதன் பின் அப்பெண் மறுமணம் செய்து கொள்ள முடியும். சிலபோது மனைவியின் குல்உ கோரிக்கையை கணவன் நிராகரிக்க முடியும். அப்படி நிராகரித்தாலும் கூட பெண் தரப்பு மஹரை திருப்பி ஒப்படைக்கத் தயார் எனில் காதி நீதிபதி குல்உவை நிறைவேற்றி வைப்பார். ஏனெனில் குல்உவுக்கு கணவனின் அனுமதி அவசியமானதல்ல. கணவனின் அனுமதி அவசியம் என்றிருப்பின் பெண்ணுக்கு குல்உ என்ற தனியான ஒரு உரிமையை வழங்கியதில் அர்த்தமில்லாது போகும். தலாக்கின் போது மனைவியின் அனுமதி கணவனுக்கு அவசியமில்லை என்பது போல குல்உவில் கணவனின் அனுமதி அவசியமானதன்று.[12]

குல்உ செய்யும் போது, கணவன் தான் மனைவிக்கு வழங்கிய மஹர் தொகையை விட அதிகமாக எதனையும் கோர முடியாது. ஆனால் மனைவியாக விரும்பி மஹர் தொகையை விட அதிகமாக ஏதாவது வழங்கினால் அதனை கணவன் ஏற்பதில் தவறில்லை.[13]

### இ) ழிஹார்

தலாக் சொல்லும் முறையிலும் பெண்ணுக்கு தீங்கு வரக் கூடாது என்பதை உறுதிப்படுத்திய இஸ்லாம் தலாக்கின் ஏனைய வகைகளையும் பெண்ணின் நலனை கருத்திற் கொண்டுள்ளது. மனைவியை தாய்க்கு ஒப்பிட்டு விட்டு (ழிஹார்) அவளை விவாகரத்து செய்யாமலும் உறவு கொள்ளாமலும் இருப்பது மனைவிக்குச் செய்யும் துரோகமாகும். எனவே இத்துரோகத்தை இழைக்கும் ஆணுக்கு கப்பாரா எனும் தண்டனையை இஸ்லாம் கொடுப்பதோடு பெண்ணோடு தாம்பத்திய வாழ்வில் இணைந்து வாழும்படி கட்டளையிடுகிறது.

### ஈ) லிஆன்

கணவனோ, மனைவியோ, தன் துணைமீது சோரக் குற்றத்தைச் சுமத்தும் போது, அந்தக் குற்றச்சாட்டை செய்த துணையோடு இணைந்து வாழ்வதென்பது நிம்மதியான வாழ்வாக அமையாது. எனவேதான், இஸ்லாம் லிஆனை நிரந்தர தலாக்காக குறிப்பிடுகிறது. இவ்வுரிமை ஆண், பெண் இருபாலாருக்கும் சமமானதாகவே வழங்கப்பட்டுள்ளது.

12 Mohamed Fathi Osman, Muslim Women The Family And The Society, Omar Ibn AlKhat tab Foundation, p.12

13 இப்னு மாஜா 2332

### உ) ஈலாஉ

*ஈலாஉவில் ஒரு கணவன் தன் மனைவியுடன் உறவு கொள்ள மாட்டேன் என சத்தியம் செய்கிறார். எனவே அவ்வாறு சத்தியம் செய்வதானது பெண்ணின் நலனை நேரடியாகப் பாதிக்கிறது. எனவே பெண்ணுக்கு சார்பான தீர்வையே இஸ்லாம் முன்வைக்கிறது. ஒன்று அப்பெண்ணை தலாக் செய்து மறுமண வாழ்வுக்கு அனுமதிக்க வேண்டும். அல்லது சத்தியத்தை முறித்து அவ்வாறு கூறியதற்காக குற்றப் பரிகாரத்தை நிறைவேற்றிவிட்டு மனைவியோடு தாம்பத்தியத்தில் ஈடுபட வேண்டும். இதிலிருந்து இஸ்லாம் விவாகரத்து எனும் விடயத்தில் ஆண்களின் நலனை கருத்திற் கொண்டது போலவே பெண்ணின் நலனையும் கருத்திற் கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது.*

## தாபரிப்புச் செலவும், இத்தாவும் பெண்ணுரிமையும்

*ஒரு கணவன் தன் மனைவியை ஒருமுறை தலாக் கூறினால் விவாகரத்து நிறைவேறி விடாது. அதன்பின் மனைவி குறிப்பிட்ட காலம் இத்தா இருக்க வேண்டும். தலாக்குக்கான இத்தா என்பது மரணத்துக்கான இத்தாவிலிருந்து முற்றிலும் மாற்றமானது. தலாக்குடைய இத்தா கணவனின் வீட்டிலேயே இடம்பெற வேண்டும்.[14] இத்தாக் காலம் முடிவுறும் வரை கணவன் மனைவி போன்றே அவர்கள் வாழ வேண்டும். தாம்பத்திய உறவு மாத்திரமே தவிர்க்கப்பட வேண்டும். இது விவாகரத்தை நாடும் கணவன் தன் மனைவியுடன் மீண்டும் இணைந்து கொள்வதற்கான ஓர் அவகாசமேயாகும்.*

*அதேவேளை இத்தாவுடைய காலம் முடிவடையும் வரை மனைவிக்கான செலவினங்களை கணவனே பொறுப்பேற்க வேண்டும். மேலும் குறித்த மனைவி கர்ப்பிணியாக இருப்பின் குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை கணவன் தாபரிப்புச் செலவுகளை வழங்குவது அவசியமாகும்.[15] தலாக் இடம்பெற்று முடிந்தாலும் குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பு தந்தைக்கே உரியது. ஒன்று கணவனே பிள்ளைகளை பொறுப்பேற்று வளர்க்க முடியும். அல்லது மனைவியிடம் குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு தான் பிள்ளைகளை பராமரிப்பதற்கான*

---

14 *அல்குர்ஆன் 65:6, 2:228*

15 *அல்குர்ஆன் 65:6*

மொத்தச் செலவினங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் தலாக் என்பது கணவன், மனைவி உறவைச் செயலிழக்கச் செய்யுமே தவிர தந்தை பிள்ளை உறவில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

## நடைமுறைச் சிக்கல்கள்

இன்று விவாகரத்து சட்டங்களில் காணப்படும் சில இறுக்கமான நடைமுறைகளால் சில பெண்கள் தற்கொலை வரை சென்றிருக்கிறார்கள். கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் கொலை செய்த சம்பவங்கள் பல நடந்தேறியுள்ளன. பலர் பொருத்தமில்லாத வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்து விட்டு அவர்களை விட்டும் சட்டரீதியாக பிரியாமல் வீட்டுக்குள்ளேயே கணவன் வேறாகவும், மனைவி வேறாகவும் வாழ்ந்து வரும் உடைந்த குடும்பங்கள் பல தோன்றியுள்ளன. அங்கு வாழும் பிள்ளைகள் உட்பட தாய், தந்தையரும் உளவியல் ரீதியான அழுத்தங்களுடனேயே வாழ்வைக் கழிக்கின்றனர். எனவேதான் இஸ்லாம் இப்படியான மோசமான பல விளைவுகள் சமூகத்தில் தோன்றி விடக்கூடாது என்பதற்காகவே மிக எளிமையான ஒரு பொறிமுறையாக விவாகரத்தை ஆண், பெண் இருவருக்கும் அனுமதித்துள்ளது.

அதே சமயம் எமது நாட்டைப் பொறுத்தளவில் இத்தகைய மிக இலகுவான விவாகரத்து நடைமுறைகள் ஆண்களுக்கு சார்பாகவே காணப்படுகின்றன. ஒரு பெண் விவாகரத்துச் செய்ய விரும்பின் அவள் காரணம் காட்ட கட்டாயப்படுத்தப்படுகின்றாள். ஆனால் ஆண்கள் விவாக ரத்துச் செய்வதாயின் எதுவித காரணமும் காட்டத் தேவையில்லை. இதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சர்வ சாதாரணமாக ஆண்கள் தம் மனைவியரை விவாகரத்துச் செய்யும் நிலை காணப்படுகின்றது. இதற்குப் பலதார மணமும் ஒரு காரணம். இதனால் முஸ்லிம்கள் மத்தியில் விவாகரத்தின் வீதம் வேகமாக அதிகரித்து வருகின்றது. இதன் விளைவாக பெண்கள் பெரிதும் பாதிக்கப்படைகின்றனர்.

பெண்கள் விவாகரத்தின் பின்னர் தனதும், பிள்ளைகளினதும் பராமரிப்பு தொடர்பில் பெரும் சிக்கல்களை எதிர்

நோக்குகின்றனர். இவ்வாறான விவாகரத்து நடவடிக்கைகளின் போது "அல்லாஹ் அனுமதித்தவற்றில் அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுப்புக்குரியது விவாகரத்தாகும்" என்ற நபிமொழியை எவரும் கவனிப்பதில்லை. என்னதான் இஸ்லாம் விவாகரத்துக்கும் அதன் பின்னரான வாழ்க்கைக்கும் ஏற்பாடுகளை செய்திருந்தாலும் நடைமுறையில் இதனை சரிவர அமுல்படுத்துவதற்கு ஆண்கள் முன்வருவதில்லை. இங்கு இஸ்லாம் பெண்களின் நலனை கவனத்தில் கொண்டு வழங்கிய சாதகமான விடயங்கள் கூட முஸ்லிம் சட்டத்தாலும், நடைமுறைகளாலும் அப்பெண்களுக்கு மறுக்கப்படுகின்றன.

விவாகரத்தின் போது பெண்ணை பராமரிக்க வேண்டும் என்பது ஆணின் கட்டாயக் கடமை. இருந்தும் கூட யதார்த்தத்தில் இவ்வாறு நடப்பதில்லை. விவாகரத்தின் பின்னர் பிள்ளைகளைப் பராமரிப்பதைக் கூட இத்தகைய ஆண்கள் ஒழுங்காகச் செய்வதில்லை. பராமரிப்புச் செலுத்தும் படி தீர்க்கப்பட்டாலும் கூட பெண்களையும், பிள்ளைகளையும் பாதிக்கும் விதத்தில் பராமரிப்புச் செலுத்தாமல் இழுத்தடிப்புக்களைச் செய்கின்றனர். மிகச் சுலபமாக முதலில் விவாகரத்தை பெற்று விடுவதும், உடனே இன்னுமொரு திருமணத்தினை செய்து கொள்வதும், முந்தைய திருமணத்தின் மூலமான பிள்ளைகளுக்கு பராமரிப்பு வழங்கப்படுவதை இன்னும் கேள்விக் குறியாக்குகின்றது.

எனவே இத்தகைய நிலமைகளை கவனத்தில் கொண்டு எமது சமூகத்தின் பெண்களையும் பிள்ளைகளையும் பாதிப்புக் குள்ளாக்கும் நிலைமைகளை சீர்செய்யக் கூடியவிதமாக இறுக்கமான சட்ட ஏற்பாடுகள் ஏற்படுத்தப்படல் அவசியமாகின்றது.

# அத்தியாயம் 06

# இஸ்லாமிய ஷரீஅத்தில் பெண்களின் சாட்சியம் பெறும் அந்தஸ்து

எம்.பீ.எம். பிர்தௌஸ் (நளீமி), எம்.எஸ்.எம். நுஸ்ரி (நளீமி)

## அறிமுகம்

இஸ்லாமிய சட்டவியலில் சாட்சியம் எனும் அம்சத்துக்கு அலாதியான முக்கியத்துவம் உண்டு. சாட்சியம் சொல்வதன் முக்கியத்துவம், சாட்சி சொல்பவரின் தகைமைகள், சாட்சியங்களை ஏற்றுக் கொள்வதற்கான நியமங்கள் என பல்வேறு அம்சங்கள் குறித்து இஸ்லாமிய சட்டம் போதிக்கின்றது.

சாட்சியம் எனும் விடயத்தில் இரண்டு பெண்களின் சாட்சியமானது ஓர் ஆணுடைய சாட்சிக்கு சமமானது என்ற பொதுவான பார்வை முஸ்லிம் சமூகத்தில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. சில அறிஞர்களும் ஓர் ஆணின் சாட்சியமானது இரண்டு பெண்களின் சாட்சியத்துக்குச் சமமானது என்ற வாதத்தையே முன் வைத்துள்ளனர். ஆனால் இவ்வாதம் எந்தளவு ஏற்புடையது என்பதனை விமர்சன ரீதியாக அணுகுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இஸ்லாத்தில் பெண்களின் சாட்சியம்

கடன் கொடுக்கல் வாங்கலின் போதான சாட்சியம் தொடர்பாக அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"உங்கள் ஆண்களில் இருவரை சாட்சியாக்கிக் கொள்ளுங்கள். ஆண்கள் இருவர் கிடைக்காவிட்டால், சாட்சியங்களில் நீங்கள் பொருந்தக் கூடியவர்களிலிருந்து ஆடவர் ஒருவரையும், பெண்கள் இருவரையும் சாட்சிகளாக எடுத்துக் கொள்ளுங்கள். (பெண்கள் இருவர்) ஏனென்றால் அவ்விருவரில் ஒருத்தி தவறினால், இருவரில் மற்றவள் நினைவூட்டும் பொருட்டேயாகும்"[1]

*இந்த வசனத்தினை ஆதாரமாக் கொண்டே ஒரு ஆணின் சாட்சியமானது இரண்டு பெண்களின் சாட்சியத்துக்கு சமமானது என்று கூறப்படுகின்றது. எனவே இந்த வசனத்தை சரிவர புரிந்து கொள்ளல் அவசியமாகின்றது.*

*இந்த வசனம் ஹிஜ்ரி இரண்டில் அருளப்பட்டது. ஜாஹிலிய்யக் காலத்தில் அரபிய ஆண்கள், தங்களுக்கு நிகராக வியாபாரத்தில் ஈடுபடும் உரிமையைப் பெண்களுக்கு வழங்கியிருக்கவில்லை. அவர்கள் மத்தியில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில சீமாட்டிகளே வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். அதிலும் அவர்கள் முதலீட்டாளர்களாக இருந்தார்களே தவிர வியாபார கொடுக்கல் வாங்கல்களில் நேரடியாக சம்மந்தப்படுபவர்களாக இருக்கவில்லை. எனவே, அக்காலத்தில் பெண்கள் வியாபார முறைமைகளையோ, கொடுக்கல் வாங்கல்களோடு சம்மந்தப்பட்ட விடயங்களைப் பற்றி அறிந்தவர்களாகவோ, அதனோடு பரீட்சயம் உடையவர்களாகவோ இருக்கவில்லை. இந்தப் பின்னணியில் காணப்பட்ட ஜாஹிலிய்யக் காலத்துப் பெண்களைப் பற்றியே மேற்சொன்ன அல்குர்ஆன் வசனம் பேசுகிறது.*

*எனவே அப்பெண்களுக்கு வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களில் உரிய பரீட்சயம் இல்லாதிருந்தமையால் ஒரு பெண் சாட்சியளிக்கும் போது எதையேனும் கூறாமல் தவற விடும் சந்தர்ப்பத்தில் இன்னுமொரு பெண் அவளுக்கு நினைவுபடுத்தக் கூடும் என்பதனாலேயே இரண்டு பெண்களின் சாட்சியம் வேண்டப்பட்டது. வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களின் போது எதுவித தொடர்பும் இல்லாது இருந்த பெண்களை அந்தத் துறைக்குள் உள்வாங்கி அவர்களுக்கான உரிமையை படிப்படியாக உறுதிப்படுத்த இறக்கப்பட்ட வசனமாகவே இதனைக் கருத வேண்டும். இதனை ஜமால் பதாவி பின்வருமாறு குறிப்பிடுகிறார். "அக்காலத்தில் வியாபாரம் சார் கொடுக்கல்*

1 *அல்குர்ஆன் 2:282*

*வாங்கல்களில் பெண்கள் அதிகம் ஈடுபடவில்லை. அதற்கான உரிமையும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. நிதிசார் விடயங்களில் பெண்களின் வகிபங்கு உணரப்பட்டிருக்கவும் இல்லை. அப்போதுதான், முதன் முதலில் இஸ்லாம் பெண்களையும் சாட்சிகளாக ஏற்றுக்கொள்ளலாம் எனும் மதிப்பினை அவர்களுக்கு வழங்குகின்றது. ஏனெனில் இந்த வசனத்திற்குப் பிறகு வந்த ஆண்டுகளில் இறக்கப்பட்ட சாட்சியமளித்தல் தொடர்பான அனைத்து வசனங்களிலும் ஆண்களதும் பெண்களதும் தொகையில் எதுவித வித்தியாசங்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது."இதனை விரிவாக நோக்குவோம்.*

## சாட்சியமளித்தல் பற்றிய ஏனைய அல்குர்ஆனிய வசனங்கள்

*சாட்சியமளித்தல் பற்றி ஒன்பது இடங்களில் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. மேற்சொன்ன வசனம் தவிர்ந்த ஏனைய எட்டு இடங்களிலும் சாட்சியமளித்தலின் போது பால்நிலை வேறுபாடு கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதை அவதானிக்க முடியும்.*

### 1. முதலாம் இரண்டாம் வசனங்கள்

*இவ்விரு வசனங்களும் மரண சாசனத்தோடு (உயிலோடு) சம்மந்தப்பட்ட விடயத்தில் சாட்சியாக இருப்பது பற்றிப் பேசுகின்றன.*

> "ஈமான் கொண்டவர்களே உங்களில் யாருக்கேனும் மரணம் சமீபித்து (அவர் மரணசாஸனம் கூற விரும்பினால்) அச்சமயத்தில் உங்களுக்குள் நம்பிக்கைக்குரிய இரண்டு சாட்சிகள் இருக்க வேண்டும்...[2]

> "நிச்சயமாக அவ்விருவரும் பாவத்திற்குரியவர்களாகி விட்டார்கள் என்று கண்டு கொள்ளப்பட்டால், அப்போது உடைமை கிடைக்க வேண்டும் எனக் கோருவோருக்கு நெருங்கிய உறவினர் இருவர் (மோசம் செய்துவிட்ட) அவ்விருவரின் இடத்தில் நின்று: "அவ்விருவரின் சாட்சியத்தைவிட எங்களின் சாட்சியம் மிக உண்மையானது. நாங்கள் வரம்பு மீறவில்லை (அப்படி மீறியிருந்தால்) நாங்கள் அநியாயக்காரர்களாகி விடுவோம்" என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூற வேண்டும்."[3]

---

2 *அல்குர்ஆன் 5:106*

3 *அல்குர்ஆன் 5:107*

இவ்வசனங்கள் ஹிஜ்ரி 5ம் ஆண்டிற்குப் பின்னர் இறக்கப்பட்டன. உயிலுக்கு சாட்சியாக இருப்பதென்பது கடனுக்கு சாட்சியாக இருப்பதை விட பாரதூரமானது. மேலும் ஹிஜ்ரி 2ம் ஆண்டில் இறங்கிய ஒரு ஆணுக்கு இரண்டு பெண் சாட்சி வேண்டும் என்ற வசனத்தை விட இது, சில வருடங்களின் பிற்பாடு இறக்கப்பட்டது. இவ்வசனம் பொதுவாக இரண்டு சாட்சிகள் என்றே குறிப்பிட்டுள்ளது. அது ஆணாகவோ பெண்ணாகவோ இருக்க முடியும். ஏனெனில் அல்குர்ஆன், சட்ட வசனங்களில் ஆண், பெண் எனப் பிரித்து தனித்தனியாகக் கூறாமல் பொதுவாக ஒரு சொல்லை பயன்படுத்துமாக இருந்தால் அது ஆண், பெண் இரு சாராரையுமே குறிக்கும் என்பதே பொதுவான நியதியாகும்.

## 2. மூன்றாம் வசனம்

இது தலாக் முறை விவாகரத்து பற்றியும் அவ்வாறு விவாகரத்து செய்யும் போது அதற்கு இரு சாட்சிகளை வைத்திருப்பது பற்றியும் பேசும் வசனமாகும்.

> "ஆகவே, அவர்கள் தங்கள் (இத்தாவின்) தவணையை நெருங்கினால், அப்பொழுது முறைப்படி (மனைவியராக) அவர்களை நிறுத்தி வைத்துக் கொள்ளுங்கள் அல்லது முறைப்படி அவர்களைப் பிரித்து (விட்டு) விடுங்கள் அன்றியும், உங்களில் நியாயமுடைய இருவரைச் சாட்சியாக வைத்துக் கொள்ளுங்கள். மேலும், சாட்சியத்தை அல்லாஹ்வுக்காக (நேர்மையாக) நிலைப்படுத்துங்கள்."[4]

விவாகரத்து என்பது மனித வாழ்வின் மிகவும் வினயமான ஓர் அம்சமாகும். ஒரு கடன் கொடுக்கல் வாங்கலை விட விவாகரத்தானது வாழ்க்கையோடு சம்மந்தப்பட்ட பிரச்சினையாகும். எனினும் விவாகரத்து விடயத்தில் கூட இரு சாட்சிகள் என பொதுவாக கோரப்பட்டுள்ளதோடு, அச்சாட்சிகள் அல்லாஹ்வுக்குப் பயந்து செயற்படும் நேர்மையானவர்களாக இருக்க வேண்டும் என தேவைப்படுத்தப்படுகிறதே தவிர ஆண் சாட்சி, பெண் சாட்சி என வகைப்படுத்தவில்லை. இதுவும் ஹிஜ்ரி 6ம் ஆண்டில் வசனம் 2:282க்கு பல வருடங்களின் பின்னர் இறக்கப்பட்ட வசனமாகும்.

4 அல்குர்ஆன் 65: 1,2

## 3. நான்காம், ஐந்தாம், ஆறாம் வசனங்கள்

"இது போன்று உங்கள் பெண்களில் யாராவது இழிவான செயலில் ஈடுபடின் அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்க உங்களுள் நால்வரை அழையுங்கள்"[5]

"எவர்கள் கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறி (அதை நிரூபிக்க) நான்கு சாட்சிகளைக் கொண்டு வரவில்லையோ, அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். பின்னர் அவர்களது சாட்சியத்தை எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். நிச்சயமாக அவர்கள்தான் தீயவர்கள்."[6]

"அ(ப்பழி சுமத்தியவ)ர்கள் அதற்கு நான்கு சாட்சிகளைக் கொண்டு வர வேண்டாமா, எனவே அவர்கள் சாட்சிகளைக் கொண்டு வரவில்லையெனில், அவர்கள் தாம் அல்லாஹ்விடத்தில் பொய்யர்களாக இருக்கிறார்கள்."[7]

*இதிலும் விபச்சாரத்தில் ஈடுபட்டதை நிரூபிக்க 4 சாட்சிகள் தேவை என பொதுவான பயன்பாடே கையாளப்பட்டுள்ளது. ஆண், பெண் என வேறுபடுத்திக் காட்டப்படவில்லை. இது ஒரு குற்றம் புரிந்ததை நிரூபிப்பதற்கான ஏற்பாடு. வியாபார கொடுக்கல் வாங்கல்களை விடவும் குற்றவியல் விடயங்கள் பாரதூரமானவை என்பது யாவரும் அறிந்தது. இத்தகைய குற்றவியல் விடயங்களில் பெண்கள் சாட்சியம் அளிக்க முடியாது என இருந்திருப்பின் அது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். இங்கு அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்பது அவதானிக்கத்தக்கது. அதேசமயம் இங்கு கவனிக்கப்பட வேண்டிய இன்னுமொரு விடயம் ஆண்கள் மீது அவதூறு கூறப்படுவதோ அல்லது அதனை நிரூபிக்க சாட்சியங்கள் கோரப்படுவதோ இல்லை என்பதாகும்.*

*ஜாஹிலிய்யாக் காலம் தொட்டு இன்று வரை பெண்களுக்கு எதிராக மட்டுமே சமூக அமைப்புக்கள் எல்லாம் அவதூறு பரப்புவதில் முன்னிற்கின்றன என்பதையும், இவ்வாறு பெண்கள் மீது அவதூறு கூறுகின்றமையின் பாரதூரத்தினையும் இவ்வசனங்கள் உணர்த்துகின்றன.*

5 *அல்குர்ஆன் 4:15*
6 *அல்குர்ஆன் 24:04*
7 *அல்குர்ஆன் 24:13*

## 4. ஏழாம் மற்றும் எட்டாம் வசனங்கள்.

*இவ்வசனங்கள், லிஆன் எனும் சாப அழைப்புப் பிரமாணம் குறித்துப் பேசும் வசனங்களாகும். அதாவது, ஒரு கணவனோ அல்லது மனைவியோ தனது துணையின் ஒழுக்கத்தில் சந்தேகம் கொண்டு, அதற்கு சாட்சிகளும் இல்லையாயின் தான் சொன்னது உண்மை என நான்கு முறை சத்தியமிட்டு உறுதிப்படுத்தி இறுதியாக தான் சொன்னது பொய்யாயின் அல்லாஹ்வின் சாபம் தன் மீது உண்டாக்கப்படும் எனக் கோரிக் கொள்வதாகும்.[8] இங்கு ஆணிடமும், பெண்ணிடமும் சரிசமனாக நான்கு சத்தியங்களே கோரப்பட்டுள்ளன. இங்கும் ஆண், பெண் சமத்துவத்தை இஸ்லாம் பேணியுள்ளது தெளிவாகிறது.*

## சாட்சியமளித்தலில் சம உரிமை உண்டா? இல்லையா?

*சில அறிஞர்கள் அல்குர்ஆனின் பால்நிலை சமத்துவம் தொடர்பான ஒட்டுமொத்தப் பார்வையையும், சாட்சியம் பற்றிய அல்குர்ஆனின் ஒட்டுமொத்த நோக்கு நிலையையும் கருத்திற் கொள்ளாமல் முடிவுக்கு வருகின்றனர். இவர்களில் ஒரு சாரார் கொடுக்கல் வாங்கல் விடயத்தில் மாத்திரம்தான் பெண்ணுடைய சாட்சியம் ஆணுடைய சாட்சியத்தின் அரைவாசி என்றும் மற்றொரு சாரார் பொதுவாக எல்லா சட்சியங்களிலுமே பெண்ணினது சாட்சியம் ஆணிண் சாட்சியத்தின் அரைவாசியே என்றும் குறிப்பிடுகின்றனர். தம் வாதத்தினை உறுதிப்படுத்த பெண்ணுக்கு எப்போதும் மறதி ஏற்படும் என்ற பிழையான கருத்தை முன் வைக்கின்றனர்.*

*திறமைகள், ஆற்றல்கள், ஞாபக சக்தி, மறதி, புனைந்து கூறுதல், பயப்படுதல், உணர்ச்சிவசப்படுதல், ஆகிய அனைத்து பண்புகளும் ஆண்களுக்கும் உரியன. பெண்களுக்கும் உரியன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கூட தொழும் போது தொழுகையின் றக்அத்துகளில் மறதி அல்லது சந்தேகம் ஏற்பட்டு அதற்கு பரிகாரமாக ஸ ஜ்தா ஸஹ்வு (தொழுகையில் ஏற்படும் மறதிக்கு குற்றப் பரிகாரமாக செய்யப்படும் ஸஜ்தா எனும் சிரம் சாய்த்தல்) செய்திருக்கின்றார்கள். மனிதன் மறதிக்கும், தவறுக்கும் மத்தியில் படைக்கப்பட்டவன் என்று இஸ்லாம் பால்*

8 *அல்குர்ஆன் 24: 6-7*

வேறுபாடின்றி பொதுவாகவே குறிப்படுகிறது. இது இவ்வாறிருக்க மறதியை பெண்களுக்கு மட்டும் உரிய பண்பாக எப்படிக் குறிப்பிட முடியும்?

மிகவும் குறுகிய பொருள்கோடலின் அடிப்படையில் நின்று கொண்டு, இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய அடிப்படை உரிமைகளை நீக்கி, பெண்ணை ஆணிண் பாதியாக்கி, சமூகத்தில் இரண்டாம் தர பிரஜையாக்கி, ஆணாதிக்கத்தை சமூகத்தில் நிலைநிறுத்துவதற்கு இவ்வசனத்தை பிழையாகப் பிரயோகிக்கின்றனர். இதனால் இன்றளவும் பெண்களின் அந்தஸ்த்து பற்றிய பல்வேறு பிழையான முடிவுகள் பெறப்பட்டுள்ளன. சாட்சியம் என்கின்ற வரையறையைத் தாண்டி முஸ்லிம் சமூகக்கட்டமைப்பில், குறிப்பாக நீதித்துறை சார்ந்த பொறுப்புக்களில் முஸ்லிம் பெண்களின் அந்தஸ்த்து கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

இவ்வசனம்(2:282) இறக்கப்பட்ட பின்னணி, சாட்சியம் குறித்த அல்குர்ஆனின் முழு நிலைப்பாடு, நபிகளாரின் வாழ்வியலில் பெண்களின் சாட்சியம் சம்பந்தமாக நிகழ்ந்த சம்பவக் குறிப்புகள், அல்குர்ஆன் குறிப்பிட்ட வசனத்தில் கையாண்டுள்ள மொழிரீதியான சொற்பிரயோகங்களின் வியாக்கியானங்கள், பால்நிலை சமத்துவத்தைப் பேணும் வகையில் அமைந்த இஸ்லாத்தின் ஏனைய போதனைகள் என்பவற்றை அடிப்படையாக வைத்து நோக்குகின்ற போது மேற்சொன்ன வசனம் பெண்களின் சாட்சியம் குறித்து பேசுவதில் தனித்துவமானது என்பதும், இஸ்லாமிய சட்டவியலில் பெண்களின் சாட்சியம் ஆண்களின் சாட்சியத்துக்கு நிகராக ஏற்றுக்கொள்ளத்தக்கதே என்பதும் இன்றைய கால இஸ்லாமிய அறிஞர்களான கலாநிதி தாஹா ஜாபிர்அல்அல்வானி, கலாநிதி யூசுப் அல்கர்ளாவி, கலாநிதி ஜமால் பதாவி, சேஷாத் சலீம் போன்றவர்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

சுருங்கக் கூறின், சாட்சியம் குறித்து வந்துள்ள 2: 282 தவிர்ந்த ஏனைய 8 வசனங்களில் எதுவும் ஆண் சாட்சி, பெண் சாட்சி என வரையறுக்காது பொதுவாகவே காணப்படுகின்றன. அத்தோடு 2:282 ல் குறிப்பிடப்பட்ட கடன் கொடுக்கல் வாங்கலை விட பாரதூரமான மரண சாசனம் (உயில்),

விவாகரத்து, குற்றவியல் போன்ற விடயங்களில் கூட பெண்ணிடம் ஆணை விட இரு மடங்கு சாட்சியம் கோரப்படவில்லை. அது மட்டுமன்றி ஏனைய எட்டு வசனங்களுமே அல்குர்ஆன் வசனம் 2:282 இனை விட காலத்தால் பிந்தியவையாகும். எனவே ஓர் ஆணுக்கு இரண்டு பெண்களே சாட்சியத்தில் சமனாகும் என்ற விதி தொடர்ந்து அமுலில் இருந்திருந்தால் ஏனைய எட்டு வசனங்களிலும் அது உணர்த்தப்பட்டிருக்க வேண்டும். ஆகவே இஸ்லாமிய சட்டத்தில் ஆணைப் போலவே பெண்ணுக்கும் சாட்சியம் அளிக்கும் சம உரிமை வழங்கப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.[9]

ஒரே ஆத்மாவிலிருந்து ஆணையும் பெண்ணையும் அல்லாஹ் படைத்திருக்கும் போது, ஆணுக்கும் பெண்ணுக்கும் கூலிகளில் பாரபட்சமில்லை என அல்லாஹ் பறைசாற்றும் போது, நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் மிகப் பெரும் சமூகப்பணியையே ஆண்களும் பெண்களுமாக இணைந்தே ஆற்ற வேண்டும் என அல்குர்ஆன் வலியுறுத்தும் போது, பெண்கள் ஆண்களை விட எவ்விதத்திலும் குறைந்தவர்கள் எனப் பொருள்கொள்ள எந்த ஆதாரமும் கிடையாது. அவ்வாறு கருதுவதாயின் அவர் இஸ்லாம் பற்றிய சரியான புரிதல் இல்லாதவர் என்றே கருத வேண்டியுள்ளது.

## முடிவுரை

இன்றைய கால கட்டத்தில் பெண்கள் பல விடயங்களிலும் ஆண்களுடன் சரிசமமாக போட்டியிடக்கூடியவர்களாக மாறி யுள்ளனர். ஆசிரியைகளாக, கலாநிதிகளாக, பெரும் ஆய்வாளர்களாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக, வர்த்தகர்களாக, இராணுவ வீராங்கனைகளாக, விளையாட்டு வீராங்கனைகளாக என பலவேறு பரிமாணங்களை எடுத்துள்ளார்கள். ஆண்களை விட பெண்கள் அறிவில் குறைந்தவர்கள் என்று சிந்திப்பது அறிவுடைமையல்ல. எந்தவொரு அல்குர்ஆன் வசனமும் அல்லது நபிமொழியும் பெண்களை அறிவில் குறைந்தவர்கள் என்றோ ஆண்கள் அறிவில் உயர்ந்தவர்கள் என்றோ சொல்லவில்லை.

ஆண்களில் அறிவில் உயர்ந்தவர்களும், அறிவில் குறைந்தவர்களும் இருப்பதைப் போலவே பெண்களிலும்

9 Yusuf Al-Qaradawi and Jamal Badawi, Islam's Stance on Women's Testimony, 2006.12.05 www.onislam.net/english/ask-the scholar/ muslim-creed/muslim-belief/174916.html

அறிவில் உயர்ந்தவர்களும், அறிவில் குறைந்தவர்களும் இருக்கிறார்கள் என்பதே ஏற்புடையதாகும். இந்த அடிப்படையில் சாட்சியத்துடைய விடயத்தில் ஆணை விட பெண் தரத்தில் குறைந்தவள் எனக் கூறுவதற்கு எவ்வித நியாயமோ, ஆதாரமோ கிடையாது.

நபியவர்களின் வாழ்வியல் வரலாற்றை நுணுக்கமாக ஆராயும் போது பெண்களின் சாட்சியங்களுக்கு அவர்கள் அங்கீகாரம் அளித்துள்ளமையை அவதானிக்க முடியும். குறிப்பாக பிறை பார்க்கும் விடயங்களில் கூட தனித்த ஒரு பெண்ணின் சாட்சியத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். நபியவர்கள் தன்னிடம் வந்த சாட்சியங்களை நீதியானதா என்று பார்த்தார்களே தவிர அவை ஆணா பெண்ணா என நோக்கவில்லை என முஹம்மத் முதவல்லி அஷ்ஷ/ராவி குறிப்பிடுகிறார்கள்.

எவ்வாறு அன்றைய காலகட்டத்தில் நிதிசார் கொடுக்கல் வாங்கல்களில் ஒரு ஆணுக்கு நிகராக ஒரு பெண்ணின் சாட்சியத்தையும் மற்றொரு பெண்ணின் ஞாபகப்படுத்தலையும் இஸ்லாம் நிகராக்கியதோ அதேமாதிரி இன்றைய காலகட்டத்தில் நிதிசார் கொடுக்கல் வாங்கல்களில் பட்டம் பெற்ற, அனுபவமுள்ள ஒரு பெண்ணின் சாட்சி உண்மையாகவே அத்துறையில் கல்வியறிவற்ற, அனுபவமற்ற ஆணின் சாட்சிக்கு ஈடாக முடியாது. இன்று மிகவும் வெற்றிகரமாக நிதிசார் கொடுக்கல் வாங்கல்களில் தமது திறமைகளை வெளிக்காட்டி பிரகாசிக்கும் எத்தனையோ பெண்களும், நீதித்துறையில் சட்டத்தரணிகளாகவும், நீதிபதிகளாகவும், நடுவர்களாகவும், மத்தியஸ்தர்களாகவும், ஜூரிமார்களாயும் வெற்றிகரமாகத் திகழும் எத்தனையோ பெண்களும் உலகளாவிய ரீதியில் காணப்படுகின்றனர். இந்த ஒவ்வொரு பெண்களும் விரிவான, சமத்துவமான அல்குர்ஆனின் போதனைகளை தமது சொந்தக் கருத்துக்களுக்குள் திணிக்க முற்படுபவர்களின் பிழையான வழிகாட்டலுக்கு எதிரான தெளிவான முன்னுதாரணங்கள் ஆவார்கள்.

# அத்தியாயம் 07.1

இஸ்லாத்தில் பெண்களின் கல்வி மற்றும் பொருளாதார சமத்துவம்

# இஸ்லாத்தில் பெண்கள் கல்வி கற்பதற்கான உரிமை

அஷ்ஷெய்க் ஏ.எம். மிஹ்ழார் (நளீமி), அஷ்ஷெய்ஹ் எம்.பி. நௌபர் (முஅய்யிதி)

*இந்தக் கட்டுரை பெண்ணுக்குரிய கல்வியுரிமை பற்றிய கருத்தியலைக் கட்டமைக்க முற்படுகின்றது. பெண்களுக்கான கல்விக்கான உரிமை தொடர்பில் இஸ்லாத்தின் கற்பித்தல்களை முன்னிறுத்த முயலுகின்றது. பெண்கள் தம்மை முன்னேற்றிக் கொள்ளவும் வலுப்படுத்திக் கொள்ளவும் கல்விக்கான உரிமை எவ்வளவு முக்கியமானது என்பதை விளக்க முனைகிறது. இஸ்லாமிய அடிப்படையில் இறைவனின் பொருத்தத்தை அடைந்து கொள்வற்கும் இன்றியமையாத கல்வியைப் பெறுவது எவ்வளவு முக்கியம் என்பதை கூர்ந்து நோக்க விளைகின்றது. நபிகளாரின் காலத்தில் பெண் கல்வி ஊக்குவிக்கப்பட்ட விதம் பற்றிய கருத்துக்களைத் தொகுத்துத்தர முற்படுகின்றது. இஸ்லாமிய வரலாற்றில் சட்டக்கலை மற்றும் இதர அறிவியில் துறைகளில் பெண்கள் ஆற்றிய பங்கினை முன்னிறுத்தி, இஸ்லாத்தில் பெண் கல்வியின் பரப்பினை துலக்க முயல்கின்றது.*

## இஸ்லாமிய நோக்கில் கல்வி

> "கல்வியைத் தேடுவது அனைத்து முஸ்லிம்களின் மீதும் கடமையாகும்"[1]

இது ஆண் பெண் ஆகிய இருபாலாருக்குமான கடமையாகும். மனித வாழ்வில் பங்கு வகிக்கும் எல்லாத் துறைகளுடனும் தொடர்பான பல உண்மைகளையும், அவற்றோடு

1 *சுனன் இப்னு மாஜா* ***224.***

தொடர்புடைய பல அடிப்படைகளையும் குறிப்பிட்டு அல்குர்ஆன் ஆராயுங்கள், சிந்தியுங்கள், திட்டமிடுங்கள் எனப் பகிரங்கமாக கற்றலை ஊக்குவிக்கின்றது.[2] இது ஆண்களை மட்டும் குறித்துச் சொல்லப்படவில்லை. மாறாக முழு மனித சமூகத்தையும் நோக்கிச் சொல்லப்படுகின்றது. கல்வியுடையவர்களே அல்லாஹ்வை அஞ்சுகின்றனர் என்பது அல்குர்ஆனின் கருதுநிலை.[3] ஆணாயினும், பெண்ணாயினும் ஈமானிய பலத்தைப் பெறுவதற்கு கல்வி முக்கியம் என்பது இங்கு தெளிவாகின்றது.

## இஸ்லாத்தின் கல்விப் பிரகடனம்

> "ஓதுவீராக. உம்முடைய இரட்சகனின் பெயரைக் கொண்டு நீர் ஓதுவீராக"[4]

ஓதுவீராக அல்லது வாசிப்பீராக என்பதே அல்குர்ஆனின் முதலாவது அருளப்பட்ட வசனமாக இருக்கின்றது. ஓதுவீராக என்று மாத்திரமல்லாது கற்பீராக, படிப்பீராக, ஆய்வு செய்வீராக என்பதை இவ்வசனம் வலியுறுத்துகின்றது. இது ஆண், பெண் இருபாலாருக்குமான பிரகடனமாகும். கல்வியைத் தேடிக் கற்கும் கடமையில் பெண்ணைப் புறக்கணித்து இவ்வசனம் அருளப்படவில்லை.

## கல்வியின் முக்கியத்துவம் - ஒரு பால்நிலை நோக்கு

> "யார் கல்வியைத் தேடி அல்லாஹ்வின் பாதையில் செல்கின்றாரோ அவருக்கு அவருடைய பாதையை அல்லாஹ் எளிமையாக்கி வைக்கின்றான். அவர்கள் மீது மலக்குகள் தமது சிறகுகளை விரிக்கின்றனர். நீர் நிலைகளில் உள்ள மீன்கள் அவர்களுக்காக துஆ செய்கின்றன."[5]

"கற்றோரும், கல்லாதோரும் சரி சமமாவார்களா?" என அல்குர்ஆன் வினவுகின்றது. கற்றவர்களுக்கு உள்ள சிறப்பையும் தனித்துவத்தையும் இது எடுத்துக்காட்டுகின்றது. இவை அனைத்தும் பால் வேறுபாடுகளின்றி கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.[6]

---

2அல்குர்ஆன் *96: 1, 2, 3, 4, 5, 20:114, 22:54*

3 அல்குர்ஆன் *35:28*

4 அல்குர்ஆன் *96:1*

5 *அறிவிப்பவர் அபுஹுரைரா (ரழி), அபூ தாவூத் கிதாபுல் இல்ம், 3634.*

6 மேலதிக வாசிப்பு: *அஷ்ஷெய்க் அல்கஸ்ஸாலி (2002) இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள், சென்னை இக்ரா பதிப்பகம்*

## நபி (ஸல்) அவர்களும் பெண் கல்வியும்

*நபி (ஸல்) அவர்கள் பெண்ணின் கல்வி மேம்பாட்டுக்கு மதிப்பளித்தார்கள். பெண் என்ற காரணத்துக்காக சமூகத்து டனும் உலகத்துடனும் அவளுக்குள்ள தொடர்புகளுக்குத் திரையிட்டு நான்கு சுவர்களுக்குள் அடைத்து வைக்கின்ற போக்கை நபி (ஸல்) அவர்கள் கையாளவில்லை. பெண் என்பவள் இறைவனின் பிரதிநிதி என்ற வகையில் பூமியை வளப்படுத்துவதற்கு தேவையான ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்வதற்குரிய களத்தையும், கற்றல் கற்பித்தலுக்கான ஆரோக்கியமான சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் உருவாக்கிக் கொடுத்தார்கள்.*

*அன்சாரிப் பெண்கள் நபிகளாரிடம், உங்களை நாங்கள் சந்திக்க முடியாதளவு ஆண்கள் எங்களை மிகைத்து இருக்கின்றனர். நாங்கள் கல்வி கற்றுக்கொள்ள தனியாக எங்களுக்கான ஒரு நாளைக் குறிப்பிடுங்கள் எனக் கேட்டபோது நபி(ஸல்) அவர்கள் பெண்கள் நல்ல தெளிந்த அறிவுப் பெற்று திகழ வேண்டும் என்பதற்காக வாரத்தில் ஒரு நாளை பெண்களுக்கென ஒதுக்கினார்கள்.[7] இது பெண்களும் கல்வி கற்பது கடமை என்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது. அதுமட்டுமன்றி நபியவர்கள் எவ்வளவு தூரம் பெண்கள் கல்வி அறிவை மேம்படுத்த ஊக்கமளித்தார்கள் என்பதையும் காட்டுகின்றது.[8]*

*மேலும் அடிமைப் பெண்களுக்கு, யாரும் கல்வி புகட்டினால் அவருக்கு இரட்டிப்பு நன்மை என்ற நபி மொழி அன்றைய காலத்தில் எதுவிதமான உரிமைகளும் அற்றிருந்த அடிமைப் பெண்கள் கல்வி கற்பதனையே எந்தளவு தூண்டினார்கள் என்பதற்குச் சான்றாகும்.[9] இது இன்றைய நிலையில் ஒவ்வொரு முஸ்லிம் பெண்ணும் கல்வி கற்பது எவ்வளவு முக்கியமானது என்பதனை உணர்த்துவதாக உள்ளது.[10]*

## மார்க்கக் கல்வித் துறையில் முஸ்லிம் பெண்கள்

*ஆயிஷா (றழி), ஹப்ஸா (றழி), உம்முஸல்மா (றழி) ஆகியோர் முழுக்குர்ஆனையும் மனனமிட்டு தெரிந்து வைத்திருந்தார்கள். மேலும் அல்குர்ஆன் விளக்க உரைகளை வழங்கும் தப்ஸீர் கலையில் ஆயிஷா (றழி) அவர்கள் புலமை மிக்கவராக*

7 *ஸஹீஹுல் புகாரி 101*
8 *சுனன் அபூதாவூத் 5147*
9 *ஸஹீஹுல் புகாரி 97, ஸஹீஹ் முஸ்லிம் 241*
10 *ஸஹீஹுல் புகாரி, பாகம் 3, 723.*

காணப்பட்டார். உம்மு அஸத் அல்குர்ஆன் தொடர்பான விளக்க உரைகளை நிகழ்த்தினார். (உஸதுல் காபா) ஹதீஸ் துறையில் பிரபல்யமாக விளங்கிய கரீமா அல்மர்ஸவிய்யா, சய்யிதா அல்வுரா முக்கிய இடம் வகிக்கின்றனர்.[11] அப்பாஸியக் காலப்பிரிவில் அப்துல் வாஹித் எனும் பெண்மணி தலை சிறந்த அறிஞராகத் திகழ்ந்தார்.[12] அல்ஹாபிழ் அஸ்ஸஹபியின் கூற்றுப்படி பெண் ஹதீஸ் அறிவிப்பாளர்களின் பங்களிப்பைப் பொறுத்த வரையில் அவர்களது ஹதீஸ் அறிவிப்பு குறித்து அதிருப்தி தெரிவிக்கப்படவோ, நிராகரிக்கப்படவோ இல்லை.

இப்பெண்கள் ஆழமாக கற்று பிறருக்கும் போதிக்கும் தெளிவையும் ஆற்றலையும் பெற்றிருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) மற்றும் நபித்தோழர்கள் மூலமாக நபிமொழிகள் அறிவித்த எழுநூறு பெண் அறிவிப்பாளர்கள் மூலம் மூத்த மார்க்க அறிஞர்களில் பலர் அந்த நபிமொழிகளை நமக்கு அறிவித்திருக்கிறார்கள்.[13] மேற்குறிப்பிடப்பட்ட வரலாற்றுப் பதிவுகள் நபி (ஸல்) காலம் முதல் கல்வித் துறையில் பெண்களது ஈடுபாட்டையும் அது குறித்த அங்கீகாரத்தையும் பிரதிபலிக்கின்றன. விவேகம், மதிநுட்பம், துறைசார் புலமைத்துவம் ஆண், பெண் என்ற பாகுபாடின்றி யாரிடமும் காணப்படலாம். எனவேதான் இருபாலாருக்கும் கல்வி கட்டாயக் கடமையாக கூறப்பட்டுள்ளது.

## பெண் கல்வி பற்றிய சமூக விமர்சனம்

பெண்கள் கல்வி கற்கும் விடயத்தில் சமூகத்தில் பிழையான எண்ணக்கருக்கள் இருப்பது தொன்று தொட்டு வளர்ந்து வந்துள்ள சம்பிரதாயமாகும். பெண் ஆணைப் போன்றவளல்ல, அவளுக்கு கொஞ்சம் எழுத வாசிக்க தெரிந்தால் போதும், பிள்ளை பெறுவதும், துவைப்பதும், சமைப்பதும்தான் பெண்ணுக்குரிய பணிகள், பெண் வீட்டுக்குள் அடக்கப்படுவதே சிறந்தது என்று மாயையாக நினைக்கிறார்கள். பெண் கல்விக்கு எதிரான இவர்கள் பெண் அதிகம் படித்தால் அடங்கமாட்டாள், நிறையப் படித்தால் மணமகன் தேடுவது சிரமம் என்றெல்லாம் பல்வேறு நொண்டிக் காரணங்களை முன்வைத்து பெண் கல்விக்கும் பெண் சமூகத்திற்கும் இழுக்கை ஏற்படுத்துகின்றனர்.

11 Assheik Muhammed Ali-Al-Hashimi, Omar Sherif Ibnu Abdus Salam (2010), Munmathiri Muslim Penmani, p.165

12 அறிவிப்பாளர்களாக பெண்கள், ஜமீல் அஹம்மத், இப்னு ரஷீத், (மொ. பெ.) 13:1.

13 இப்னு ஸஅது (ரஹ்)

இஸ்லாம் ஆண் பெண் இருபாலாருக்கும் கல்வியை வலியுறுத்தி இருக்கும் நிலையில் பெண்கள் கல்விக்கான சூழல் இல்லை என்று காரணம் கூறி பெண் சமூகத்தின் கல்விக்குத் தடைபோடப்படுகின்றது. பொருத்தமான கல்விச் சூழலை உருவாக்கிக் கொடுத்து பெண் சமூகத்தை கல்வி ரீதியாக விழிப்படையச் செய்வது முஸ்லிம் சமூகத்தின் கூட்டுக் கடமையாகும். அது மட்டுமன்றி இஸ்லாத்தில் பெண்கள் கல்வி கற்கத் தேவையில்லை என்று கருதி தம் பெண் பிள்ளைகளை வீட்டுக்குள்ளேயே முடக்குகின்றனர். அதேசமயம் அப்பெண்களை மகப்பேற்றிற்காக பெண் வைத்தியரிடமே கொண்டு செல்ல வேண்டும் என்றும் தேடுகின்றனர். இது இவர்களின் முரண்பாடான சிந்தனை களையே காட்டுகின்றது. எனவேதான் பெண் கல்வியின் அவசியம் பற்றி பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக ஆளுமையை விருத்தி செய்வதற்காக பெற்றோர்கள் பல்வேறு தியாகங்களை மேற்கொள்ள வேண்டும்.

அப்துர் ரஹ்மான் என்பவர் சமூக உரையாடல் ஒன்றின் போது கூறிய பின்வரும் கருத்து மனங்கொள்ளத் தக்கது. "பெண் கல்வியை கற்க வேண்டும் என்பதில் கருத்து முரண்பாடு இருக்க முடியாது. அது அவளது உரிமை. எனவேதான், சமூக முன்னேற்றத்திற்காகவும், குடும்ப முன்னேற்றத்திற்காகவும் தனது கல்வியைத் தொடரும் பெண் இல்லத்தரசியாக இருக்கும் போது, குடும்பத்தில் உள்ள முக்கியமான பொறுப்புக்களுக்காக சமூகத் தொடர்பில் தனக்குள்ள பொறுப்பினை சமரசம் செய்து விடக் கூடாது. குடும்பம், சமூகம் ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் இடையில் பரஸ்பர சமநிலையை பெண் பேணிக்கொள்வது முக்கியமானது. இவ்வாறே குடும்பப் பொறுப்புக்களோடு குடும்பம், சமூகம் ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் இடையில் பரஸ்பர சமநிலையை ஆண் பேணிக்கொள்வதும் முக்கியமானது. ஒருவருடைய சமூக வாழ்க்கை குடும்ப வாழ்வையோ, குடும்பவாழ்க்கை சமூக வாழ்வையோ பாதிக்கக்கூடாது. இது ஆண் பெண் இருவருக்கும் பொதுவானது. இவை இரண்டு பற்றியும் அல்லாஹ் இரு சாராரிடமும் விசாரிப்பான். எனவே இந்த கூட்டுப் பொறுப்பை நிறைவேற்றும் போது, கணவனும் மனைவியும் இஸ்லாம் காட்டிள்ள அன்பு, கருணை,

விட்டுக்கொடுப்பு, கூட்டுப் பொறுப்பு, பொறுப்புக் கூறல், ஆதரவளித்தல், கலந்தாலோசனை செய்தல் போன்ற இனிய நல்ல பண்புகள் மூலம் கூட்டுறைவையும் இறையச்சத்தையும் பேண வேண்டும்.”[14]

கல்வியுடன் தொடர்பான நினைவாற்றல், மனன சக்தி, மதிநுட்பம், கருத்துத் தெரிவித்தல், தீர்மானம் மேற்கொள்ளல் என அனைத்து ஆற்றல்களும் இருபாலாரிடமும் காணப் படுகின்றன. கல்வி என்பது பெண்ணின் அடிப்படை உரிமை. எனவேதான் ஒரு பெண் தொழில் புரிந்தாலும் புரியாவிட்டாலும் தன்னையும், பிறரையும் வழி நடத்தக்கூடிய அறிவாற்றலை, திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பெண் படிக்க வேண்டும் என்று சிந்திப்பவர்கள் கூட, அதிக பட்சமாக ஒரு ஆசிரியையானால் போதும் என்ற குறுகி மனப்பான்மையுடன் இருப்பதற்கு காரணம் நம்மை அண்டியுள்ள சமூக நிலவரமும், பெண் கல்வியுடன் நமக்குள்ள தொடர்புமாகும். கற்பதைப் போலவே கற்றுக் கொண்டவற்றினை பிரயோசனப்படுத்துவதும் சமய ரீதியாக முக்கியத்துவம் பெறுவதால் ஒரு மாணவியின் கல்வி இலக்குகள் உயர்ந்ததாக அமைய வேண்டும்.

சமூகத்திற்கு அத்தியாவசியமான கல்வித் துறைகளை சமூகத்தில் கற்று தேர்ச்சி பெறுவது இன்றியமையாதது.[15] பெண்களுக்கான கல்விக்கான உரிமை எவ்வளவு முக்கியமோ அதனை அவர்கள் அடைந்து கொள்ளும் வழிவகைகளையும் செய்தல் முக்கியமானதாகும். இத்தகைய கல்விக்கான உரிமைகளை பெண்கள் அனுபவிக்க வழி செய்வதன் மூலமே அறிவுடைய வலுவுடைய ஒரு சிறந்த சமூகத்தைக் கட்டி எழுப்ப முடியும்.

---

14 அங்குநொச்சிய முஸ்லிம் மகா வித்தியாலயம், ஹொரவப்பொத்தானை, (12.09.2014)

15 மேலதிக வாசிப்புக்கு: M.S.Chaudry (1991), Women’s rights in Islam, Lahore ; M.Ali Hashimi, Meezanul Ihthithal.

# அத்தியாயம் 07.2

இஸ்லாத்தில் பெண்களின் கல்வி மற்றும் பொருளாதார சமத்துவம்

# இஸ்லாத்தில் பெண்கள் தொழில் செய்வதற்கான உரிமை

அஷ்ஷெய்க் ஏ.எம். மிஹ்ழார் (நளீமி)

*இஸ்லாத்தில் உழைப்பு ஒரு வணக்க வழிபாடாகக் கணிக்கப்படுகிறது. இறைவனின் பிரதிநிதியான ஒவ்வொரு விசுவாசியும் இபாதத் எனும் வணக்கவழிபாட்டில் அக்கறை காட்டுவது போலவே, பூமியை வளப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இன்றியமையாதது. ஒவ்வொருவரும் தமது அறிவு, ஆற்றல், திறன்களுக்கு ஏற்ப தமது பங்களிப்பை நல்க வேண்டுமென இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. இதனை கீழ்வரும் அல்குர்ஆன் வசனத்தில் இருந்து புரிந்து கொள்ளலாம்.*

> "ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்தவற்றில் உரிய பங்குண்டு. அவ்வாறே பெண்களுக்கும் அவர்கள் சம்பாதித்தவற்றில் உரிய பங்குண்டு. எனவே அல்லாஹ்விடம் அவன் அருளைக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருட்களையும் நன்கு அறிந்தவனாக இருக்கிறான்."[1]

*இஸ்லாமிய வாழ்க்கை நெறி நம்பிக்கை கோட்பாடு, இஸ்லாமிய சட்டம், இஸ்லாமிய ஒழுக்கப் பெறுமானங்கள் ஆகிய மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டது. மேற்குறிப்பிட்ட இஸ்லாமிய சட்டம் வணக்க வழிபாடுகள், வணக்க வழிபாடு சாராத முஆமலாத் எனப்படக்கூடிய அன்றாட கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இஸ்லாமிய வணக்க வழிபாடுகளின் உள்ளடக்கத்தைப் பொறுத்த வரையில்*

1 *அல்குர்ஆன் 4:32*

அவையனைத்தும் இஸ்லாமிய போதனைகளால் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால், இஸ்லாமிய பொருளாதாரத்தை எடுத்துரைக்கின்ற "முஆமலாத்" எனும் பகுதியில் பொருளாதாரம், அரசியல், சமூகவியல் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளின்போது இஸ்லாமிய வரையறைக்குட்பட்டு புதிய அணுகுமுறைகளை, பொறிமுறைகளை, ஆலோசனைகளை உள்வாங்க இஸ்லாம் அனுமதித்துள்ளது.

## தொழிற் துறைகளில் பெண்கள் பங்கேற்றல் : வரலாற்று நோக்கு

இஸ்லாத்திற்கு முற்பட்ட காலப் பிரிவில், பெண்களுக்கு கிடைக்கப் பெற வேண்டிய பொருளாதார நலன்களை ஆண்கள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். இந்நிலைமை இஸ்லாத்தின் தோற்றம் முதல் மாற்றம் கண்டது. இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர் முஹம்மத் ஹமீதுல்லாஹ் இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிம் பெண்களின் தொழில் துறை ஈடுபாடு பற்றி பிரஸ்தாபிக்கும் போது நபி (ஸல்) அவர்களது காலப் பகுதி உட்பட அனைத்து காலப் பகுதிகளிலும் பெண்கள் தமக்குப் பொருத்தமான அனைத்து தொழிற் துறைகளிலும் ஈடுபட்டனர் என்கிறார்.[2] தொழில் முயற்சிகளில் பெண்களின் பங்கேற்பை உணர்த்துவதாக ஷுஐப் (அலை) அவர்களின் புதல்விகள் அவரது, ஆட்டு மந்தைகளை மேய்த்த சம்பவத்தை அல்குர்ஆன் நினைவூட்டுகிறது.[3]

நபிகளாரின் மனைவிமார்களைப் பொறுத்தளவில் சமூக, பொருளாதார விடயங்களில் அந்தக் காலத்திற்கே உரிய சூழ்நிலையில் தமது மனைவிமாரின் இயலுமைகளுக்கு நபியவர்கள் களமமைத்துக் கொடுத்துள்ளார்கள். கதீஜா நாயகி வியாபார நிபுணராக இருந்தார்கள். அவரின் தலைமையில் பல ஆண்கள் தொழில் செய்தனர். சவ்தா நாயகி உளவியல் ஆளுமை மிக்கவர்களாக இருந்தார்கள். ஆயிஷா(ரலி) அவர்கள் இஸ்லாமிய சட்டத்துறையில் விற்பன்னராகவும், சட்ட விளக்கம் அளிப்பவர்களாகவும் இருந்தார்கள். ஹப்ஸா(ரலி) அவர்களுக்கு அல்குர்ஆன் தொகுப்பில் முக்கிய இடம் உண்டு. நபி (ஸல்) அவர்களின் மற்றொரு மனைவியான ஸெய்னப் (ரலி) அவர்கள் தோல் பதனிடும் கைத்தொழில் அறிந்தவர்களாக இருந்ததுடன் அதன் மூலம் பொருள் ஈட்டினார்கள். அன்னை சபீயா அவர்கள் யூத முஸ்லிம் சமூகங்களிடையே பிரச்சினைகளைத்

---

2, Muhamed Hameedullah, The Muslim Woman, Islamabad, Dawah Academy, p.6

3 அல்குர்ஆன் 28:23

தீர்ப்பதில் பங்காற்றியுள்ளார். இதிலிருந்து பெண்கள் வீட்டில் முடங்கி கிடக்கக் கூடியவர்கள் அல்லர். மாறாக, அவர்கள் ஆண்களைப் போல சொந்தமாகத் தொழில் செய்ய, வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டவர்கள் என்பதைக் காணலாம்.

இது மட்டுமன்றி பெண்கள் தாதிகளாகவும், சில சந்தர்ப்பங்களில் ஆண்களுடன் போர்க்களத்தில் வீராங்கனை களாகவும் பங்கேற்றனர். அத்துடன் சிகையலங்காரம் மேற்கொள்பவர்களாகவும் பெண்கள் விளங்கினர். உமர் (றழி), சிபா பின்த் அப்துல்லாஹ் என்ற பெண்ணை தலைநகரில் (மதீனாவில்) உள்ள சந்தையில் பரிசோதகராக நியமித்தார் என இப்னு ஹஜர் குறிப்பிட்டுள்ளார். கைலா உம்மு பனீஅஸ்மர் வணிகப் பெண்ணாக விளங்கினாள்.[4] ஜாபிர் (ரழி) அவர்களின் மாமி பற்றிய உதாரணம் பெண்கள் விவசாய பண்ணையில், அறுவடையில் ஈடுபட்டதை எடுத்துக்காட்டுகிறது. ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் தனது மாமி, விவகாரத்து செய்யப்பட்ட நிலையில் தனது தோட்டத்திலிருந்த பழங்களை அறுவடைசெய்ய நாடினார். அப்போது ஒரு மனிதர் அவள் வீட்டை விட்டு வெளியேற வேண்டாமென அச்சுறுத்தினார். அப்போது அப்பெண் நபி (ஸல்) அவர்களிடம் இது பற்றி வினவினாள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் விவாகரத்து பெற்ற அப்பெண் வெளிச்சென்று பழங்களை திரட்டி எடுப்பதற்கு அனுமதித்தார்கள்.[5] அனைத்து பெண்களுக்கும் உழைக்க வேண்டிய தேவை இல்லாதிருக்கலாம். ஆனால், தொழில் நடவடிக்கைகளில் பெண்கள் ஈடுபடுவதை நபி (ஸல்) அவர்கள் தடுக்கவில்லை. மாற்றமாக பெண்களது வருமான வழிகளுக்கு தடையாக உள்ள காரணிகளை களைந்து நிதி நடவடிக்கைகளை நெறிப்படுத்தினார்கள்.

ஸஹ்ல் பின் ஸஹ்த் எனும் மற்றும் ஒரு நபித்தோழர் குறிப்பிடும் உதாரணம் ஒன்றில் ஸஹாபிய பெண் ஒருவர் மரக்கறிகள் பயிரிட்டு அவற்றிலிருந்து இனிப்பு உண்டித் தட்டொன்றை வெள்ளிக்கிழமைகளில் தயாரித்து வழங்கியதை குறிப்பிட்டுள்ளார்.[6] கீலா என்ற ஸஹாபியாவை மற்றும் ஒரு உதாரணமாக காணக்கிடைக்கிறது. வர்த்தக நடைமுறை சம்பந்தமாக பல்வேறு கேள்விகளைக் கேட்க நபி (ஸல்) அவர்களிடம் வந்திருந்தார். அப்போது அவர் கூறினார் ”நான் பொருட்களை கொள்வனவு செய்து

4 அல் இஸாபா, ஹஸன் அப்துல்லாஹ் அல்துராபி

5 ஸஹீஹ் முஸ்லிம் 2735

6 ஸஹீஹுல் புஹாரி 938

விற்பனை செய்யும் ஒரு பெண்"[7] உமர் (ரழி) அவர்களின் கிலாபத்தின் போது அஸ்மா பின்த் மஹ்ஸூமா என்ற பெண் யெமனிலிருந்த தமது மகன் அப்துல்லாஹ் இப்னு ரபிஆ மூலம் வாசனைத் திரவியங்களைப் பெற்று விற்பனை செய்யும் வழக்கமுடையவராக இருந்தார்.[8]

இறை விசுவாசியான பெண்கள் தங்கள் வீடுகளிலேயே தங்கியிருக்கட்டும் என்று கூறும் வசனத்தை அடிப்படையாகக் கொண்டு சிலர், பெண்களை வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்காமல் கூடிய கட்டுப்பாட்டை பிரயோகிக்கின்றனர். இவ்வசனம் இறக்கப்பட்ட சூழ்நிலையை கவனத்தில் கொள்ளாது மிகவும் இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். நபி (ஸல்) அவர்களின் மனைவி வெளியில் சென்ற வேளை உமர் றழி மேற்சொன்ன வசனத்தை சுட்டிக்காட்டிய போது நபி அவர்கள், தேவை இருக்கும் போது அதனை நிறைவேற்ற வெளியில் செல்ல அனுமதி உண்டு என்றமை கவனிக்கப்படல் வேண்டும். எனவே இத்தகைய வரலாற்றுப் பின்னணியை விளங்கிக் கொண்டு பெண்கள் இன்றைய காலத்தில் தொழில் செய்வதனை நோக்குவோம்.

## தொழில் துறைகளில் முஸ்லிம் பெண்கள்: தற்கால நோக்கு

கலாநிதி செய்பா ஷேரிஸ் ஷாம்லி கூறுகையில், இஸ்லாம் வேலை செய்வதற்கான உரிமையை பெண்ணுக்கு வழங்குகின்றது. சொத்துக்களை வைத்துக்கொள்வதற்கான உரிமையினைப் பெண்ணுக்கு வழங்கியுள்ளது. பெண்கள் மருத்துவம், கற்பித்தல், சிவில் மற்றும் நிதித்துறை என்பனவற்றில் வேலை செய்யலாம். இந்த உரிமை திருமணத்தின் முன்னரும் பின்னரும் இவ்வாறே உள்ளது என்கிறார்.[9]

இன்றைய கால கட்டத்தில் உலகெங்கும் முஸ்லிம் பெண்கள் சகல துறைகளிலும் பங்கேற்கின்றனர். இராணுவ வீராங்கனை களாக, பொலிஸ் உத்தியோகத்தர்களாக, நீதிபதிகளாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக, முகாமையாளர்களாக, கட்டடக்கலை நிபுணர்களாக, விமான ஓட்டுனர்களாக, வைத்தியர்களாக, தாதிகளாக, ஆராய்ச்சியாளர்களாக, பௌதிகவியலாளர்களாக, ஆசிரியைகளாக என்று இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. முஸ்லிம் பெண்கள் கைத்தொழில், விவசாயம், வர்த்தகம்,

7 இப்னு ஸஅத், தபக்காத் இப்னு ஸஅத் பாகம் 8,ப.228
8 இப்னு ஸஅத், தபக்காத் இப்னு ஸஅத் பாகம் 8,ப.220
9 Zieba Shorish Shamly, Women's position, Role and Rights in Islam

அரச, தனியார் உத்தியோகம் என எல்லா உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்தும், உழைப்பதன் மூலம் தனக்கும், தனது குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் பங்களிக்க முடியும். நிதித் தேவையுடையோர் உழைத்து தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பலமும் ஆற்றலுமிருந்து தாம் சுய முயற்சிகளை மேற்கொள்ளாமல் சமூக உதவிகளை எதிர்பார்த்திருப்பது இஸ்லாம் அனுமதித்த வழிமுறையல்ல.

ஆண்கள் மட்டுமன்றி முஸ்லிமான பெண்களும் அனுமதிக்கப்பட்ட முறையில் பணம் சம்பாதிக்க அனுமதி உண்டு. பெண்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். அவ்வாறே தமக்குக் கிடைக்கப் பெற வேண்டிய சொத்துப் பங்குகளை உடமையாக்க உரிமையுண்டு. பெண்கள் இஸ்லாமிய ஒப்பந்தச் சட்டத்தின் விதிகளுக்கமைய சட்டபூர்வமான ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம். வர்த்தக ஒப்பந்தங்கள் ஊடாக உழைக்கும் பங்காளியாக அல்லது உறங்கும் பங்காளியாக செயற்படலாம். தனது நன்மதிப்பு, புலமைச் சொத்து என்பவற்றினூடாகவும் கூட்டு வர்த்தக முயற்சிகளில் ஈடுபடலாம். தமது உடமையாக உள்ள சொத்துகளை, ஆதனங்களை இலாபமீட்டித் தரும் விதத்தில் நிர்வகிக்கலாம். இவையெல்லாம் பெண்களுக்கு இஸ்லாம் உறுதிப்படுத்திய உரிமைகள் ஆகும்.

ஆனால் எமது நாட்டு நிலவரங்களை நோக்கினால் முஸ்லிம் பெண்கள் தொழில் புரிவது பற்றிய ஒரு தெளிவின்மை காணப்படுகின்றது. குடும்பத்தைப் பராமரிக்கும் பொறுப்பை இஸ்லாம் ஆணிடம் கையளித்துள்ளது. இதனால் பெண் வேலைக்குச் செல்ல அனுமதி இல்லை என்ற பிழையான வாதம் முன்வைக்கப்படுகின்றது. ஒரு பெண் வேலைக்குச் செல்வதும் செல்லாமலிருப்பதும் அப்பெண்ணைப் பொறுத்த விடயம். ஆனால் இஸ்லாத்தில் பெண் தொழில் செய்ய இடமில்லை என்பது முற்றிலும் தவறான கருத்தாகும்.

இது மட்டுமன்றி பெண்கள் படிக்கத் தேவையில்லை என்னும் ஆதிகாலத்து அறியாமை இன்னும் எம் சமூகத்துள் புரையோடிப் போயுள்ளது. இதனால் எத்தனை எத்தனையோ பெண்களின் கல்விக்கான உரிமை பறிக்கப்படுகின்றது. இதன் விளைவாக சமூகத்தளத்தில் மட்டுமன்றி போட்டி மிக்க தொழில் துறையிலும் எமது பெண்கள் பின்தங்க வேண்டியும் ஏற்படுகின்றது. பெண்களை மருத்துவப் பரிசோதனைகளுக்கு அழைத்துச் செல்லும் போது முஸ்லிம்

பெண் மருத்துவர்களைத் தேடுகிறவர்கள் அவர்களை உருவாக்குவது பற்றி சிந்திப்பது அதனை சாத்தியப்படுத்த முயற்சிப்பது குறைவு. பெண் பிள்ளைகளுக்கு கற்பிப்பதற்கு பொருத்தமான பாதுகாப்பான சூழலை விரும்புகிறவர்கள் அவ்வாறான தொழில் முயற்சிகளை முன்னெடுத்து நடத்தக் கூடிய தகைமை உடையவர்களை உற்சாகப்படுத்துவது போதியதாக இல்லை. ஒவ்வொரு பெண்ணினதும் இயல்பிற்கேற்ப அவர்கள் தமக்குரிய தொழில்களை தெரிவு செய்து பங்களிப்பு நல்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

இன்றைய காலத் தேவைகளை எடுத்து நோக்கும் பொழுது கணவனின் வருமானத்தில் மட்டும் குடும்பத்தைக் கொண்டு நடத்துவது என்பது எல்லோருக்கும் சாத்தியமானதாக இல்லை. இந்த சந்தர்ப்பத்தில் தமது பங்களிப்பினையும் செய்யும் எத்தனையோ பெண்களும் இருக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் திருமணமாகாத எத்தனையோ பெண்கள் தமது வருமானத்தின் மூலம் வயதான பெற்றோரை பராமரித்து வருகின்றனர். கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட ஆயிரக்கணக்கான பெண்கள் தம் குடும்பங்களை தாமே பராமரித்து வருகின்றனர்.

நெறிப்படுத்தப்படாத எமது பலதார மணத்தின் விளைவாக எத்தனையோ குடும்பத் தலைவிகள் தன்னையும், பிள்ளைகளையும் பராமரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இத்தகைய யதார்த்த நிலைமைகளில் எல்லாம் பெண்கள் வேலைக்குச் செல்ல இஸ்லாத்தில் அனுமதி இல்லை என்று கூறுவோர் என்ன தீர்வுகளை முன்வைக்கப் போகின்றனர்?எந்தவொரு சூழ்நிலையும் எதிர்கொள்ளக் கூடிய விதத்தில் எமது முஸ்லிம் பெண்களுக்கு அறிவூட்டப்படுதலும், விழிப்புணர்வூட்டப்படுதலும் இன்றியமையாததாகும்.

## முடிவுரை

தொழில் புரிபவர்களுக்கு இஸ்லாம் வரையறுத்துள்ள ஒழுக்க விழுமியங்கள் ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானவை. சில தொழில்கள் தடுக்கப்பட்டவை எனின் அது ஆண் பெண் இருபாலாருக்குமே தடுக்கப்பட்டவையாக இருக்கின்றன. பெண்கள் ஆண்களுக்கும், ஆண்கள் பெண்களுக்கும் அந்தரங்க காரியதரிசியாய் இருத்தல், மதுபானசாலைகளில் வேலை செய்தல் போன்றன பொதுவாக

ஆணாயினும் பெண்ணாயினும் தடுக்கப்பட்டவையாக இருக்கின்றன. ஆனால் இஸ்லாமிய அடிப்படையில் இந்தத் தடைகள் ஆண்களுக்கும் உண்டு என்பது கவனிக்கப்படுவதில்லை.

அகார் முஹம்மத் அவர்கள் தனது மதிப்பீட்டை பின்வருமாறு முன்வைக்கிறார். மனித இனத்தின் ஒரு பாதி ஆண்கள் என்றால் மறு பாதி பெண்களாவர். இந்த வகையில் எந்தவொரு சமூகத்தினரும் சரிபாதியாக, சமபாதியாக இருப்பவர்கள் பெண்கள் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. இந்த யதார்த்தத்தை வைத்து நோக்கும் போது பெண்களின் பங்கேற்பும், பங்களிப்பும் பெறப்படாத நிலையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சமூக மேம்பாட்டுப் பணியும் நிறைவானதாக அமையாது. மாறாக அது அரைகுறையானதாகவே இருக்கும்.

இலங்கையைப் பொறுத்தளவில் எந்தவொரு சமூகப் பணியிலும் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. நமது சமூகத்தில் பெண்கள் என்றும் பார்வையாளர்களாகவே இருந்து வருகின்றனர். சமூகத்தை கட்டி எழுப்பும் பணியில் இவர்கள் பங்காளிகளாக இல்லை. இந்நிலை காரணமாக எமது பணிகளின் விளைவுகள் சாணேறி முழமிறங்கும் கதையாகவே தொடர்கின்றன.[10]

தொழில்துறை நடவடிக்கைகளில் ஹலால், ஹராம் சட்ட விதிகளைப் பேணல், சமூக நல நோக்கம், நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல் என்ற அடிப்படைகளை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். ஆண்களால் மட்டும் சமூக உருவாக்கம் பூரணத்துவம் பெறாது. எனவே சமூக துறையில் சமபலமுள்ள விதத்தில் சமூக அங்கத்தவர்களது பங்களிப்பு அவசியமாகும்.

இதற்கமைய இறைவனின் பிரதிநிதியென்ற வகையில் ஆண் பெண் என்ற வேறுபாடின்றி மனித சமூகத்தின் அபிவிருத்தி, உச்ச வளப்பயன்பாடு என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் உழைப்பது அனைவரதும் தார்மீகக் கடமையாகும். தமது தகைமைக்கு ஏற்ப பங்களிப்பதன் மூலம் சமூகத்தின் உயிரோட்டமுள்ள ஓர் அங்கமாக பெண்களும் செயற்பட முடியும். செயற்பட வேண்டும்.

10 A.C. Agar Mohammad, 2011, Introductory Remarks, Thoovanam Sinthanai Katturaith thokuthi, Colombo

# அத்தியாயம் 07.3

இஸ்லாத்தில் பெண்களின் கல்வி மற்றும் பொருளாதார சமத்துவம்

## இஸ்லாத்தில் பெண்ணுக்குள்ள பொருளாதார உரிமைகள்

அஷ்ஷெய்க் அப்துல் சலாம் ஜாபிர் (நளீமி)

"இஸ்லாத்தின் மிகச் சிறந்த நன்மை, அது சுதந்திரமான பொருளாதார நிலையை பெண்ணுக்கு வழங்கியதாகும்."[1]

இஸ்லாம் ஒரு பெண் பல்வேறு வழிகளில் வருமானத்தினை அல்லது சொத்துக்களை உடமையாக்கிக் கொள்ளும் உரிமையினை வழங்கியுள்ளது. அவற்றை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

1. பராமரிப்புக்கான உரிமை
2. வருமானத்தைத் தானே வைத்திருப்பதற்கான உரிமை
3. வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கான உரிமை
4. ஹிபத் எனும் அன்பளிப்புக்கான உரிமை
5. மஹர் எனும் திருமணக் கொடைக்கான உரிமை
6. விவாகரத்தின் போதான பராமரிப்பைப் பெறும் உரிமை (மதாஃ)
7. வாரிசுரிமை

மேற் கூறப்பட்ட உரிமைகளினை சற்று விரிவாக நோக்குவோம் எனில்,

1 Mohamed Safarullah Khan, Women in Islam, p.23

## 01. பராமரிப்புக்கான உரிமை

திருமணத்திற்கு முன்னர் பெண் மக்களைப் பராமரிப்பது தகப்பன் மீதும் ஆண் சகோதரர்கள் மீதும் கடமையாகும். திருமணத்தின் பின்னர் இப்பொறுப்பு கணவனைச் சாரும். இது ஆண்களின் மீதான கட்டாயக் கடமையாக காணப்படும் அதே சமயம் பெண்களின் உரிமையாகக் காணப்படுகின்றது.

## 02. வருமானத்தைத் தானே வைத்திருப்பதற்கான உரிமை

எந்தவொரு பெண்ணுக்கும் தனது வருமானத்திலிருந்து குடும்பத்தின் பேரில் செலவழிக்க கடப்பாடு இல்லை. ஆயினும் விருப்பத்தின் பேரிலும் பரஸ்பர புரிந்துணர்வின் பேரிலும் பெண் செலவழிக்க முடியும். மேலும் தனது தொழில் மூலமாகவோ அல்லது சொத்துக்கள் மூலமோ ஈட்டும் வருமானத்தை தனது பெயரிலேயே வைத்துக் கொள்ளக் கூடிய உரிமையையும் இஸ்லாம் பெண்ணுக்களித்துள்ளது.

## 03. வருமானமொன்றை ஈட்டிக் கொள்வதற்கான உரிமை

ஒரு முஸ்லிம் பெண்ணைப் பொறுத்தவரையில் அவளைப் பராமரிக்கும் பொறுப்பு தந்தையையும், சகோதரர்களையும், கணவனையும் சாரும். எனவே, அவள் தொழில் செய்யக்கூடாது, தொழில் செய்வது தடை செய்யப்பட்டது என்ற தவறான கருத்துப்போக்குகள் காணப்படுகின்றன. பெண்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளமைக்கு அல்குர்ஆனிலும் நபி மொழிகளிலும் ஏராளமான சான்றுகள் உள்ளன. இது பற்றி இஸ்லாத்தில் பெண் தொழில் புரிவதற்கான உரிமை என்னும் தலைப்பின் கீழ் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

## 04. ஹிபத் எனும் அன்பளிப்பு

ஒரு முஸ்லிம் பெண் தனது தாய் தந்தையரின் சொத்துக்களை அவர்கள் உயிருடன் உள்ள காலப்பகுதியிலேயே அன்பளிப்பாக பெற்றுக்கொள்ளும் உரிமை உடையவள்.

*இது ஹிபத் என அழைக்கப்படும். ஸஃத் பின் அபீ வக்காஸ் (ரழி) அவர்கள் தமது முழுச்சொத்தையும் அல்லாஹ்வின் பாதையில் செலவிட முயன்றபோது நபி (ஸல்) அவர்கள் 1/3 பங்கை மாத்திரம் பெற்றுக்கொண்டு மிகுதியை உமது பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடும் (இரு மகள்மாருக்கு) என பதில் அளித்தார்கள். இவையாவும் ஆணைப் போலவே பெண்ணும் பெற்றோரிடம் இருந்து சொத்துக்களை அன்பளிப்பாக பெறும் சம உரிமையை பெற்றிருக்கிறாள் என்பதைக் காட்டுகின்றன.*

## 05. மஹர் எனும் திருமணக் கொடைக்கான உரிமை

*மஹர் என்பது திருமணத்தின் போது மணமகனால் மணமகளுக்கு வழங்கப்படுகின்ற திருமணக் கொடையைக் குறிக்கும். இஸ்லாமிய சட்டமானது மஹரின் உயர்ந்த தொகையையோ, மிகக் குறைந்த தொகையையோ வரையறை செய்யவில்லை. இதனைத் தீர்மானிக்கும் உரிமை மணமகளுக்கே உண்டு. மஹரை பெண் செலவிடும் உரிமையில் கூட யாரும் தலையிட முடியாது. மஹரை செலவளிப்பதோ, அல்லது சொத்தாக வைத்திருப்பதோ மணமகளைப் பொறுத்ததே. மஹரை செலுத்தியது கணவனாக இருந்தாலும் கூட மனைவி விரும்பித் தந்தால் மட்டுமே கணவன் அதனைப் பயன்படுத்த முடியும்.*

## 06. விவாகரத்தின் போதான பராமரிப்பைப் பெறும் உரிமை (மதாஃ)

*கணவன் மனைவியை தலாக்கூறி விடுவித்துக் கொள்ளும் போது வழங்கும் அன்பளிப்பு மதாஃ என்றும் அழைக்கப்படும். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு கட்டளையிடுகின்றது.*

> "மனைவியை தலாக் கூறி விவாகரத்து செய்கையில் அன்பளிப்பாக எதையேனும் (மதா∴) கொடுப்பது தக்வாதாரிகளின் மீது கடமையாகும்."[2]

*ஸஹாபாக்களில் ஒருவர் தலாக்கூறிய தனது மனைவிக்கு ஒரு அடிமையையும் மற்றொருவர் ஒரு தொகை வெள்ளி நாணயங்களையும் இன்னுமொருவர் சில உடுதுணிகளையும் <u>ஹஸன்</u> பின் அலி (ரழி) 10,000 திர்ஹங்களையும்*

2 *அல்குர்ஆன் 2:240*

*வழங்கியுள்ளனர்.*[3] *மதாஃ என்ற பராமரிப்புத் தொகை கணவனின் தகுதியைப் பொறுத்து காதி நீதிபதியால் தீர்மானிக்கப்படும். அல்குர்ஆன் அதனையே வலியுறுத்தி யுள்ளது.*

> "வசதி படைத்தவர் தனது தகுதிக்கு ஏற்பவும், ஏழை தனது தகுதிக்கு ஏற்பவும் நியாயமான முறையில் (அவர்களுக்குக் கொடுத்து) பயனடையச் செய்ய வேண்டியது நல்லவர்களின் மீது கடமையாகும்."[4]

*மலேசியா, எகிப்து, ஜோர்தான், புரூனை, மொரோகோ, சிரியா போன்ற இஸ்லாமிய நாடுகளில் நியாயமின்றி தலாக் கூறும் போது மதாஃ அவசியம் வழங்க வேண்டும் என்ற சட்டத்தை இயற்றியுள்ளனர். எகிப்தில் நியாயமின்றி தலாக் கூறினால் இத்தா தாபரிப்புடன் சேர்த்து இரண்டு வருடங்களுக்கு வழங்கும் தாபரிப்புக்குச் சமனான ஒரு தொகையை மதாஃவாக வழங்க வேண்டும் என சட்டம் இயற்றப்பட்டுள்ளது.*[5] *ஒரு பெண் கர்ப்பிணியான நிலையில் தலாக் பெற்றால் பிரசவம் வரையும், பின்பு குழந்தைக்குப் பாலூட்டினால் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு தாய்க்கும் சேய்க்கும் உணவு, உடை, உறையுள், மருத்துவ செலவுகளை அக்கணவனே வழங்க வேண்டும்.*[6]

## 07. வாரிசுரிமை

*தாய் தந்தை நெருங்கிய உறவினர் விட்டுச் செல்கின்ற சொத்தில் பங்குபெறும் உரிமை பெண்களுக்குண்டு.*

> "பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற (சொத்தில்)தில் ஆண்களுக்கு பாகமுண்டு. அவ்வாறே பெற்றோரோ நெருங்கிய உறவினரோ விட்டுச்சென்ற சொத்தில் பெண்களுக்கு பாகமுண்டு"[7]

*அதே சமயம் வாரிசுரிமை பங்கீட்டின் அளவினை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.*

> "உங்கள் சந்ததியில் ஒரு ஆணுக்கு இரு பெண்களுக்குரியது போன்ற பாகம் உண்டென்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசிக்கின்றான்..."[8]

---

3 *அமீன் எம்.ஐ.எம். (2008), இஸ்லாமிய குடும்ப வாழ்வு, ப.108*
4 *அல்குர்ஆன் 2:236*
5 *அமீன் எம்.ஐ.எம். இஸ்லாமிய குடும்ப வாழ்வு, 2008*
6 *அல்குர்ஆன் 2:233*
7 *அல்குர்ஆன் 4:07*
8 *அல்குர்ஆன 4: 11*

*இஸ்லாம் கட்டமைத்திருக்கும் குடும்ப முறையில், வாரிசுரிமையில் பெண் பெறுவதைவிட இரண்டு மடங்கு ஆண் பெறுகின்றான். இந்த பங்கீட்டு ஏற்ற இறக்கம் பற்றி பெண்ணை ஆணின் அரைவாசியாக இஸ்லாம் குறைத்துள்ளது எனப் பலர் விமர்சிப்பதுண்டு. ஆனால் இது ஆண் பெண்ணை விட உயர்ந்தவன் என்பதனால் வழங்கப்பட்ட பங்கீடு அல்ல. மாறாக இந்த விதி ஆணுக்கு வழங்கப்பட்டுள்ள பொருளாதார கடப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டதாகும்.*[9]

*கலாநிதி ஜமால் பதாவி மிக நுட்பமாக இதற்கு விளக்கம் தருகின்றார். "ஆண் தனக்குரிய பங்கில் மனைவி, மகள், தாய், மற்றும் சகோதரி ஆகியோருக்கு கொடுக்க வேண்டிய கட்டாய கடப்பாட்டில் உள்ளான். ஆனால் பெண் (மனைவி) தனது வாரிசுரிமைச் சொத்தை சேமிப்பாக வைத்துக்கொள்ளலாம். இதனை அவள் தன் கணவனுக்குச் செலவழிக்க வேண்டிய சட்ட ரீதியான கடப்பாடு இல்லை." அதாவது ஒரு மகளோ, தாயோ, சகோதரியோ தனக்குக் கிடைக்கும் பங்கை தன் விருப்பப்படி செலவழிக்கவோ, சேமிக்கவோ இஸ்லாம் அனுமதி வழங்குகின்றது.*

## நடைமுறைச் சிக்கல்கள்

*இஸ்லாத்தின் இந்த அடிப்படைகள் ஒருபுறமிருக்க நடை முறை விடயங்களையும் நாம் அவதானிக்க வேண்டியுள்ளது. என்னதான் குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு ஆணிடம் வழங்கப்பட்டிருக்கின்ற போதும் இன்றைய காலகட்டத்தில் பெண்களும் குடும்ப நிர்வாகத்தில் பாரிய பங்களிப்பினைச் செய்து வருவதனை யாரும் மறுக்க முடியாது. இவர்கள் தமது வருமானம் அனைத்தையும் குடும்ப நிர்வாகத்தில் செலவிடுகின்றனர். எமக்குத் தெரிந்து எந்தப் பெண்ணுமே தனது மொத்த வருமானத்தையும் சேமிப்பாக வைத்துக் கொண்டு கணவனின் வருமானத்தில் மட்டும் குடும்பம் நடத்துவதில்லை.*

*அதேசமயம் படித்த, திறமையான, தகுதியான பல பெண்களைத் தொழில் புரியக் கூடாது என்று இஸ்லாத்தின் பெயரில் தடுத்து வைக்கின்றனர். இது மிகவும் பிழையான நடைமுறையாகும். தொழிலுக்குச் செல்ல வேண்டுமா*

9 *இப்ராஹீம் அமீனீ*, Women's rights in Islam *(2006)*, *ப.90*

இல்லையா என்பனை தீர்மானிக்கும் உரிமையும் தெரிவும் பெண்ணுக்கு வழங்கப்படல் வேண்டும். மஹர் தொகையை எடுத்துக் கொண்டாலும் பெயரளவிலேயே ஒரு சடங்காக இது காணப்படுகின்றதே தவிர பெரும் பான்மையான பெண்கள் இத்தொகையினைப் பெறுவதே இல்லை. இன்னும் திருமணத்தின் போது பெண்ணுக்கு வழங்கப்படும் சொத்துக்களை நிர்வகிக்கவோ, வருமானம் ஈட்டவோ அப்பெண்ணுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை. இதனால் குடும்பத்துக்கான பராமரிப்பைச் செய்யாத ஒரு கணவன் இருக்குமிடத்து, ஒரு பெண் தனது சொத்துக்களைக் கொண்டேனும் வருமானம் ஈட்டுவதிலிருந்தும் தடுக்கப்படுகின்றாள்.

எமது நாட்டில் நியாயமின்றி எத்தனையோ தலாக் முறையில் விவாகரத்துக்கள் இடம் பெறுகின்றன. இந்த நடவடிக்கைகளின் போது அநேக சந்தர்ப்பங்களில் விவாகரத்தின் போதான பராமரிப்பினை எந்தக் கணவனும் மிகச் சுலபமாக வழங்கி விடுவதில்லை. அதே போன்று இஸ்லாத்தில் அனுமதி இருந்தும் எமது நாட்டில் மதாஃ எனும் பராமரிப்பு சட்டரீதியாக வழங்கப்படாத காரணத்தினால் எமது சமூகத்தில் பெண்களும் பிள்ளைகளும் ஒழுங்கான பராமரிப்பின்றி பாதிக்கப்படுகின்றமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய பிரச்சினையாகும்.

வாரிசுரிமையினை எடுத்துக் கொண்டாலும் ஆணுக்கு வழங்கப்பட்டுள்ள பொருளாதார கடப்பாட்டை மையமாகக் கொண்டே பெண்ணை விட இரண்டு மடங்கு ஆணுக்கு வழங்கப்படல் வேண்டும் என்பது நியாயப்படுத்தப்பட்டது. ஆனால் 1500 ஆண்டுகளுக்கு முன்பிருந்த குடும்ப அமைப்புகள் இன்று பெரிதும் மாறுபட்டுள்ளன.

இன்றைய நடைமுறையில் எத்தனை ஆண்கள் தமது கடப்பாட்டைச் செய்து தனியே குடும்பத்தை சரிவர கவனிக்கிறார்கள்? எத்தனை பெண்கள் இந்த பொருளாதார சுமையைப் பகிர்ந்து கொள்கிறார்கள், தனது வயதான பெற்றோரை பராமரிக்கும் ஆண்கள் எத்தனைபேர் பெண்கள் எத்தனைபேர் என்பதனை அவதானிக்கும் பொழுது ஆணுக்குச் சமனாக பெண்ணும் பொருளாதார பங்களிப்பைச்

செய்கின்றாள் என்பதனை விளங்க முடியும். இந்த அடிப்படையில் வாரிசுரிமை என்பதனை ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாக பிரித்தளிக்கப்படல் வேண்டும் என்பது தற்காலத்தின் இஸ்லாமிய அறிஞர்களின் வாதமாக உள்ளது.

இஸ்லாம் பெண்களுக்கான பொருளாதார உரிமைகளை விதம் விதமாக வழங்கியுள்ளது என்பது என்னவோ விதிகளின் அடிப்படையில் உண்மையாக இருந்தாலும் அவற்றை பெண்களுக்கு வழங்காமல், அவர்களை அனுபவிக்க விடாமல் எமது சமூகமே பெண்களை மிக மோசமாக நடாத்துவது மிகவும் கண்டிக்கத்தக்கது. வெறும் வாய்வார்த்தைகளாக இஸ்லாமிய போதனைகள் இல்லாமல் அவற்றினை நடைமுறைச் சாத்தியமாக்குவது பெண்களினதும் எமது சமூகத்தினதும் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும்.

# அத்தியாயம் 08

# இஸ்லாத்தின் வருகைக்கு முன் அரேபியாவில் பெண்களின் நிலை

அஷ்ஷெய்க். வை. சியாத் (நளீமி)

## அறிமுகம்

> "..அறியாமைக் காலத்தில் நாங்கள் பெண்களை ஒரு பொருட்டாகவே மதித்ததில்லை. இஸ்லாம் வந்ததன் பின்னர், அல்லாஹ் பெண்களைக் குறித்து (அவர்களின் உரிமைகளையும் கடமைகளையும் பேணுமாறு தன்னுடைய வேதத்தில்) குறிப்பிட்ட போதுதான் பெண்களுக்கு எங்களின் மீதுள்ள உரிமையை அறிந்து கொண்டோம்.." - உமர் (ரழி)[1]

*இஸ்லாத்தின் பால்நிலை சமத்துவம் பற்றிய கருத்தியலைத் தெளிவாகப் புரிந்து கொள்வற்கு, அறியாமைக் காலம் (இஸ்லாத்துக்கு முற்பட்ட அரேபியக்காலம்) பற்றிய புரிதல் மிகவும் முக்கியமானதாகும். அக்காலத்தில் பெண்களின் வாழ்தலுக்கான உரிமை, குடும்பவியல் உரிமைகள், சமூக அந்தஸ்து, அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள் எவ்வாறு இருந்தன என்பதை அறிந்து கொள்வதன் மூலம் இஸ்லாம் அவற்றை எவ்வாறு மாற்றீடு செய்தது என அறியலாம்.*

### அ. அரேபியா - சுருக்கஅறிமுகம்

*அரேபியா ஒரு பாலை நிலமாகும். பாலை நிலத்தின் இடையிடையே காணப்பட்ட பசுந்தரைகளில் மாத்திரமே மக்கள் வாழ்ந்தனர். இவர்கள் சுதந்திரமானவர்களாகவும்*

1 *ஸஹீஹுல் புகாரி, 5843*

கட்டுப்பாடற்றவர்களாகவும் இருந்தனர்.[2] இவர்களிடையே கோத்திர உணர்வு வலுவடைந்திருந்தது. இக்காலத்தில் பெண்கள் எந்தவிதமான சமூக அந்தஸ்தினையும் பெற்றிருக்கவில்லை.

## ஆ. பெண்களின் சமூகநிலை

பெண்களை மனித இனத்திற்கும் மிருக ஜாதிக்கும் இடைப்பட்ட ஒரு பிறப்பாகவே கருதியதோடு, ஆண்கள் பெண்களை அவர்களின் வேலைக்காரிகளாக அல்லது கைதிகளாகவே கருதினர். அக்காலத்தில் ஆண் குழந்தைகள் பிறப்பதைக் கௌரவமாகக் கருதினர்.[3] பெண் குழந்தைகளை உயிருடன் சிறுவயதிலேயே புதைப்பது அரேபியா எங்கும் பரவலாகக் காணப்பட்டது. "மகளை விவாகம் முடித்துக் கொடுத்து அனுப்புவது அன்புக்குரிய செயலாயினும் புதைத்து விடுவது கண்ணியத்திற்குரிய செயலாகக் கருதப்பட்டது"[4] நபித் தோழர்கள் சிலர் கூட தாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் சிசுக்கொலையில் ஈடுபட்டனர்.[5]

பொதுவாக சிறுவயதிலேயே திருமணம் முடிப்பது அக்கால வழக்கமாக இருந்தது.[6] திருமணத்தின் போது, பெண்ணின் நலன், அவளது விருப்புநிலை, அவளது உணர்வுகள் என்பன சற்றும் மதிக்கப்படவில்லை. திருமணத்தை ஏற்கவோ அல்லது மறுக்கவோ முடியுமான உரிமை கோத்திரங்களுக்கே இருந்தது.[7] பெண்களுக்கு ஏற்ற துணைவர்கள் கிடைக்காத போது அவர்கள் திருமணம் முடிக்காமலேயே விடப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர்.[8]

அரேபியாவில் திருமணமுறைகள் பல வழக்கிலிருந்தன. ஒருவர் மற்றொருவரின் பொறுப்பிலுள்ள பெண்ணையோ அல்லது மகளையோ பெண் பேசி விவாகக்கொடை கொடுத்து (மஹர்) மணந்து கொள்ளல் (நிகாஹுஸ் ஸஹீஹ்)[9], வெளிதேசத்தில் இருக்கும் ஓர் ஆணுக்கு தற்காலிக

---

2 ஸஃபிய்யுர் ரஹ்மான் முபாரக்பூரி, (2009), அர்ரஹீக் அல்மக் தூம், தாருல் ஹுதா, ப.22.

3 அபுல் அலா மௌதூதி, தப்ஹீமுல் குர்ஆன், பாகிஸ்தான், 1987, பாகம் 16, ப.272

4 ஈ.எம்.அப்துல் றஹ்மான், (1985),அன்வாருல் குர்ஆன், இந்தியா, ப.57

5 அபுல் அலா மௌதூதி, (1987), தப்ஹீமுல் குர்ஆன், பாகிஸ்தான், பாகம் 5, ப.300. தப்ஸீர் இப்னு கஸீர், ஸஹீஹுல் புகாரி 3828

6 Al- Sabbagh, Layla, Al- mar'ahFil: Tarikh al Arab (Women in Arab History), p.137

7 Lebon, Gustave, Hadarat Al Arab

8 Smith, Robertson, Kinship and marriage in early Arabia, p.97

9 ஸஹீஹுல் புகாரி 5127

மனைவியைப் பெற்றுக் கொடுக்கும் திருமணமுறை (நிகாஹுல் முத்ஆ)[10], ஒருவனது தந்தை அல்லது சகோதரன் அல்லது மகன் மரணித்து ஒரு பெண் விதவையாக்கப் பட்டால் அந்த ஆணுடைய வாரிசு அப்பெண்ணை மணத்தல் (நிகாஹுல் முக்த்), மாற்றுத் திருமணம் (நிகாஹுஸ் சிஃகார்.)[11] குறித்த ஒரு நபருடன் உடலுறவு கொண்டு குழந்தை பெறும்படி கணவன் மனைவியை அனுப்பி வைத்தல் (நிகாஹுல் இஸ்திப்லாஉ)[12] என்பனவாகும்.

இவை தவிரவும் இரகசிய பாலியல் தொடர்புகள் (நிகாஹுல் முகாதினா/நிகாஹுல் கைதான் (Friendship marriage)[13], ஒரு பெண் பத்துப் பேருக்குக் குறைவான ஒரு குழுவினருடன் உறவு கொள்ளுதல் (நிகாஹுர் ரஹ்த்: ஒரு பெண் பல கணவர் (Polyandry)[14], பல ஆண் ஒரு பெண்ணுடன் உறவுகொள்ளுதல் (நிகாஹுல் ஜம்உ)[15], சுதந்திரமான அல்லது நிர்பந்தத்தின் பேரிலான பாலியல் தொழில்[16], ஒரு ஆண் பத்து அல்லது அதற்கு அதிகமான பெண்களை மணத்தல் (பலதாரமணம்)[17], இரு சகோதரிகளை ஒரே நேரத்தில் மணத்தல்[18] போன்றனவும் காணப்பட்டன.

திருமணத்தின் பின் உயர்குலப் பெண்ணான மனைவி அவளது கோத்திரத்தில் வசித்தால், கணவன் மனைவியை நல்ல முறையில் பராமரித்தான். அதே சமயம், மனைவி தாழ்ந்த, ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தவளாக இருக்கும் போது அவள் மிகக் கொடூரமான முறையிலே நடாத்தப்பட்டாள்.

ஜாஹிலிய்யக் கால திருமணங்களிலும் மஹர்த் தொகை ஆண் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்டாலும் அது பெண்ணுடைய பொறுப்பாளனுக்கே உரிமையாகும். மாறாக அது அப்பெண்ணுக்குரிய சொத்தாகக் கணிக்கப்படவில்லை.

10 Levy, Reuben, The Social structure in islam.p.115
11 ஸஹீஹுல் புகாரி 5112
12 ஸஹீஹுல் புகாரி 5127
13 அல்குர்ஆன் 04:25
14 ஸஹீஹுல் புகாரி 5127
15 ஸஹீஹுல் புகாரி 5127
16 அரேபியர் வாழ்வியல், இஸ்லாமிக் புக் ஹவுஸ், கொழும்பு, ப.25
17 ஜாமியுத் திர்மிதி 1043
18 அல்குர்ஆன் 04:22-23, அல்குர்ஆன் 4:22,
ஸஹீஹுல் புகாரி 5136, 5137, சஹீஹ் முஸ்லிம் 1419

விவாகரத்தைப் பொறுத்தவரை, கணவனுக்குக் கட்டுப்படாமை, பெண் குழந்தைகளை மட்டுமே பிரசவித்தல், ஏழ்மை, பெண்ணின் மீதான சந்தேகம், பெண்ணின் குடும்பத்தாரைப் பழிவாங்கல் போன்றவற்றிற்காக மிகச் சாதாரணமாக கணவன் மனைவியை விவாகரத்துச் செய்ய உரிமை பெற்றவனாக இருந்ததோடு, எத்தனை முறையும் மீண்டும் அவளை மீட்கக் கூடிய உரிமையையும் பெற்றிருந்தான். ஆக, விவாகரத்து என்பது பெரிய விடயமாகக் கருதப்படவில்லை. அதே நேரம், கணவனது மணக்கொடைகளை திருப்பிக் கொடுத்து விட்டு விவாகரத்துச் செய்து கொள்ள பெண்ணுக்கு உரிமை இருந்தது. இது மட்டுமே பெண்ணுக்கான உரிமையாகக் காணப்பட்டது.

## இ. பெண்களுக்கான சொத்தும் பொருளாதார அந்தஸ்தும்

வாரிசுரிமை என்பது அரேபியாவில் ஆண்களுடன் மட்டுமே தொடர்புபட்ட ஒன்றாகக் கருதப்பட்டது. பெண்களுக்கு வாரிசுரிமையில் எவ்விதப் பங்கும் கொடுக்கப்படவில்லை. எனினும் விதிவிலக்காக மக்காவில் வாழ்ந்த கதீஜா பின்த் குவைலித்[19], அபூ சுப்யானின் மனைவி ஹிந்த் பின்த் உத்பா, பின்த் அல் முஹல்ஹில் போன்ற சில உயர் குலப் பெண்கள் சொத்துரிமையோடு வாழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஒரு ஆண் ஒரு விதவையைத் திருமணம் செய்யும் போது ஏற்கனவே இறந்தவரால் வழங்கப்பட்ட மஹருடன் அவள் பெறும் வாரிசுச் சொத்தையும் அவன் தனதாக்கிக் கொண்டான்.

அன்றைய சமூகத்தில் பெண் என்பவள் ஆணைப் போல் சம அந்தஸ்து கொண்டவளாக மதிக்கப்படவில்லை. எனவே அவள் தனது கருத்துகளை விரும்பியபடி தெரிவிப்பதற்கான இடம் காணப்படவில்லை. விதிவிலக்காக அவள் கோத்திரத் தலைவரின் மனைவியாக அல்லது நெருங்கிய ஒருவராக இருக்கும் போது மட்டும் அப்பெண்ணின் கருத்துகள் அங்கீகாரம் பெற்றன.

19 இப்னு ஹிஸாம், சீறது இப்னு ஹிஸாம், பாகம் 01, ப.171

## ஈ. அரசியலும் பெண்களும்

அன்றைய சமூகம் சிறுசிறு கோத்திரங்களாகப் பிரிந்து காணப்பட்டது. ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒரு தலைவர் காணப்பட்டார். எனினும், எந்தவொரு பெண்ணும் ஒரு கோத்திரத்தின் தலைவியாக இருந்ததற்கான சான்றுகள் வரலாற்றில் காணக் கிடைக்கவில்லை. எனினும், கோத்திரத் தலைவரின் மனைவியாக, மகளாக அல்லது சகோதரியாக இருக்கும்போது காத்திரமான பங்களிப்பைச் செய்பவளாகக் காணப்பட்டாள்.

பெண்களின் இன்னொரு பங்களிப்பாக யுத்தங்களின்போது ஆண்களுடன் யுத்தங்களுக்குச் சென்று அவர்களை உற்சாகப்படுத்துவதோடு, அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் பானங்களை அளிப்பதில் உதவி செய்பவளாக இருந்ததோடு, காயங்களுக்குச் சிகிச்சையளிப்பவளாகவும் செயற்பட்டாள். இதன் போது கோத்திரங்களுக்கிடையிலான போர்களின் போது அதிகம் பாதிக்கப்படுபவளாக பெண் காணப்பட்டாள். யுத்தங் களின் போது எதிரிகள் அடுத்த கோத்திரத்தின் சொத்துகளை அபகரிப்பதை விட எதிரிகளின் பெண்களைச் சிறைப்பிடிப்பதை இலாபகரமாகக் கருதினர்.

### முடிவுரை

இஸ்லாத்தின் வருகைக்கு முன்னர் அரேபியாவில் பெண்களின் நிலைமை மிகவும் மோசமாகக் காணப்பட்டது. எத்தகைய உரிமைகளும் அற்றவர்களாக பெண்கள் நடத்தப்பட்டனர். இந்நிலைமையை ஆண்களைப் போன்று பெண்களும் அல்லாஹ்வின் பிரதிநிதிகளே என்று அல்குர்ஆன் நிலைமாற்றம் செய்தது. இதன் மூலம் பெண்களுக்கு உயிர்வாழும் உரிமை தொடக்கம் திருமணம், விவாகரத்து, சமூக வகிபாகம், கல்வி, சொத்துரிமை, என சகல துறைகளிலும் சமஉரிமை வழங்கியது.

# கட்டுரையாசிரியர்கள்

## அஷ்ஷெய்க் எம்.ரீ.எம். ரிஸ்வி (மஜீதி)

*கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கலைகலாசார பீடத்தின் இஸ்லாமியக் கற்கைகள் துறைத் தலைவராகவும் கடமையாற்றுகிறார். பொலன்னறுவை மஜீதியா அரபுக் கல்லூரியில் ஷரீஆ கல்வியைப் பயின்ற இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணி மற்றும் முதுதத்துவமாணி பட்டங்களையும் பெற்றுள்ளார்.*

## அஷ்ஷெய்க் ஏ.எஸ்.எம். ஜாபிர் (நளீமி)

*கிண்ணியா தாருல் உலூம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். பேருவளை ஜாமிஆ நளீமியாவில் ஷரீஆ கற்கையை பூர்த்தி செய்துள்ள இவர், பேராதனை பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய நாகரிகத் துறையில் முதுமாணி பட்டத்தையும் தேசிய கல்வி நிறுவகத்தினால் வழங்கப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.*

## அஷ்ஷெய்க் எம்.பி.எம். பிர்தௌஸ் (நளீமி)

*பேருவளை ஜாமிஆ நளீமியா கலாபீடத்தில் ஷரீஆ கல்வியைப் பெற்றுக்கொண்ட இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டப்படிப்பையும், இலங்கை நூலக விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியையும் பூர்த்தி செய்துள்ளார். அரசியல், தஃவா மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்டவர்.*

## அஷ்ஷெய்க் ஏ.எம். மிஹ்ழார் (நளீமி)

*பேருவளை ஜாமிஆ நளீமியா கலாபீடத்தில் ஷரீஆ கல்வியைப் பெற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தையும், சமய ஒப்பீட்டாய்வுத் துறையில் முதுமாணி மற்றும் முதுதத்துவமாணி பட்டங்களையும் பெற்றுள்ளார். இவர், தனியார் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகவும் கடமையாற்றுகிறார். தற்போது மருதானை ஸாஹிராக் கல்லூரியின் உப அதிபராகக் கடமையாற்றுகிறார்.*

## அஷ்ஷெய்க் வை. சியாத் (நளீமி)

*அநுராதபுரம், நேகமவை பிறப்பிடமாகக் கொண்ட இவர், பேருவளை ஜாமிஆ நளீமியா கலாபீடத்தில் ஷரீஆ கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ளதுடன் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியுமாவார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி கற்கையைத் தொடர்கின்றார்.*

## அஷ்ஷெய்க் எம்.பி. நௌபர் (முஅய்யிதி)

*தர்காநகர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியில் ஷரீஆ கல்வியைப் பூர்த்தி செய்த இவர் ஒரு பட்டதாரி. தற்சமயம் ஹொரவப்பொத்தானை பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றுகின்றார். ஹொரவப் பொத்தானை ரஷீதியா அரபுக் கல்லூரியின் தலைவராகவும் கடமையாற்றுகிறார்.*

## அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். நுஸ்ரி (நளீமி)

*பேருவளை ஜாமிஆ நளீமியா கலாபீடத்தில் ஷரீஆ கற்கை நெறியைப் பெற்றுக் கொண்ட இவர் ஒரு கலைப்பட்டதாரி. காத்தான்குடி பிஸ்மி இஸ்லாமியப் பாடசாலையின் பணிப்பாளராக கடமையாற்றும் இவர், இஸ்லாமியப் பிரசாரகராகவும், எழுத்தாள ராகவும் விளங்குகிறாரர். சிறுவர்களுக்கான இஸ்லாமியக் கதைகள் எனும் நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.*

## அஷ்ஷெய்க் எம். உபைதுல்லாஹ் (ஸலபி)

*பரகஹதெனிய தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யாவில் ஷரீஆ கற்கை நெறியைப் பூர்த்தி செய்த இவர், ஒரு வரலாற்றுத் துறைப் பட்டதாரி. டிப்ளோமா பூர்த்தி செய்த ஆசிரியர். ஹொரவப் பொத்தானை முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். இவர் தஃவா பணிகளிலும் ஈடுபாடு கொண்டவர்.*

### எம்.வை. மின்னதுல் சுஹீரா

*தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் விரிவுரையாளராகவும் உளவளத்துணையாளராகவும் சேவையினை ஆற்றி வருகின்றார். கிழக்கு மாகாணத்தில் பெண்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வுகளையும் பல்வேறு தலைப்புகளில் நடத்தி வருகிறார். சமூகவியல் கோட்பாடுகள் (2011), சமகால சமூக விவகாரங்கள் (2013), சமூகவியலின் அடிப்படைகள் (2014) ஆகிய தலைப்புகளில் மூன்று நூல்களை இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.*

### அல்-ஆலிம் ஷாதிபா பின்த் காசிம்

*தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அறபு மொழித்துறை விரிவுரையாளராகவும், ஒலுவில் ஸஹ்வா பெண்கள் அறபுக் கல்லூரியில் வருகை தரு பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமையாற்றி வருகின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அறபு, இஸ்லாமிய நாகரிகத்துறையில் முதுமாணி பட்டத்தைப் பெற்றுள்ளார்.*

### எம்.சி. ரஸ்மின்

*பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டதாரியாவார். அதே பல்கலைக்கழகத்தில் தொடர்பாடல் அபிவிருத்தியில் விஞ்ஞானமாணி பட்டத்தைப் பெற்றுள்ளார். சர்வதேச ஆய்வரங்குகளில் பதினைந்துக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ள இவர் ஊடகம், அபிவிருத்தி, இலக்கியம் ஆகிய துறைகளில் பன்னிரெண்டுக்கும் மேற்பட்ட நூல் களை எழுதி வெளியிட்டுள்ளார்.*

நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும், முஸ்லிம்களான பெண்களும், விசுவாசிகளான ஆண்களும், விசுவாசிகளான பெண்களும், அல்லாஹ்வுக்கு வழிபாடு செய்பவர்களான ஆண்களும், வழிபாடு செய்பவர்களான பெண்களும், உண்மையே கூறுபவர்களான ஆண்களும், உண்மையே கூறுபவர்களான பெண்களும், பொறுமையாளர்களான ஆண்களும், பொறுமையாளர்களான பெண்களும், உள்ளச்சத்தோடு அல்லாஹ்வை பயந்து நடக்கும் ஆண்களும், உள்ளச்சத்தோடு அல்லாஹ்வை பயந்து நடக்கும்பெண்களும், தானம் செய்பவர்களான ஆண்களும், தானம்செய்வர்களான பெண்களும், நோன்பு நோற்பவர்களான ஆண்களும், நோன்பு நோற்பவர்களான பெண்களும், தங்கள் வெட்கஸ்தலங்களை காத்துக் கொள்பவர்களான ஆண்களும், வெட்கஸ்தலங்களை காத்துக் கொள்பவர்களான பெண்களும், அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்பவர்களான ஆண்களும், அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்பவர்களான பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் தயார் செய்து வைத்துள்ளான்.

-அல்குர்ஆன் 33:35

SRI LANKA DEVELOPMENT
JOURNALIST FORUM
#429, 2/1, Nawala Road,
Rajagiriya, Sri Lanka.
Office : +94117209511/2877007
E-mail : info@ldjf.org
Web : www.ldjf.org

ISBN978-955-7765-02-0